www.tamilarangam.net

சரிநிகர்
'SARINIHAR'

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

உள்ளே:
நற்பிட்டிமுனை - "நினைவுகள் அழிவதில்லை" பக் - 8,9
தங்கத்துரை பதவி விலகுவாரா? பக் - 3

இதழ் 64 ஜன.26 - பெப்.08,1995 விலை 7.00

0 பாதை திறக்க மறுப்பு 0 படைகளை பலப்படுத்த முயற்சி

# பேச்சுவார்த்தையில் மந்தம்

# இராணுவத்தினர் முட்டுக்கட்டை?

**நான்காவது சுற்றுப்பேச்சுவார்த்தைக்காக கொழும்பிலிருந்து அரசாங்கப் பிரதிநிதிகள் எதிர்வரும் சனியன்று யாழ்ப்பாணம் செல்லவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ள போதும், எந்தவிதமான முன்னேற்றமுமின்றி முடிவடைந்த மூன்றாம் கட்டப் பேச்சுவார்த்தையின் பின் அதைத் தொடர்வதற்கு அரசு தரப்பில் எத்தகைய முடிவுகளும் எடுத்திருப்பதாகத் தெரியவில்லை என்று அரசுதரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஏற்கெனவே பூநகரி முகாமை மூடுவது தொடர்பாக புலிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் சாதகமான பதிலை இராணுவத்தரப்பில் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்றும், இராணுவத்தரப்பில் தொடர்ந்தும் படைகளை நகர்த்தும் வேலைகள் நடைபெற்று வருகின்றன என்றும், இதை ஏற்கெனவே புலிகள் சுட்டிக்காட்டியுள்ளார்கள் என்றும் வேறுசில செய்திகள் தெரிவிக்கின்றன.**

பூநகரி முகாமை திறப்பதற்கு தயங்கும் ஒரு அரசாங்கம், பேச்சுவார்த்தை வெற்றிபெறும் பட்சத்தில் எவ்வாறு கிழக்கிலுள்ள நூற்றுக்கணக்கான முகாம்களை மூட ஒப்புக்கொள்ளும் என்று புலிகள் தரப்பில் சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது. இதேவேளை பேச்சுவார்த்தையின் முன்னேற்றம் தொடர்பாக மக்களுக்கு விளக்கும் கூட்டத்தொடரினை தொடங்கியிருக்கும் புலிகள் அவற்றை இராணுவப் பாதுகாப்புப் பிரதேசங்களில் நடாத்த அனுமதி கோரிய போதும், இராணுவ தரப்பில் ஆட்சேபனையையடுத்து அரசு இதை ஏற்கவில்லை என்றும் தெரியவருகிறது.

எவ்வாறாயினும் படைதிரட்டல், முகாம்களைப் பலப்படுத்தல், ஒரு போர் நிலை ஏற்படும் பட்சத்தில் திரும்பவும் வடக்கை முற்றுகையிட வசயாக சகல ஒழுங்குகளையும் செய்தல் என்பவற்றில் இராணுவம் ஈடுபட்டிருப்பது தொடர்பாக கருத்து வெளியிட்ட தமிழ் அரசியல்வாதி ஒருவர் 'ஆரம்பத்தில் இருந்த நம்பிக்கையை தொடர்ந்து வைக்க முடியவில்லை' என்று அதிருப்தியுடன் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தை என்பது திறந்த மனதுடன், நாட்டின் யதார்த்த நிலைமைகளை புரிந்து கொண்டு செய்யப்பட வேண்டும் என்று சரிநிகர் ஏற்கெனவே சுட்டிக் காட்டியிருந்தது. ஆயினும் துரதிருஷ்ட வசமாக இன்னமும் அந்த நிலைமையை காண முடியவில்லை.

(அரசின் இராணுவ தயாரிப்புக்கள் பற்றிய விபரமான செய்திக் கட்டுரைக்கு பார்க்க - கடைசிப்பக்கம்.)

## யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதில் நாம் அக்கறையாக இருக்கிறோம்

-கரிகாலன்

'போர்நிறுத்தத்தை மீற மாட்டோம் என்று நிரூபிப்பதற்காக நாம் அவ்வளவு அக்கறைப்படவில்லை. ஆனால் இந்தத்தடவை இந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதில் நாம் அக்கறையாக இருக்கிறோம். எனவே விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்தை மீறுவார்கள் என்று நாம் நினைக்கவில்லை.''

மூன்றாம் கட்டப் பேச்சுவார்த்தைகாக யாழ் சென்றிருந்த பத்திரிகையாளர்களுடனான உரையாடலின் போது புலிகளின் உயர்மட்ட பேச்சாளர் திரு.கரிகாலன் இவ்வாறு குறிப்பிட்டார். கடந்த காலங்களில் இவ்வாறான போர் நிறுத்தங்கள் மீறப்பட்டிருந்ததைச் சுட்டிக்காட்டி இம்முறை புலிகள் எப்படி நடந்து கொள்வார்கள் என கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே கரிகாலன் இவ்வாறு குறிப்பிட்டார். அச்சந்திப்பின் போது முன்னைய யுத்த நிறுத்தங்களின் போது த.வி.புலிகள் பல அரசியல்வாதிகளை படுகொலை செய்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது என்றும், பல தமிழ்க்கட்சிகள் இத்தகைய யுத்த நிறுத்தங்களையிட்டு அஞ்சுகிறார்கள் என்றும், இது தொடர்பாக உங்கள் அபிப்பிராயம் என்ன என்றும் கேட்கப்பட்ட போதும் அக்கேள்விக்கு அவர் பதிலளிக்கவில்லை. யுத்த

→15

## தேசியக் கொடியில் மாற்றம்?

பொ.ஐ.மு. அரசாங்கத்தினால் இதுவரை காலம் தயாரிக்கப்பட்டு வந்த ''உத்தேச அரசியல்திட்டம்'' பூர்த்தியடையும் நிலையில் இருப்பதாகத் தெரியவருகிறது. மேற்படி உத்தேச அரசியல் அமைப்பில் தேசியக் கொடி, தேசியகீதம், தேசிய பூ, தேசிய பறவை போன்ற பல்வேறு தேசிய சின்னங்கள் மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. எனினும் அதற்குப் பதிலாக உத்தேசிக்கப்பட்டிருப்பவை எவை என்று இன்னும் பூரண முடிவுக்கு வரவில்லை என்றும் அவ்வட்டாரங்கள் கூறுகின்றன.

பல காலமாக மேற்படி சின்னங்கள் தொடர்பாக சிறுபான்மை மக்கள் மத்தியில் அதிருப்தி நிலவி வந்தன என்பது அறிந்ததே. குறிப்பாக தேசியக் கொடியில் நான்கு மூலைகளிலும் உள்ள 'அரசிலை' பௌத்தத்தை குறிப்பதாகவும் 'சிங்கம்' சிங்களஇனத்தைக் குறிப்பதாகவும் இருக்கின்றது. பல்லின சமூகங்கள் வாழ்ந்து வரும் இலங்கையில் அவ்வாறு குறிப்பிட்ட இனத்திற்கும், மதத்திற்கும் மட்டும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பதை சிறுபான்மை இனங்கள் தரப்பில் பல காலமாக சுட்டிக் காட்டப்பட்டு வருகின்றது.

இதுதவிர தேசிய கீதம் தமிழில் பாடப்படும் போது, இன்னமும் 'நமோ நமோ தாயே' என தமிழல்லாத 'நமோ' எனும் சொல் வந்து போகின்றது. அதுமட்டுமல்லாமல் இலங்கை என்று தமிழில் சொல்லாடுவது இல்லாமல் போய் ஸ்ரீலங்கா என்ற சிங்களச்சொல்லையே தமிழில் புகுத்தியதிலும் இந்த தேசிய கீதத்திற்கு பங்குண்டு. (பாடசாலை சிறார்களின் பாடப்புத்தகங்களின் ஊடாகவே இது ஆரம்பிக்கிறது)

எனவே, ''மக்களின் விமர்சனங்களுக்கு அமைய 'உத்தேச அரசியல் திட்டம்' முன்வைக்கப்படும்'' எனக்கூறும் அரசாங்கம் கடமைக்காக அல்லாமல் பொறுப்போடு மேற்படி கருத்துக்களையும் கவனத்தில் எடுக்க வேண்டும் எனப் பலர் எதிர்பார்க்கின்றனர்.

எப்படியிருந்த போதும் 'மாற்றத்தை செய்ய வேண்டும்' என முன்னேறியிருப்பது வரவேற்கத்தக்க ஒன்றே! என்றாலும் பல்லின, மத குழுமங்கள் வாழும் இலங்கையில் அரசியலமைப்பு ரீதியாக 'மத சார்பற்ற அரசு' என்பது பிரகடனப் படுத்தப்படும் போது மட்டுமே இனங்களுக்கிடையேயான ஐக்கியம் வலுப்பெறும் சாத்தியம்

→15

## மீன் பிடிக்க வெடிகுண்டு

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் உத்தியோக பூர்வ வாசஸ்தலமாக இயங்கிவரும் அலரிமாளிகையில் வைத்து வெடிமருந்து கண்டு பிடிக்கப்பட்டது புலத்த சர்ச்சைகளை உருவாக்கியுள்ளது.

வெடிமருந்து அலரிமாளிகைக்கு கொண்டு வரப்பட்டது எவ்வாறு என்ற கேள்வி ஒருபுறமிருக்க, இது முதலில் அறிவிக்கப்பட்டது போல 2கிலோவா அல்லது பிறகு ராய்டர் தெரிவித்துள்ளது போல 500 கிராமா என்பது இன்னமும் வெளிப்படவில்லை. கண்டுபிடிக்கப்பட்ட வெடிமருந்தில் பாதியளவு (1கிலோ), முழு அலரிமாளிகையையுமே தகர்க்க போதுமானதென ஒரு வெடிமருந்து நிபுணர் கூறியதாக ஆங்கிலப் பத்திரிகையொன்று தகவல் வெளியிட்டிருந்தது.

இவ்வெடிமருந்து; புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஒன்றாக இருக்கலாம். சில இராணுவ வீரர்கள் இவற்றை ஞாபகார்த்தமாக வைத்திருப்பதுண்டு என்றும், மீன் பிடிக்க வைத்திருந்த வெடிமருந்தாக இருக்கலாம் என்றும் சில இராணுவ அதிகாரிகள் அபிப்பிராயம் தெரிவித்ததாக தகவல்கள் கூறுகின்றன.

இராணுவ அதிகாரிகளுக்கு நகைச்சுவை உணர்வு இருப்பது குறித்து யாரும் எதிர்ப்பு தெரிவிக்க முடியாது. ஆனால், தப்பித்தவறி குண்டு வெடித்துவிட்டால் அதற்குப் பிறகும் அது ஞாபகத்திற்காக வைத்திருந்தது அல்லது மீன்பிடிக்க வைத்திருந்தது என்று அவர்கள் சொல்ல வேண்டும். அப்போது தான் அந்த நகைச்சுவை உணர்வு நேர்மையான உணர்வாக இருக்கும்.


*அதுசரி, மீன்பிடிப்பவர்களையும், நாடகசாலை நடத்தவேண்டியவர்களையும் வைத்துக் கொண்டு ஜனாதிபதி எப்படித்தான் காலம் தள்ளப் போகிறாரோ?*

www.tamilarangam.net



# அமிரை அழித்தது நாமே!

-பிரபா



''கூட்டணியில் உள்ள அமிர்தலிங்கம் போன்றோர் இறுதிநேரத்தில் துரோகிகளாக மாறியதால் எமது அமைப்பு அவர்களை அழித்தது உங்களுக்குத் தெரியும். அதே போல் மற்றைய இயக்கத்தவர்களும் இன்று ஓர் அந்நிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எட்டப்பர்களாகி எம் இனத்தை விற்றுக் கொண்டிருப்பதும் உங்களுக்குத் தெரியும். பொதுவாக எமது அமைப்பு தான் இன்று இந்தப் போராட்டத்தில் உறுதியாகத் தமிழீழம் எனும் ஒரே கொள்கைக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றது. மற்றைய தலைவர்களும் சரி, இயக்கங்களும் சரி இன்று எமது இனத்தைக் காட்டிக் கொடுக்கும் அமைப்புக்களாகவே மாறிவிட்டார்கள்'' இவ்வாறு மாவீரர் தினவிழாவில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

பிரபாகரன் மேலும் பேசுகையில் பிரபாகரனைப் பொறுத்தவரை பிரபாகரன் என்பவரும் ஒரு தனிமனிதன் அல்ல ஓர் இனத்தின் பிரதிநிதி. அமிர்தலிங்கம் துரோகம் செய்தது போல் பிரபாகரனும் தமிழீழத்திற்குத் துரோகம் செய்தால் பிரபாகரனும் சுட்டுக்கொள்ளப்பட வேண்டியவரே எனவே நாங்கள் இந்த மாவீரர் நாளைக் கொண்டாடும் போது துரோகிகளை மக்கள் மத்தியிலிருந்து தூக்கியெறியத்தான் வேண்டும்.

அதேவேளை, இந்த நாளில் மற்ற இயக்கங்களினால் ஆதாவது தவறான தலைமைகளினால் வழிநடத்தப்பட்டு அதில் அநியாயமாகக் கொல்லப்பட்ட எவ்வளவோ நல்ல இளைஞர்களையும் நாம் சிந்திக்கத்தான் வேண்டும். அவர்களையும் நாங்கள் எங்கள் தோழர்களாக நினைக்கும் போது ஒரு கணம் சிந்திப்பது நல்லது.

கட்டுப்பாடான இயக்கம் ஒன்றினூடாகத்தான் தமிழர்கள் தமக்கென விடுதலையை அடைதல் வேண்டும். தனிப்பட்ட மனம் வேறு. நான் கூட சிலவேளைகளில் சிந்திப்பதுண்டு வீணாக நாங்கள், இளைஞர்கள் எங்களுக்குள் மோதி அழியத்தான் வேண்டுமா என்று ஆனால் வேறு வழியில்லை. யுத்தம் என்று வந்தால் நாங்கள் எதிரிகளை அழித்தே தீரவேண்டும். அதில் காட்டிக் கொடுக்கும், கூட்டிக் கொடுக்கும் எங்களது இளைஞர்களாக இருந்தாலும் கொஞ்சம் கூட இரக்கம் காட்டக் கூடாது. ஏனெனின் நான் முதல் சொன்னது போல பிரபாகரன் எப்படித் தனிமனிதன் இல்லையோ அவர் எப்படி சொந்த இனத்தின் உணர்வோ அது போலத்தான் எமது இனத்தின் நன்மை கருதி நாங்கள் மற்ற இயக்கங்களில் இருந்தவர்களை அழித்ததும் தவிர்க்க முடியாததே. தொடர்ந்தும் நாங்கள் அழிக்க வேண்டியும் இருக்கும். ஏனெனில் ஒரு காலமும் எட்டப்பர்களுடன் கூட்டுச் சேர முடியாது. ஆனால் எமது இனத்தின் ஒரு கெட்ட காலம் நாங்கள் போராட்டத்திலே அழிந்ததை விட மாற்று இயக்கங்களில் இருந்து எவ்வளவோ இளைஞர்கள் அழிந்து இருக்கிறார்கள். அதற்குக் காரணம் அவர்களது தலைமைகளின் தவறான வழிநடத்தலே. ஆனால் நாங்கள் போராட்டகளத்தில் இது பற்றிப் பெரிதாக சிந்தித்துக்கொண்டிருக்க முடியாது. ஏனெனில் நாங்கள் ஒரு கட்டுப்பாடான இயக்கமாக எங்களை நிரூபித்துக் கொண்டிருக்கிறோம். தொடர்ந்தும் நாங்கள் எங்களுடைய பாதையில் சென்று எங்களுக்கென்று ஒரு நாட்டை அமைப்பது அவசியமானது. அதற்காக நாங்கள் இந்த எதிர் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை அழிப்பதும் அவசியம்'' எனவும் குறிப்பிட்டுள்ளார்.

1989ல் நவம்பர் 27ஐ மாவீரர் நாளாகப் பிரகடனப்படுத்தி பிரபாகரன் பேசும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார். எனினும் அவ்வுரை எங்குமே வெளிவரவில்லை. தற்போது புலிகளின் பினாமிப்பத்திரிகையான (உலகத் தமிழர்) இப்பேச்சின்சில பகுதிகளை தனது நவம்பர் 15ந்திற்குரிய இதழில் வெளியிட்டுள்ளது.

89ல் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோர் கொழும்பில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டனர். அப்போது புலிகளே இக்கொலையின் சூத்திரதாரிகள் என குற்றம் சாட்டப்பட்ட போதும் புலிகள் அதனை மறுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# புத்தளம் ரோட்டில் புளொட்டினர் சாகசம்!

அனுராதபுரத்திலிருந்து புத்தளம் செல்கிற ரோட். ஆங்கிலப்படங்களில் வருவது போல முன்னால் ஒரு எல்ப் வாகனம் எல்லாவற்றையும் மோதித் துவம்சம் செய்கிற வேகத்தில் ஓடுகிறது. அந்த எல்ப் வாகனத்தை ஒரு வான் துரத்துகிறது. துரத்துகிற வானில் துப்பாக்கி மனிதர்கள். முன்னால் செல்கிற எல்ப்பின் ரயரை குறிப்பார்த்து சுடுகிறார்கள். காற்றுப் போன ரயருடனும் எல்ப் ஓடுகிறது. எல்லா ரயர்களும் காற்றுப் போய்விட எல்ப் ஓட முடியாது வேகத்தை தணிக்க வானிலிருந்தவர்கள் எல்ப்பில் சென்றவர்கள் மீது குறிவைக்கிறார்கள். வான் சென்று மறைகிறது.

கருவலகஸ்வெவ என்ற இடத்தில் ஜன.16ம் திகதி நடைபெற்ற இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர்கள் வவுனியா பூந்தோட்டத்தைச் சேர்ந்த வர்த்தகரான சதாசிவமும் அவருடன் கூடச் சென்ற ஜனாப் முகம்மது ராபிக், ஏ.கே.ரஹமத்துல்லா ஆகியோர். சதாசிவத்தின் தம்பி தியாகராசா படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்ட வர்த்தகரான சதாசிவம், கடந்த பாராளுமன்றத் தேர்தல் காலத்தில் புளொட்டிற்கு தன்னுடைய வாகனங்களைக் கொடுத்து உதவி வந்தவர்.

அண்மையில் புளொட் இவரிடம் குறித்த தொகைப்பணம் தருமாறு கேட்டு வற்புறுத்தி வந்ததால் இவருக்கும் புளொட்டிற்குமான உறவில் விரிசல் ஏற்பட்டு வந்ததாம். புளொட்டினரின் நெருக்குதல் காரணமாக இவர் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்திருக்கிறார். புளொட்டினர் இவரை தமது அலுவலகத்திற்கு வரச் சொல்லி அழைத்தனர். இவர் பயம் காரணமாக வர மறுத்திருக்கிறார். இவரை அழைத்து வரச் சென்ற புளொட் உறுப்பினர்களை இவ்வர்த்தகரின் சகோதரர்கள் வாளாலும், கத்திகளாலும் தாக்கியுள்ளனர். இதில் சைமன் என்னும் புளொட் நபர் கொல்லப்பட்டார். பதிலுக்கு புளொட்டினர் இவர்களின் வீட்டை அடித்து நொருக்கியுள்ளனர். இச்சம்பவம் நடந்து கொண்டிருந்த போது அங்கு வந்த பொலிசார் சுற்றி வளைத்து ஆயுதங்களோடு ஏழு புளொட்டினரைக் கைது செய்துள்ளனர். இச்சம்பவங்களின் பின்னர் தாம் தொடர்ந்து வசிப்பது சாத்தியமில்லை என உணர்ந்த சதாசிவம் குடும்பத்தினர் புத்தளத்திற்கு இடம் பெயரும் வேளையிலேயே புளொட்டினர் துரத்தி வந்து சுட்டுக் கொன்றுள்ளனராம்.

# மன்னாரில்: 'புளொட்'டினர் படுகொலை! புலி குற்றச்சாட்டு

பாலசந்திரன் என்னும் நபர் கடந்த 18ம் திகதி இரவு 10.00 மணிக்கு மன்னாரில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்ட பாலசந்திரன் புளொட் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பாலசந்திரனுக்கும் புளொட் இயக்கத்தினருக்கும் இடையிலான கொடுக்கல் வாங்கல் காரணமாக பிணக்கு எழுந்தது. இப்பிணக்கு முற்றியதன் விளைவாக அவரது சகோதரி ஒருவர் சென்றவருடம் ஏப்ரல் 16ம் திகதி புளொட் உறுப்பினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். இது தொடர்பாக 2 புளொட் உறுப்பினர்கள் மேல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கை வாபஸ் பெறும் படி பாலசந்திரனை புளொட்டினர் அடிக்கடி வற்புறுத்தி வந்தனராம். அவர் அதை மறுக்கவே புளொட்டினர் அவரையும் சுட்டுக் கொன்றுள்ளனர்.

இதேவேளை புலிகள் இயக்கத்தினர், மேற்படி நபரான பாலசந்திரன் தங்களது இயக்கத்தைச் சேர்ந்தவரென்றும், அரசாங்கத்துடனான மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள சூழ்நிலையில் இது போன்ற செயல்கள் வருந்தத்தக்கது என்றும் அரசிடம் தெரிவித்துள்ளனர்.

ஏற்கெனவே புளொட் இயக்கத்தின் உபதலைவர் கந்தசாமியின் கொலை பற்றிய குற்றச்சாட்டு புளொட் இயக்கத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள இந்த சூழ்நிலையில் இந்த பாலசந்திரன் சம்பவம் மற்றும் புலிகள் இயக்கத்தின் மேற்படி குற்றச்சாட்டின் காரணமாகவும் ஏற்பட்டுள்ள நெருக்குதல்களினால் புளொட் இயக்கத்திடமிருந்து ஆயுதங்களை மீளப்பெறுவதற்கான நடவடிக்கைகளை கூடியவிரைவில் அரசாங்கம் மேற்கொள்ளவிருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# 'சந்திரசேகரன் பெரிய அதிருஷ்டசாலி'

-தொண்டமான்

''சந்திரசேகரன் பெரிய அதிருஷ்டசாலி. கடந்த பொதுத்தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்ட ஐ.தே.கவைச் சேர்ந்த ஒருவர் 37,000 வாக்குகள் பெற்றும் தோற்றுப்போனார். அதே மாவட்டத்தில் பொ.ஜ.மு. சார்பில் போட்டியிட்ட ஆனந்த திஸாநாயக்கா 27,000 வாக்குகளை பெற்றும் அவருக்கு ஆசனம் இல்லை. ஆனால், வெறும் 23,000 வாக்குகளை மட்டுமே பெற்றுக் கொண்ட சந்திரசேகரனுக்கு ஆசனம் மட்டுமல்லாமல் அதைவிட உயர்ந்த ஸ்தானம் கூட கிடைத்துள்ளது. பாராளுமன்றத்தில் அவர் 113ஆவது எம்.பி. என்பது குறிப்பிட வேண்டியதொன்று. அதற்காகத்தான் சந்திரசேகரன் ஒரு அதிருஷ்டசாலி என்கிறோம்.''

இந்தப்பாராட்டை சந்திரசேகரனுக்கு வழங்கியவர் வேறு யாருமல்ல! சாட்சாத் தொண்டமான் அவர்களே தான்! சிங்கள வாரப்பத்திரிகையொன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

''சந்திரசேகரன் நல்லவர். அவரை இ.தொ.காவுக்குள் எடுத்து வளர்த்துவிட்டது நானே. ஆனால், செல்லச்சாமி தனது அரசியல் இலாபத்திற்காக சந்திரசேகரனை வெளியேற்ற காரணமானார் '' எனவும் அவர் தெரிவித்தார்.

# புன்னகைக்க மறுத்த பாப்பரசர்

கட்டுநாயக்கா விமானநிலையத்தில் வந்திறங்கிய அருளப்பர் சின்னப்பர் வத்திகானில் இருந்து கொண்டுவரப்பட்ட விசேட குண்டுதுளைக்காத ஊர்தியில் கொழும்பு நோக்கி அழைத்துவரப்பட்டார்.

இலங்கை ரூபவாஹினி அவரது வருகையை நேரடியாக அஞ்சல் செய்தது. வீதியெங்கும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அவரைப் பார்க்க திரண்டிருந்தனர்.

பௌத்த மதத்தை அவமதிக்கும் விதத்தில் அவரது அண்மைய புத்தகம் ஒன்றில் வெளியான சில கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன என்று இங்குள்ள பௌத்த பீடங்கள் அவருக்கு எதிர்ப்பு தெரிவித்திருந்தன. வத்திக்கானிலிருந்து இதற்காக அவர் மனம் வருந்துவதாக அறிவிக்கப்பட்டிருந்தும் நிலைமை சுமுகமடையவில்லை. பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சகல மதத்தலைவர்களுடனான அவரது சந்திப்பின் போது பௌத்த பிக்குகள் சமூகமளித்திருக்கவில்லை.

பாப்பரசர் இலங்கைக்கு வரும் போதே இவை குறித்து அதிருப்தி கொண்டிருந்தாரோ என்னவோ வந்து போகும் வரை அவர் முகத்தில் புன்னகையையே காண வில்லை; வெறும் கையசைப்புடன் அவர் நின்று விட்டார்.

பாப்பரசர் புன்னகையை எதிர்பார்த்த கத்தோலிக்க மக்களுக்கு இது எப்படி இருந்திருக்குமோ தெரியவில்லை, ஆனால் நாட்டு மக்களை அவர் ஏமாற்றித்தான் விட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## சம்பந்தன் VS தங்கத்துரை

# பா.உ. விவகாரம் கௌரவப் பிரச்சினை?

அருண்

திருகோணமலை மாவட்ட த.வி.கூ. எம்பி திரு.தங்கத்துரை ஜனவரிக் கடைசியில் தமது பதவியில் இருந்து விலகுவார் என்றும். அவரது இடத்திற்கு தி.சம்பந்தன் அவர்கள் நியமிக்கப்படுவார் என்றும் கூட்டணி வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்திகள் அடிபட்டன. திரு.தங்கத்துரை அவர்களின் பதவி ஜனவரி இறுதியில் காலியாகிறது என்று வாரப்பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டும் இருந்தது.


ஆயினும், அவ்வாறு தான் பதவி விலகப் போவதில்லை என்று தங்கத்துரை இப்போது அறிவித்துள்ளார். தமது முடிவை அறிவித்த சம்பந்தருக்கு எழுதிய நீண்ட கடிதம் ஒன்றிலேயே அவர் தான் இராஜினாமாச் செய்யப் போவதில்லை என்ற தனது முடிவை தெரிவித்துள்ளார். ஆயினும் அக்கடிதத்தில் சம்பந்தருடன் தனது பதவிக் காலத்தை பகிர்ந்து கொள்ளத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற தேர்தல்கள் முடிந்த கையோடு தோல்வியுற்ற சம்பந்தருக்கு அவரது ஆதரவாளர்களும், சம்பந்தருக்கு எப்படியாவது ஒரு எம்.பி. பதவியை பெற்றுவிட வேண்டும் என்று முயற்சித்தனர் என்றும் சம்பந்தரை தேசியப்பட்டியல் எம்.பியாக்குவதற்காக பல முயற்சிகளில் ஈடுபட்டனர் என்றும், ஆனால் ஏற்கனவே தேசியப் பட்டியலில் நீலன் திருச்செல்வத்தின் பெயர் இருந்ததாலும் கூட்டணியின் அரசியல் பீடம் நீலனையே தொடர்ந்து பிரேரித்ததாலும் சம்பந்தரை தேசியப்பட்டியலில் போடுவதற்கான முயற்சி வெற்றி பெறவில்லை என்றும் தங்கத்துரையின் மேற்படி கடிதம் தெளிவு படுத்துகிறது.

இதன் அடுத்தகட்டமாக திருகோணமலை மாவட்டத்திற்கென கிடைத்த ஒரேயொரு எம்.பி. பதவியை, அதாவது தங்கத்துரையின் பதவியை சம்பந்தருக்கு விட்டுக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை சம்பந்தரின் ஆதரவாளர்களால் முன்வைக்கப்பட்டது. காரசாரமான பேச்சுக்களும் இழுபறிகளும் ஏற்பட்டன. சரிநிகர் இதழ் 54ல் இது தொடர்பாக விரிவான செய்தியொன்று ஏற்கனவே வெளியாகியிருந்தது. ஆயினும் அச்செய்தியை 'விசமத்தனமான பொய்' என்று மறுத்து சம்பந்தன் அடுத்த இதழிலேயே (இதழ் 55) எழுதியிருந்தார். ஆயினும் எம்.பி. பதவிக்காக அவரும் அவரது ஆதரவாளர்களும் எடுத்த 'முயற்சி'களில் என் 'விசமத்தனமான பொய்'யும் இல்லை என்பது இப்போது தெளிவாகி விட்டுள்ளது.

சம்பந்தருக்கு இப்பதவியை விட்டுக் கொடுக்க வேண்டும் என்பதற்கு தெரிவிக்கப்பட்ட பிரதான காரணம் மிகவும் சுவாரஸ்யமானது. புதிய அரசாங்கம், புதிய அரசியல் யாப்பு ஒன்றை வரைவதற்கான 'பிரதிநிதி சபை' ஒன்றை நியமிக்க இருந்ததால், அந்தச் சபையில் தமிழ்மக்களின் நலன்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலான சரத்துக்களை முன்வைத்து ஏற்றுக் கொள்ளச் செய்யும் திறமையும் ஆற்றலும் சம்பந்தருக்கு இருப்பதால் அவரை எம்.பியாக்குவது அவசியம் என்று கோரப்பட்டது. ஏற்கெனவே இருந்த மங்கள முனசிங்க தலைமையிலான பாராளுமன்ற தெரிவுக்குழுவில், த.வி.கூ. சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படாமைக்கு அப்போது அதில் அங்கம் வகித்த மாவை சேனாதிராசா எம்.பி.யின் பலவீனமே காரணம் என்று சம்பந்தரும் அவரது ஆதரவாளர்களும் கூறிவந்துள்ளதாக கூறப்படுகிறது. எனவே இப்புதிய பிரதிநிதிகள் சபையில் அங்கம் வகிக்க தங்கத்துரையை விட சம்பந்தரே பொருத்தமானவர் என்று கோரப்பட்ட போது தனது பதவியை விட்டுக் கொடுக்க தங்கத்துரையும் முன்வந்திருக்கிறார். ஏதாவது காரணங்களால் புதிய அரசாங்கத்தின் பிரதிநிதிகள் சபையில் தமிழ்மக்கள் சார்பில் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டால், அது தங்கத்துரையின் தனிப்பட்ட பலவீனம் அல்லது ஆற்றலின்மை காரணமாக ஏற்பட்டது என்றும் திறமையற்ற ஒருவரை இவ்வாறான ஒரு சபையில் அங்கத்தவராக இருக்க வைப்பது கட்சி (கூட்டணி) தமிழ் மக்களுக்கு செய்யும் துரோகமாகும் என்றும் சம்பந்தரும் அவரது ஆதரவாளர்களும் கூறக்கூடும் என்ற எண்ணத்தில் தங்கத்துரை தனது பதவியை விட்டுக்கொடுக்க உடன்பட்டார்.

தேசியப்பட்டியல் மூலமாக சம்பந்தரை எம்.பி.யாக்குவதற்குகான முயற்சியில் உண்மையிலேயே தங்கத்துரை தீவிரமாக ஈடுபட்டார். தான் நேரடியாக கூட்டணி அரசியல் பீட உறுப்பினர்களிடம் கேட்டதுடன், மட்டக்களப்பு எம்.பி.ஜோசப் பரராஜசிங்கத்தின் மூலமாகவும் இதைச் செய்வதற்கு முயற்சி எடுத்தார். மட்டு - திருமலை ஆயர் வணசுவாம்பிள்ளை அடிகளையும் தொடர்பு கொண்டு அவர் மூலமாகவும் ஜோசப் பரராஜசிங்கத்தின் மீது செல்வாக்குச் செலுத்த முயற்சித்தார். ஆயினும் அவரது முயற்சி பலிக்கவில்லை. நீலன் திருச்செல்வம் தனது பதவியில் விடாப்பிடியாக ஒட்டிக்கொண்டிருந்ததும், கூட்டணி அரசியல் சபை உறுப்பினர்கள் அவருக்கு ஆதரவாக இருந்ததும் காரணமாக சம்பந்தருக்கு தேசியப்பட்டியலில் பதவி கிடைக்கவில்லை. இதையடுத்து தங்கத்துரையின் பதவி மீது சம்பந்தரின் கண் விழுந்தது. ஏற்கனவே தேர்தலுக்கு முன் ஒரு தனிப்பட்ட சந்திப்பின் போது, 'இன்னொரு தோல்வியை தாங்கும் சக்தி என்னிடம் இல்லை' என்று சம்பந்தன், தங்கத்துரையிடம் தெரிவித்த போது தங்கத்துரை அவரை தேற்றும் விதத்தில், அப்படி நீங்கள் தோல்வியுற்று, நான் வெற்றி பெறும் பட்சத்தில் எனது பதவியை உங்களுக்கு விட்டுத்தருவேன்' என்று கூறியிருந்ததை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு இப்போது தங்கத்துரையிடம் இப்பதவியை தருமாறு கோரிக்கை விடப்பட்டது. இதில் வேடிக்கை என்னவென்றால், இந்தச் சந்தர்ப்பத்தில் தங்கத்துரை தனது பதவியை தரத்தயார் என்று கூறியபோது, அதை மறுத்த சம்பந்தன், அப்படிச் செய்வது மக்களின் தீர்ப்பை அவமதிப்பது போன்றதாகும், என்று தெரிவித்திருக்கிறாராம்!



எப்படியோ, தங்கத்துரையிடம் சம்பந்தன் சார்பாக தூது வந்த நீலன் திருச்செல்வம், தங்கத்துரை தனது பதவியை சம்பந்தருக்கு விட்டுக் கொடுப்பாரா என்று கெஞ்சினார். மறுக்க முடியாத தங்கத்துரை, பாவம்! விட்டுக் கொடுக்க ஒப்புக் கொண்டார். அவசர அவசரமாக ஒரு ஒப்பந்தம் எழுதப்பட்டது - (இதையும் நீலனே தயாரித்திருந்தார்). இவ்வொப்பந்தத்தின்படி ஆறு ஆண்டுகால பாராளுமன்ற பதவிக்காலத்தை சம்பந்தரும், தங்கத்துரையும் பகிர்ந்து கொள்வது என்று ஏற்பாடாகியிருந்தது. ஆயினும் மேற்குறிப்பிட்ட பிரதிநிதிகள் சபை விவகாரத்தில் இப்'பகிர்ந்து கொள்ளல்' கிட்டத்தட்ட முற்று முழுதான விட்டுக் கொடுப்பாக வேண்டி வந்தது. அதாவது ஜனவரி கடைசியில் தங்கத்துரை பதவியிருந்து விலகி சம்பந்தரை எம்.பியாக்குவது - பிரதிநிதிகள் சபைக்காக - என்று உடன்பாடு காணப்பட்டது.

இதேவேளை தங்கத்துரை உடனே பதவி விலகி சம்பந்தனுக்கு அதை விட்டுக் கொடுக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன், அவர் மீது அழுத்தத்தை ஏற்படுத்தும் விதத்தில் சம்பந்தரும் அவரது ஆதரவாளர்களும் செயற்படத் தொடங்கினர்.

இதற்கு ஒரு முக்கிய காரணம் இருந்தது. எந்தக் காரணத்திற்காகத் தங்கத்துரை உடனடியாக பதவியை விட்டுக் கொடுகக வேண்டும் என்று கோரப்பட்டதோ அந்தக் காரணம் - அதாவது பிரதிநிதிகள் சபை - இப்போது இல்லையென்றாகிவிட்டது. பதிலாக அரசாங்கம் இப்பொறுப்பை ஒரு பாராளுமன்ற தெரிவுக்குழுவிடம் ஒப்படைத்துவிட்டது. இத்தெரிவுக்குழுவில் நீலன் திருச்செல்வம் ஒரு உறுப்பினராகவும் இருக்கின்றார். எனவே தங்கத்துரையை நீக்கிவிட்டு சம்பந்தரை எம்.பியாக்குதற்கான பிரதான காரணம் இல்லாமல் போய் விட்டது. இதைக் காரணம் காட்டி தங்கத்துரை பதவி விலக மறுக்கவும் கூடும் என்பதால் கட்சிக்குள்ளும் வெளியேயும் தங்கத்துரைக்கு எதிராக அவதூறுகள் கிளப்பிவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்றப் பதவியில் - சட்டப்படி தெரிவு செய்யப்பட்டு தனக்கு கிடைத்த பதவியில் - தான் நியாயமற்ற முறையில் ஒப்புக்கொண்டிருப்பது போன்ற ஒரு படத்தை பரவலாக வெளியே காட்ட சம்பந்தனின் ஆட்கள் முயல்வதாகவும் அவர்களில் சிலர் தன்னையும் தனது குடும்பத்தையும் நண்பர்களையும் பிறந்த ஊரையும் அவமதிக்கும் விதத்தில் அவதூறுகளை பேசிவருவதாகவும் தன்னை 'நாட்டான்', 'மூதூரான்', 'வேடன்' என்றெல்லாம் ஏசுவதாகவும், தன்னை மிரட்டி, அவமானப்படுத்தி பதவியை எப்படியாவது விட்டுக் கொடுக்க வைக்கும் முயற்சியாகவே இவை நடாத்தப்படுகின்றன என்றும் குற்றம் சாட்டியுள்ளார் தங்கத்துரை அவர்கள்.

''நியாயமாக பார்த்தால் பதவியை விட்டுக் கொடுக்க முன்வந்ததற்காக நான் பாராட்டப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இங்கே என்னவென்றால், நான் ஏதோ சம்பந்தனின் உரிமையை பறித்து வைத்திருப்பது போல அவமானப்படுத்தப்படுகின்றேன். இந்த நிலையில் நான் எனது பதவியை விட்டுக் கொடுத்தால் அது எனது சுயகௌரவத்திற்கு பாதகமானது மட்டுமல்ல, எனது வாக்காளர்கள் என் மீது வைத்த நம்பிக்கையை கைவிடுவது மட்டுமல்ல, இவர்களால் சுமத்தப்படும் அபாண்டமான குற்றச்சாட்டுக்களை ஒப்புக் கொண்டதும் ஆகிவிடும். எனவேதான் நான் இந்த மாத இறுதியில் இராஜினாமாச் செய்யப் போவதில்லை'' என தங்கத்துரை கூறியுள்ளார் .

ஆயினும், தான் ஒப்புக் கொண்டபடி பதவிக் காலத்தை பகிர்ந்து கொள்ள அவர் தயாராக இருக்கிறார். சம்பந்தருக்கு தனது முடிவை விளக்கி எழுதிய கடிதத்தில் அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்: ''நாம் இருவரும் சந்தித்து இப்பதவிக்காலத்தை எப்படி பகிர்ந்து கொள்வது என்பது பற்றிப் பேசுவோம். தேர்தல் கால உணர்ச்சிகளிலிருந்து விடுபட்டு இப்போது எம்மால் நிதானமாக இதுபற்றி பேசமுடியும். நாம் இருவரும் முதிர்ச்சியடைந்தவர்கள். தமிழ்மக்களின் நலன்களை பொதுவாகவும் திருமலை மக்களின் நலன்களை குறிப்பாகவும் கொண்டு எல்லா சம்பந்தப்பட்ட விடயங்களையும் தெளிவாக ஆராய்ந்து ஒரு பொருத்தமான முடிவை எடுப்போம். இச்சந்திப்பிற்கு நீங்கள் விரும்பாவிட்டாலும் உங்களுக்கு எனது பதவிக்காலத்தை விட்டுத்தந்து, ஒரு பாராளுமன்ற உறுப்பினர் ஆக இருக்கும் சந்தர்ப்பத்தை உங்களுக்கு நான் எப்படியும் தருவேன்.''

எப்படியாவது பாராளுமன்ற உறுப்பினர் பதவி கிடைத்தால் போதும் என்று அதை ஏற்றுக்கொள்வது சம்பந்தருக்கு கௌரவப்பிரச்சினை. இப்பதவி அவருக்கு கிடைப்பதே நியாயமானது என்று ஏற்றுக்கொள்ளப்படுவது அவருக்கு அவசியம். தங்கத்துரைக்கும் அதுவே பிரச்சினை. விட்டுக் கொடுப்பது தனது சிறப்புப் பண்பாக புரிந்து கொள்ளப்படுவதற்குப் பதில், தான் தகுதி பற்றவன் என்பதற்காகவும் தான் விட்டுக் கொடுக்கிறேன் என்று சொல்லப்படுவது அவருக்கு கௌரவப்பிரச்சினை. தங்கத்துரையின் பதவி தனக்குக் கிடைக்காத பட்சத்தில் சம்பந்தர் தான் கெஞ்சிப் பெற்றுக்கொண்ட தேசியப்பட்டியல் பதவியில் கைவைத்துவிடுவாரோ என நீலனுக்கு கிலி.

இந்த எம்.பி பதவிக்காக கடிபடும் இலட்சணத்தில் தமிழ்மக்களின் நலன், திருமலை மக்களின் நலன் என்று இடைக்கிடை பேசிக் கொள்வதைப்பார்த்தால், ஐயோ தலைவிதி என்று அடித்துக் கொள்ள வேண்டும் போல இருக்கிறது.

பின்கதவாலாவது பாாாளுமன்றத்துள் புகுந்துவிடுவதில் உள்ள சந்தோசம், 'தளபதி' அண்ணர் அமிர்தலிங்கத்தையே விடவில்லை. பாவம் சம்பந்தரும் மற்றவர்களும் மட்டும் எம்மாத்திரம்'.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கலன் தோட்டத்திற்கும் இ.தொ.காவிற்கும் என்ன உறவு?

நமது மலையக நிருபர்



பதுளை கலன்குரூப் தோட்ட பிரச்சினை சென்ற டிசம்பரிலிருந்து தொடர் கதையாகவே சென்று கொண்டிருக்கின்றது. பிரச்சினையுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற வகையில் தொழிற் சங்கங்கள், கம்பனி, விகாராதிபதி என்பவர்களிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தோல்வியை தழுவியுள்ளன. இப்போது அமைச்சு மட்டத்திலான பேச்சுவார்த்தை முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இடதுசாரிகளில் ஒருவரும் பொது ஜன முன்னணியின் பெருந்தோட்டக் கைத்தொழில் பிரதி அமைச்சருமான அத்தாவுட செனிவிரட்ன தலைமையிலேயே இப்பேச்சுவார்த்தைகளுக்கான முயற்சிகள் நடைபெறுகின்றன. தொழிலாளர்கள் தொடர்ந்தும் வேலைநிறுத்தம் செய்துவருகின்றனர்.

இக்கலன்குரூப் தோட்டம் கண்டிய அரசர்களினால் நம்புக்ஷெ பௌத்த விகாரைக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. விகாரை நிர்வாகம் தரிசு நிலமாக மேற்படி தோட்டத்தை 1890ல் குத்தகைக்கு வழங்கியிருந்ததாகவும் 1972 காணி சீர்திருத்த ஆணைக்குழு தோட்டத்தை பொறுப்பேற்று மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையிடம் கொடுத்ததாகவும், பின்னர் ஐ.தே.க ஆட்சிக் காலத்தில் தோட்டம் பலாங்கொடை பிளாண்டேஷன் கம்பனிக்கு கொடுக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது. மேற்படி கம்பனி 1990ம் ஆண்டு வரை விகாரைக்கு குத்தகைப் பணத்தை வழங்கிவந்துள்ளது. அதற்குப் பின்னர் தோட்டம் நட்டத்தில் இயங்குகின்றது எனக்கூறி 1994 வரை குத்தகை கட்டாதிருந்ததனாலேயே விகாரை நிர்வாகம் நீதிமன்றத்தின் அனுமதியுடன் தோட்டத்தை பொறுப்பேற்றுள்ளது. இத்தோட்டத்தில் தமிழ்த் தொழிலாளர்களுக்கு சமமான சிங்களத் தொழிலாளர்களும் வசிக்கின்றனர்.

தோட்டம் தொடர்பாக விகாரைக்கு சார்பான நீதிமன்றத்தின் தீர்ப்பு கிடைக்கப்பெற்று 3 மாதங்களின் பின்னரே இப்பிரச்சினை தொழிற்சங்கங்களுக்கு தெரியவந்தது. அதுவும் தோட்ட அதிகாரி, தோட்டக்கமிட்டி தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்து கூறிய விடயத்தை தோட்டத்தின் வி.தோ.தொ.கா. தலைவர் ஆர்.எம். டிங்கிரி பண்டா பத்திரிகைகளுக்கு தெரியப்படுத்தியதைத் தொடர்ந்தே தெரியவந்தது.

தெரியவந்த பின்னரும் கூட தொழிலாளர் நடவடிக்கைகளில் இறங்கும் வரை, இ.தொ.கா. உட்பட பல தொழிற்சங்க தலைவர்கள் தோட்டப்பக்கம் எட்டியே பார்க்கவில்லை. விவசாய தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆர்.எம் கிருஸ்ணசாமி மட்டுமே விகாராதிபதியுடன் பேசியிருக்கிறார். அவர் விகாராதிபதியுடன் பேசிய போது தொழிலாளர் குடும்பம் ஒவ்வொருவருக்கும் 1/2 ஏக்கர் காணி கொடுப்பதற்கும், தொழிலாளர்களின் ஏனைய பிரச்சினைகள் குறித்து தொழிலாளர்களுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதற்கும் தயார் என கூறியிருக்கிறார். விகாராதிபதியுடன் தொழிற்சங்கங்கள் தொடர்ச்சியாகப் பேச்சுவார்த்தை நடாத்தியிருப்பின் தொழிலாளர்களின் அடிப்படைப் பிரச்சினையான நிலப்பிரச்சினையை இலகுவாகத் தீர்த்திருக்கலாம். பௌத்த மதகுருவே தொழிலாளர்களுக்கு நிலங்களை வழங்க முன்வரும் போது, நீங்கள் ஏன் வழங்கக்கூடாது என ஏனைய தனியார் தோட்டங்களை வற்புறுத்துவதற்கு இது ஒரு முன் மாதிரியாக அமைந்திருக்கும். ஏனைய பிரச்சினைகளை ஒப்பந்தத்தின் மூலம் தீர்த்துக் கொண்டிருக்கலாம்.

தொழிற்சங்கங்கள் பிரச்சினையை தோட்ட மக்களின் நலன் சார்ந்து கையாளாமல் வேண்டுமென்றே குழப்பியுள்ளன. இதில் பிரதான பங்கு இ.தொ.காவுக்குரியது. நிலங்களைப் பெற்றுக் கொடுப்பதிலும் பார்க்க முன்னர் தோட்டத்தை நடாத்திய பலாங்கொட பிளாண்டேசன் கம்பனிக்கு மீண்டும் குத்தகைக்கு பெற்றுக் கொடுப்பதிலேயே கூடிய கவனம் செலுத்துகிறது. இதற்கு பதுளை மாவட்ட இ.தொ.கா. பாராளுமன்ற உறுப்பினர் சென்னனுக்கும், பலாங்கொடை பிளாண்டேசன் கம்பனி இயக்குனர்களில் ஒருவரான கூப்பர்க்கும் (cooper) உள்ள நெருக்கமான உறவை சிலர் காரணம் காட்டியிருக்கிறார்கள். இதற்காக பெருந்தொகையான பணம் கையளிக்கப்பட்டிருக்கலாம் எனவும் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

விகாரை நிர்வாகம் தோட்டத்தை பொறுப்பேற்கும் அளவுக்குச் செல்லும் என ஆரம்பத்தில் இவர்கள் எதிர்பார்க்கவில்லை. நிலைமை கட்டுமீறிப்போகவே இ.தொ.கா.வின் உதவியை கம்பனியினர் நாடியுள்ளார்கள். இ.தொ.கா. இது தொடர்பாக வேலைநிறுத்தம் செய்த போது இக்கம்பனியின் முகாமையிலுள்ள தெளிவத்தை டெமோ தோட்டங்களில் முகாமையைச் சேர்ந்தவர்களே, வேலைக்கு வர வேண்டாம் எனத் திருப்பி அனுப்பியிருக்கிறார்கள். இது விடயத்தில் 18ம் திகதி பதுளை உதவி தொழிலாளர் தலைமையில் நடைபெற்ற மாநாட்டுக்கு ஏனைய தொழிற்சங்கங்கள் கலந்து கொண்டபோதும் இ.தொ.கா. செல்லவில்லை.

உண்மையில் தொழிலாளர்களுக்கு காணி கொடுக்கப்படுவதை இ.தொ.கா. விரும்பவில்லை. தொழிலாளர்களுக்கு காணிகள் கொடுத்தால் தொழிலாளர்களின் வசிப்பிடங்கள் கிராமங்களாகிவிடும். அவ்வாறு கிராமங்களாகினால் தோட்ட தொழிலாளர்களின் அனைத்து விடயங்களையும் தீர்மானிக்கின்ற தற்போதைய அமைப்புவடிவம் குழம்பி தொழிலாளர் மீதான தங்களின் பிடி தொய்ந்துவிடும் என அவர்கள் கருதுகின்றார்கள். இதன் பின்னர் தாங்கள் நினைத்தமாதிரி தொழிலாளர்களின் மேல் சவாரிவிட முடியாது என அவர்கள் பயப்பிடுகிறார்கள்.

இ.தொ.காவின் இன்னோர் பயம். இப்பிரச்சினையில் தன்னுடைய பிடியைத்தளர விட்டால் எதிர்ச்சக்திகள் பலமாகி விடுவார்கள் என்பதாகும். குறிப்பாக இன்று தன்னோடு போட்டிக்கு நிற்கும் மலையக மக்கள் முன்னணியின் பலம் அதிகரித்துவிடும் எனப்பயப்படுகின்றது. அதுவும் நுவரேலியா மாவட்டத்தில் நடைபெறும் பலப்பரீட்சை பதுளை மாவட்டத்திற்கும் பரவிவிடும் என அஞ்சுகிறது.

ஏனைய தொழிற்சங்கங்களின் நிலை கூட இது விடயத்தில் திருப்தியாகவில்லை. அவர்களாவது இது விடயத்தில் உறுதியாக இருந்திருந்தால் சிறிது வெற்றியடைந்திருக்கலாம். பிரச்சினையில் உறுதியற்ற தன்மை ஒருபுறமிருக்க கலன் தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்தை குழப்பும் சதி முயற்சிகளுக்குக்கூட இவர்களில் சிலர் துணை போயிருக்கிறார்கள். பிரச்சினைக்கு தீர்வு காண முன்னரே வேலை நிறுத்தத்தை குழப்பும் வகையில் விகாராதிபதி ஜனவரி எட்டாம் திகதி வெளியிலிருந்து ஆட்களை தோட்டத்துக்கு கூட்டிச் சென்று கைகலப்பு நடைபெற்ற விவகாரத்தில் ஒரு தொழிற்சங்கத் திற்கு பங்கிருப்பதாக கூறப்படுகின்றது 3 பெண்கள் உட்பட பலர் அத் தொழிற்சங்கத்திலிருந்து கருங்காலிகளாகச் சென்றுள்ளனர். மலையக மக்கள் முன்னணியின் தொழிற்சங்கத்தை சேர்ந்தவர்களே அவர்கள் என்பது அங்கிருந்து கிடைத்த தகவல்.

இப்பிரச்சினை தொடர்கதையாக செல்வதற்கு சம்பந்தப்பட்டவர்கள் இனியும் அனுமதிக்கக்கூடாது சுமார் ஒரு மாதத்திற்கு மேலாக தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர். அவர்களது அன்றாட வாழ்வுப் பிரச்சினையே இன்று கேள்விக்குள்ளாகியுள்ளது.



வேலைநிறுத்தகாலத்தில் அவர்களுக்கான நிவாரண உதவிகளிலும் போதிய கவனம் செலுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. இந்நிலையில் இதற்கான தீர்வு முயற்சிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். அதன் முடிவுகள் நீண்டகாலத்தில் தொழிலாளர்களை பாதுகாப்பதாக இருக்க வேண்டும். தொழிலாளர்களுக்கு குறைந்தது ஒரு ஏக்கர் காணியைப் பெற்றுக் கொடுப்பதன் மூலமே நீண்ட காலத்திற்கு ஒரு பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ள முடியும். இதனைப் புறக்கணித்து பிளாண்டேசன் கம்பனிக்கு குத்தகைக்கு திரும்ப கொடுப்பது என்பதிலேயே இ.தொ.கா கவனம் செலுத்துகிறது. இதுவிடயத்தில் பின்வரும் மூன்று நடவடிக்கைகளை மேற்கொள்வதே உசிதமானதாக இருக்கும்.

1. தோட்டத்திலுள்ள தொழிலாளர் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் தலா ஒவ்வொரு ஏக்கர் குடியிருப்புக்கும், வீட்டுப்பயிர்ச் செய்கைக்குமாக வழங்கப்பட வேண்டும்.

2. தொழிலாளர்களின் பழைய கொடுப்பனவுகள், ஊழியர் சேமலாபநிதி தொடர்பாக முன்னைய பொறுப்பாளர்களான பலாங்கொட பிளாண்டேசன் கம்பனியினருடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவேண்டும்.

3. வருங்காலத்தில் தொழிலாளர்களின் நலன்கள் தொடர்பாக விகாரை நிர்வாகமும் தொழிற்சங்கங்களும் கூட்டு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும்.


இறுதியாக கலன்தோட்டப்பிரச்சினை. இவ்வாறான பிரச்சினையின் ஒரு குறியீடு மட்டுமே. இது போன்ற நிகழ்வு ஏனைய தனியார் தோட்டங்களிலும் நிகழப் போகின்றது. 150 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்தவர்கள் தொடர்ந்தும் இருப்பதற்கு எந்த வித உத்தரவாதமும் இல்லாமலேயே அவர்கள் வாழ்விடங்களிலிருந்து பிடுங்கியெறியப்படப் போகின்றார்கள். மாத்தளையிலுள்ள நாகொல்ல, இங்குறுவத்த தோட்டங்களிலும் இது போன்ற சம்பவத்திற்கு ஒத்திகை போடப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக வேலைநிறுத்தம் செய்கிறார்கள் என்பதற்காக ஒரு மாதத்திற்குள் தோட்டத்தை விட்டு வெளியேறும்படி அங்கு அவர்கள் கேட்கப்படுகின்றார்கள்.

எனவே நீண்ட காலத்தில் பெரிதாக வரப்போகின்ற இப்பிரச்சினைக்கு ஒரேயொரு குறைந்தபட்சத் தீர்வு அவர்களுக்கு சொந்தமான குடியிருப்புக்காணிகளை பெற்றுக் கொடுத்து தோட்டங்களில் கிராமங்களை உருவாக்குவதே! ஒரு குடும்பத்திற்கு குறைந்தது ஒரு ஏக்கராவது பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தோட்டங்களில் வேலை அருகிவருகின்ற இக்கால சூழலில் மக்களுக்கு சிறிய பாதுகாப்பையாவது இந்நிலங்களே வழங்கும். தனது பதவிக்காலத்தில் மலையக மக்கள் அனைவருக்கும் நவீன வீடுகளை ஏற்படுத்திக் கொடுப்பேன் என மார்தட்டும் அமைச்சர் சந்திரசேகரன் அவர்கள் அதற்கு முன்னர் மலையக மக்களுக்கு காணிகளை பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் இறங்குவாரேயானால் மலையக மக்கள் என்றைக்கும் அவருக்கு நன்றியுடையவர்களாக இருப்பார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# கொலை வழி முடிவு முடிவெப்போது?

**நிஷாந்த**

இந்த இதழுக்கான எனது குறிப்பை றொஜர் ஹௌசர் (Roger Housier) ரின் கருத்தொன்றை மேற்கோள் காட்டுவதுடன் தொடங்கலாம் என்று நம்புகிறேன். இசாயிர் பேர்லின் (Isair Berlin) என்ற சமூக அரசியல் விமர்சகர் எழுதிய ''ஓட்டத்திற்கு எதிராக'' (Against the current) என்ற நூலுக்கு அளித்த தனது முன்னுரையில் றொஜர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

''தங்களுடைய வெறும் எதிர்ப்பு நடவடிக்கைகளின் காரணமாக கடுமையான துன்பங்களுக்கு உள்ளாக்கப்பட்டவர்களது குரல், அது மற்றவர்களது உணர்வுகளை மதிக்கிறதோ அல்லது புதிது புதிதாக உருவாக்குகின்ற கடுமையான விமர்சனமாக இருக்கின்றதோ என்பது எப்படியிருந்தபோதும் அதனை பரிவுடன் காது கொடுத்துக் கேட்பது அவசியம். கூட்டான வளர்ச்சி பற்றி எண்ணுபவர்கள், அதற்காக எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியிலும் இவ்வணுகுமுறையை கையாளவேண்டும். இவற்றை நாம் புறக்கணிப்போமானால், நாம் எமது தலைவிதியை அதற்கு விலையாக கொடுக்க வேண்டிவரவும் கூடும். எதிராளிகளின் விமர்சனங்கள் எங்களைப்பற்றிய சில விடயங்களை கூறுகின்றன. எனவே நாம் இவ்வாறு செய்வதன் மூலமே மனிதன் பற்றிய ஒரு விரிந்த கருத்துருவை நாம் பெற்றுக் கொள்ளவும், அவன் எப்படிப்பட்டவனாக இருக்கிறான் என்பதை புரிந்து கொள்ளவும், அவன் எவ்வாறு இருக்கப்போகிறான் என விளங்கிக்கொள்ளவும் முடியும்''.

றொஜர் ஹௌசர் என்ற இம்மாபெரும் அரசியல் விமர்சகரது மேற்கூறிய கருத்தை உண்மையாக்கும் விதத்தில், இலங்கையின் துப்பாக்கிக் கலாசாரத்தின் கொடூரத்தை வெளிப்படுத்துகின்ற இன்னொரு பலியெடுப்பு இலங்கையின் தலைநகரில் நடந்துமுடிந்துள்ளது.

பலியானவர் வேறுயாருமல்ல. ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (DPLF) பிரதித் தலைவர் கரவை கந்தசாமி அவர்கள்தான் அவர். ஒரு பத்திரிகையாளன் என்ற முறையில், அவருக்கும் எனக்குமிடையில் ஒரு குறிப்பிடத்தக்க அளவு நெருக்கமான உறவு இருந்துவந்தது.

ஆயினும், 1994 டிசம்பர் 31ம் திகதியின் அந்த இரவுடன், இந்த உறவு கவலைக்குரிய விதத்தில் முடிவுக்கு வந்தது. ஒரு நண்பரின் மரணம் மிகவும் துயர்மிக்கது. எம் எல்லோருக்கும் பொதுவான ஒரு துயர்மிக்க தருணம் இது.

வழமைபோலவே இக்கொலையும் கூட இன்னொரு விடுதலைப் புலிகளின் செயலே என்றுதான் பெரும்பாலானவர்கள் கூறுகின்றனர். இக்கொலை புலிகளால் செய்யப்பட்ட கொலையே என்று தகவல்களின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டாலும் கூட, அவர்களின் இந்தச் செயலுக்காக ஆத்திரப்படுமளவுக்கு நான் அறிவற்ற ஒருவனாக இருக்கப்போவதில்லை. இப்படிநான் சொல்வதற்கு நீங்கள் ஒரு முஸ்லிம் அல்லது தமிழ் வாசகர் என்ற முறையில் என்மீது ஆத்திரம் கொள்ளக் கூடும். ஒரு உதாரணத்தின் மூலம் எனது நிலைப்பாட்டை விளக்குகிறேன்.

பயங்கரவாதம் தலைவிரித்தாடிய 1987 - 1989 காலப்பகுதியில் ஜே.வி.பி இயக்கத்தினர், எனது கட்சியில் என்னுடன் சேர்ந்து வேலைசெய்தவர்கள், வேறு கட்சிகளில் இருந்தவர்கள் மற்றும் நண்பர்கள் என்று பெருமளவில் எமது சகோதரர்களைக் கொன்றொழித்தனர்.. துப்பாக்கிக் கலாசாரத்தின் பயங்கரத்தன்மையை தெளிவாக வெளிப்படுத்துவதாய் அது அமைந்திருந்தது. ஆனால் இத்தகைய ஒரு சமுதாயத்தை ஜனநாயக பூர்வ சமுதாயமாக மாற்றியமைக்கும் நடைமுறைப் போக்கில் நாம் இயங்கிக் கொண்டிருப்பவர்கள் என்றால், இவ்வாறான ஒவ்வொரு கொலைகளின் போதும் நாம் ஆத்திரமும் பகைமையுணர்வும் எம்மை ஆட்கொள்ள அனுமதித்து விடக்கூடாது பதிலாக ஆத்திரம் பகைமையுணர்வு என்பவற்றால் ஆட்கொள்ளப்படுவதை விட, இவ்வாறான கொலைகளை முடிந்தளவுக்கு இல்லாமலாக்கும் எமது நிலைப்பாட்டை நாம் மேலும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். ஆனால் இன்றைய அரசியல் சூழ்நிலையில், இத்தகைய நிலைமைகளை இல்லாமலாக்குவதற்கான பொறுப்புணர்வுடன் யாரும் இயங்குவதாக தெரியவில்லை.

இலங்கையின் இன்றைய அரசியல், கடந்த காலத்தில் அது கொண்டிருந்த கண்ணியத்தன்மையை கொண்டுள்ளதாக இல்லை. கடந்த காலத்தின் புகழ் பெற்ற அரசியல் வாதிகள் எல்லாரும், தாம் இன்று கொண்டிருக்கும் செல்வங்களுக்கு மேலாக அரசியல் அதிகாரத்தையும் பெற்றுக் கொள்வதிலேயே குறியாக உள்ளனர். ஆனால் இன்றைய நிலைமையோ முழுக்க முழுக்க வித்தியாசமானது. இன்றைய இலங்கையின் அரசியல், சாவை அவர்களது வாசல்படியில் கொண்டுவந்து நிறுத்துகிறது. எமது இவ்வளவு கால அனுபவங்கள் இதற்கு சாட்சியங்களாக உள்ளன.

கந்தசாமியின் கொலையைத் தொடர்ந்து, இந்த நிலைமையை இல்லாமல் செய்வதற்காக எப்படிச் செயற்பட வேண்டும் என்பதை அறிவிக்கும் புகழ் பெற்ற சுலோகம் ஒன்று திரும்பவும் முன்வைக்கப் பட்டுள்ளது. அப்புகழ் பெற்ற சுலோகம் இதுதான்.

''மிகப்பெருமளவிலானதும், நன்கு திட்டமிடப்பட்டதுமான இராணுவ நடவடிக்கை ஒன்றின் மூலம், புலிகளை முற்றுமுழுதாக இல்லாமல் செய்துவிட வேண்டும்''

எல்லோருக்கும் தெரியும். புலிகளை முற்று முழுதாக இல்லாமல் செய்வது ஒன்றும் இலேசான காரியம் அல்ல என்று. புலிகள் முற்றாக அழிக்கப்பட வேண்டுமா அல்லது எவ்வாறு இல்லாமல் செய்யப்பட வேண்டும் என்பது பற்றி எழுதுவதல்ல எனது நோக்கம்.

தமது சொந்த உயிர் பாதுகாப்புத் தொடர்பாகவே அச்சம் கொள்ளும் நிலையில் உள்ளவர்கள் மத்தியில் நிலவும் குழப்பத்தையொட்டி, விடுதலைப் புலிகள் தொடர்பான ஒரு இயக்கம் என்ற அடிப்படையில் அதுபற்றி விசாரித்தறிந்தவற்றின் அடிப்படையில் எனக்கு தோன்றுபவற்றை சொல்வதே எனது நோக்கமாகும். புலிகளின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் கொல்வதற்காகவே பிறந்தார்கள் என்ற மாதிரியான ஒரு மேலோட்டமான, கருதுகோள் பரவலாக உள்ளது. ஆனால் அவர்கள் கூட இந்நாட்டின் சாதாரண ஏழை மக்களது புதல்வர்களும் புதல்விகளுமே. அவர்கள் எமது சகோதர சகோதரிகள். நான் யாழ்ப்பாணத்துக்கு இந்த யுத்தம் தொடங்கிய பின் போகாவிட்டாலும் கூட, அண்மையில் பத்திரிகைகளில் வெளிவந்துள்ள புகைப்படங்களிலிருந்து மிகவும் குறைந்த வயதுள்ளவர்கள் யுத்த முனையில் நிற்பதை காணக் கூடியதாக உள்ளது. இப்படங்களைப் பார்த்தபோது, இவர்கள் யுத்த முனையில் அல்ல, பாடசாலைகளில் இருக்க வேண்டியவர்கள் என்றே எனக்கு தோன்றியது.

உண்மையில் அவர்கள் நல்ல நோக்கங்களை தமது மனங்களில் கொண்டவர்களாகவே யுத்தத்தில் நிற்கின்றனர். ஆனால் அவர்கள் அநியாயமாக அழிந்து போகிறார்கள். எமது சொந்தப் பொறுப்புணர்வுகளை நாம் ஒரு புறத்தில் மூட்டை கட்டி வைத்துவிட்டதன் மூலம், இந்தச் சிறார்களை யுத்தமுனையை நோக்கி தள்ளிக் கொண்டேயிருக்கிறோம். இந்த நிலையில் அவர்களுக்கு எதிராக யுத்தப் பிரகடனம் செய்வது எந்த விதத்தில் மனிதாபிமானமாகும்? இவ்விடத்தில் ஒரு விடயத்தை குறிப்பிடவேண்டும். நல்ல நோக்கங்கள் என்று இங்கே நான் குறிப்பிட்டது விடுதலைப்புலிகளின் வீரர்கள் தெரிந்தோ தெரியாமலோ தமிழர்களின் உரிமைக்காகப் போராடுகிறார்கள்; இங்குள்ள அரசாங்கத்தில் தாம் பிரதிநிதித்துவப்படாததால், புலிகளுடன் சேர்ந்து நின்று போராடுவது மூலமாக தாம் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளக்கூடியதாக இருக்கிறதென்று அவர்கள் நம்புகிறார்கள்.

இந்த அரசியல் குறைபாடு யுத்த முனையில் அவர்களை நிற்க வைக்கிறது. அவர்கள் குறுகிய இனவாதம், தேசியவாதம், பிரிவினைவாதம் ஆகியவற்றின் ஆளுகைக்குள்ளாகி இருக்கிறார்கள். அதன் விளைவு என்ன வென்றால் இந்தச் சிறார்கள், கூட்டம் கூட்டமாய் வண்ணத்துப்பூச்சிகளாய் விழுந்து இறப்பதைப் போல் இறந்து கொண்டிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளை இல்லாமல் செய்வது பற்றி பலரும் பேசிய போதும் அதன் பின்னால் வரப்போகும் விளைவுகள் பற்றி யாரும் பேசுவதாக தெரியவில்லை. தெற்கிலே ஜே.வி.பியினரை இல்லாதொழிப்பதற்காக இங்குள்ள ஜனநாயகவாதிகள் அரசாங்கத்திடம் வழங்கிய ஒப்பந்தத்தையொட்டியதாகவே இதுவும் உள்ளது.

ஒரு பலமிக்க இடதுசாரி அணியையோ, மக்கள் முன்னணியையோ கட்டியெழுப்பி ஜே.வி.பியினை எதிர்க்க முடியாத தமது பலவீனத்தால் இவர்கள் முதலாளித்துவ அரசாங்கத்தின் இராணுவத்தினரின் உதவியுடன் இதனைச் சாதித்தனர். இதன் முடிவாக, இன்று இதே ஜனநாயக மற்றும் முற்போக்கு சக்திகள் படுகொலைகளை செய்த இராணுவத்தினருக்கு எதிராக புதைகுழிகளை தோண்டும் கலாசாரத்தை வளர்ப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

படுகொலைகளை செய்வதற்கு அனுமதித்துவிட்டு, பிறகு அவற்றை தோண்டியெடுக்க வெளிக்கிட்டிருப்பது எவ்வளவு முட்டாள்த்தனமானது?

இது இந்த முற்போக்குவாதிகளுக்கு பயங்கரவாத சூழலிலிருந்து விடுபட வேறு வழி இருக்கவில்லை என்று காட்டுகிறதா?

விடுதலைப்புலிகளை முற்றாக அழிக்க வேண்டும் என்று விரும்புபவர்களோ அல்லது அப்படிக் கூறுபவர்களோ அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான அரசியல் தீர்வு காண வேண்டும் என்பதை ஒரு போதும் வலியுறுத்துவதில்லை.

இலங்கையின் அரசாங்கங்கள்தான் இனப்பிரச்சினை இவ்வாறு வளர்ந்ததற்கான பொறுப்பை ஏற்க வேண்டும். ஆனால் அரசாங்கத்தின் பேச்சுவார்த்தைகளோ, புனர்நிர்மாண அடிப்படையிலேயே இன்னமும் தொடர்வதாக உள்ளது. வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழ் முஸ்லிம்கள் தமது இன அடையாளங்கள் அங்கீகரிக்கப்படும் ஒரு அரசியல் செயல்திட்டத்தையே எதிர்பார்க்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒரு உண்மை. சாதாரண மக்களைப் பொறுத்தவரை அது சமஷ்டியா அல்லது வேறேதாவதோ என்பது அவ்வளவு முக்கியமல்ல. அவர்கள் சொல்வது என்னவென்றால், அவர்களதுசொந்த உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதே. எவ்வாறாயினும் புத்திஜீவிகளது கடமையும் பொறுப்பும் என்ன வென்றால் இலகுதரவல்ல ஒரு அரசியல் திட்டத்தை தயார் செய்வதே யாகும்.

மக்களது உரிமைகள் மறுக்கப்படுவதை ஒவ்வொருவரும் எதிர்க்கிறார்கள். இந்த எதிர்ப்புக்கள் வெவ்வேறு வடிவங்களில் வெளிப்படக் கூடும், விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் இப்போது தமது இறுதி வடிவத்தினூடாக அதை (ஆயுதப்போராட்டம்)க் காட்டுகிறார்கள். இந்த வகையில் ஒரு நிறுவனம் என்ற முறையில் அவர்கள் யார் உயிரோடு இருக்கவேண்டும்; யார் இருக்கக்கூடாது என்பதை தெரிந்து வைத்திருக்கிறார்கள். அவர்களது அரசியல் உளவியலின் ஒரு அம்சம் இதுவாகும்.

இதை விளங்கிக் கொள்வோமானால் இக்கட்டத்தில் எமது கவனம் உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதைவிட சகல மக்களும் சம உரிமைகளுடன் கூடிய கூட்டு வாழ்வினை உருவாக்குவதை எமது இலட்சியமாக கொண்டு இயங்குவதாக அமையவேண்டும் அதுவே இன்றைய தேவையாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சமுத்திரனின் கட்டுரை குறித்த சில குறிப்புகள்

திறந்த பொருளாதாரக் கொள்கையும் ஜனநாயகப் போராட்டத்தின் சவால்களும் எனும் தலைப்பில் சரிநிகரில் ஐந்து பகுதிகளாக ''சமுத்திரன்'' எழுதிய கருத்துக்களை கூடுதலாக அலசுவதைத் தவிர்த்து, விவாதத் தலைப்புடன் சமுத்திரனின் கருத்துக்களையும் தொட்டுச் செல்லலாம் என நினைக்கிறேன்.

பொருளாதார அபிவிருத்தி, அதிகாரப் பரவலாக்கம், ஜனநாயகம், சமஷ்டி எனும் எண்ணப்பாடுகளை அரசின் உள்ளார்ந்த நோக்கோடு ஆய்வுக்குட்படுத்துவது சிறந்ததாக அமையும்.

பொதுவாக அதிகாரப் பரவலாக்கலுக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. இங்கு அதிகாரப் பரவலாக்கல் என்பது ''செயல் திட்டத்தினை இலகுமயப்படுத்தல்'' (Simplification) அதாவது, மத்திய அரசு தனது அதிகாரத்தின் ஒரு பகுதியினை, மாகாண அல்லது மாவட்ட சபைகளுக்கு கொடுப்பதன் மூலம் அப்பிரதேசங்களை அபிவிருத்தி செய்தல் என்பதாகும். ஆனால் தமிழர்களின் போராட்டத்தினால் உருவாக்கப்பட்ட மாகாண சபையானது, வட - கிழக்கில் போதுமான வரையில் இயங்காமல் - ஏனைய பிரதேசங்களில் இயங்குகின்றது. இங்கும் செயற்திட்டத்தினை அமுல் படுத்துவதற்கு போதிய அதிகார கையளிப்பு காணப்படவில்லை.

மத்திய அரசு அதிகாரத்தினை பன்முகப்படுத்துமாயின் அதனை சமஷ்டி அல்லது கூட்டாட்சி என்றும் சொல்லலாம். இங்கு சமஷ்டி என்பது அதிகார பன்முகப்படுத்தல் மூலமே தோற்றம் பெறுகின்றது. உலகில் தூய சமஷ்டி இன்மையினால் பெயரளவான சமஷ்டியாக இந்தியா, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுடன் ஜனநாயக முதலாளித்துவ பன்முகப்படுத்தல் நாடுகளாக அமெரிக்கா, நெதர்லாந்து போன்ற நாடுகளையும் குறிப்பிடலாம்.

ஐ.தே.க ஆட்சியில் இருந்து நீக்கப்படு முன்னர் 10 வருடகால சராசரி பொருளாதார வளர்ச்சியாக 4.1% காணப்பட்டது. ஆனால் இக்கட்சியின் திறந்த பொருளாதாரக் கொள்கையின் அறிமுகத்தின் மூலம் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கலாம் என நினைத்தது. ஆனால் இலக்கினை அடையவில்லை. அதேவேளை ஸ்ரீ.சு.க ஆட்சியில் பொர்ருளாதார வளர்ச்சி இதைவிட அதிகமாகவே காணப்பட்டது. எனவே திறந்த பொருளாதாரக் கொள்கை மூலம் அரசு பொருளாதார வளர்ச்சியினை அதிகரித்துக் கொள்ள முடியவில்லை. இலங்கையில் திறந்த பொருளாதாரக் கொள்கை தோல்வியினையே தழுவியது என்பதே உண்மை.

ஜே.ஆரின் அரசானது திறந்த பொருளாதாரக் கொள்கை எனும் போர்வையில் கட்சியினையே பலப்படுத்தியது. இவரின் அதிகார மையப்படுத்தல் கொள்கையானது பொருளாதார வளர்ச்சி எனும் இலக்கினை விட, தனது எதிரியாக இருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் பிரஜாவுரிமையினைப் பறித்தல், தனது கட்சியின் போட்டியாளரான பிரேமதாசாவின் குண்டர்படைக்கு எதிராக தனது மகனின் தலைமையில் S.T.F எனும் படையணியினை ஆரம்பித்தல், இவற்றோடு அமைச்சராக பதவியேற்பவர்களிடம் இருந்து திகதியிடப்படாத பதவியிழப்பு கடிதம் கோரல் போன்ற நடவடிக்கைகளினூடாக பொருளாதார வளர்ச்சியினை அதிகரிக்காது மோசடிகளையே அதிகரித்தது.



பிரேமதாசாவின் ஆட்சியமைப்பில் நிர்வாகக் கட்டமைப்பானது மாற்றமடைகின்றது. அதாவது பிரதேச செயலகம் ஊடாக அரசு மக்களைப் பார்த்தல் எனும் செயற்பாடு வரவேற்கத்தக்கதாகும். ஆனால் அது அதன் இலக்கினை அடையவில்லை. அது வெறுமனே நிர்வாக அதிகாரிகளின் பயிற்சிநிலையமாகவும், மோசடி பன்முகப்படுத்தலாகவும் மாறியது. ஆனால் சமுத்திரனின் ஐ.தே.க பற்றிய குறைவான மதிப்பீடு இங்கு மாற்றமடைகின்றது. ஏனெனில், பிரதேச செயலக அதிகாரிகள் ஆக்கபூர்வமாக செயற்பட்டிருப்பார்களாயின் வெற்றிகரமான நிர்வாகக் கட்டமைப்பாக மாறியிருக்கும்.

இலங்கையின் நிர்வாகக் கட்டமைப்பு தீவிர பணித்துறையாட்சியமைப்பாக காணப்படுவதனால், ஜனநாயகம் அல்லது ஊழியச் சுதந்திரம் என்பதனைக் காண முடியாது. அரசு தொழில் சட்டத்தினை அமுல்படுத்தினாலும் அதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கும் இடையிலான இடைவெளி அதிகமாகவே காணப்படுகின்றது.

இலங்கை போன்ற முதலாளித்துவம் செறிந்த திறந்த பொருளாதார கொள்கையில் ஜனநாயகம் என்பதனைக் காண முடியாது. எனவே பொருளாதார வளர்ச்சி என்பது தாமதமாகவே அமையும். இதனால், வருமான சமமின்மை, வறுமை, வேலையற்றோர்படை என்பன அதிகரித்துக் கொண்டே செல்லும்.

சமுத்திரன் குறிப்பிடுவது போல் தீவிர ஜனநாயகம் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியம் அல்லது கூடிய ஜனநாயகம் அவசியம். ஏனெனில் தூய ஜனநாயகத்தை எங்கும் காண முடியாது. அதிகாரப் பரவலாக்கலின் மூலம் ஜனநாயகத் தன்மையுடன் பொருளாதார வளர்ச்சியினை அடைய முடியும். அதற்கு அரசு நீண்ட காலப் பொருளாதாரக் கொள்கையினை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். உதாரணமாக, ஜப்பானை எடுத்து நோக்குவோமாயின் ஏனைய நாடுகள் தொழில்நுட்ப ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் நெருங்க முடியாமல் உள்ளது. இதற்கு நீண்டகாலப் பொருளாதாரக் கொள்கையும், இதனை அடைந்து கொள்ள ஊழியருக்கு கூடுதலான சுதந்திரமும், அதாவது பங்குபற்றும் தலைமைத்துவம் (Participating leadership), தீர்மானம் எடுத்தலில் ஊழியர்கள் பங்குபற்றல், அதாவது தரச்சுற்று (Quality Circle). அத்தோடு, ஊழியர்கள் நிறுவனத்தின் இலக்கினை அடைதலில் கண்ணும் கருத்துமாக இருக்குமாறு ஒழுங்குபடுத்தல், மக்களை நோக்கிய நலன் என்பவற்றாலே ஜப்பானை ஏனைய நாடுகள் வெற்றிபெற முடியாமல் உள்ளது.

சமுத்திரன் எதிர்பார்க்கும் பொருளாதார வளர்ச்சிக்கு பன்முகப்படுத்தல் இலங்கைக்கு சாதகமாக அமையாது. உண்மையான பன்முகப்படுத்தல் அபிவிருத்தி அடைந்த அல்லது அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்குப் பொருந்தும். ஆனால் இனப்பிரச்சினை தீர்க்கப்படுமாயின் வட.கிழக்கின் அபிவிருத்தியானது, நீண்டகால நோக்கில் மையப்படுத்திய அதிகாரத்தினைக் கொண்டதாக அமைதல் வேண்டும். அதற்கு அதிகாரத்தில் இருப்பவர் தூய அபிவிருத்தி எண்ணம் கொண்டவராக காணப்படுதல் வேண்டும். அதன் பின்னர் நிர்வாகத்தை பன்முகப்படுத்தலாம். கியூபா எனும் நாடு தோற்றம் பெற்ற பின்னர் தனது நாட்டுக்காக ''பெடெல் காஸ்ட்ரோ'' தன்னிச்சையாகச் செயற்பட்டார். அதே போல் கொங்கொங் நாடும் உள்ளது.

இல்ங்கை மத்திய அரசிடம் பன்முகப்படுத்தல் மூலம் அதிகாரங்களை வட.கிழக்கு பெற்ற பின்னர் வட.கிழக்கில் அதிகார எ மயப்படுத்தல் மூலமே மோசடியற்ற நிர்வாகக் கட்டமைப்பினையும் உரிய காலத்தில் இலக்கினையும் அடைந்து கொள்ள முடியும்.

**ச.தியாகராசா**

---

## தொடரும் விவாதம்: 5

# தமிழ்த் தேசியவாதம்: சுய அழிவை நோக்கி...

**எஸ்.திருநாவுக்கரசு**

சரிநிகர் ஆசிரியர் பீடத்தின் கட்டுரை பற்றி.......

தேசியவாதம் ஒரு இனத்தின் அல்லது தேசத்தின் நலன்களைப் பாதுகாப்பதற்கான கூறுகளை மாத்திரமல்ல, தேசியவாதத்தின் தன்மையைப் பொறுத்து இனவாதத்தை அல்லது மேலாதிக்கத்தையும் உள்ளடக்கியதாகவே இருக்கும். அளவு ரீதியில் எது அதிகரிக்கின்றதோ அதை வைத்தே தேசியவாதம் முற்போக்கானதா? பிற்போக்கானதா? என்பதனைத் தீர்மானிக்க முடியும்.

22.11.94 இல் சரிநிகர் ஆசிரியர் பீடம் தேசியவாதம் இனவாதமா? என்ற தலைப்பில் கட்டுரை தீட்டியுள்ளது. இக்கட்டுரை தேசியவாதத்தில் இனவாதத்தின் கூறுகள் இருக்கலாம் எனக் கூறிக் கொண்டு இரண்டும் தனித்தனி விடயங்கள் அல்லது பேரினவாதம் மாத்திரம் தான் இனவாதம் என்பது போலவும் வெவ்வேறிடங்களில் குழப்பகரமாக அமைவதாகப்படுகிறது.

ஒடுக்கும் தேசம், ஒடுக்கப்படும் தேசம்; ஒடுக்கும் இனம், ஒடுக்கப்படும் இனம் என்ற நிலவரங்களை இல்லாதொழிப்பதற்காக ஒடுக்கப்படும் தேசங்கள், இனங்கள் பிரதானமாகப் போராடுகின்றன. தமது மொழி, கலாசாரம், நிலம் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்காக சமூக சமத்துவத்திற்காகப் போராடும் போது அதில் ஒரு ஜனநாயக உள்ளடக்கம் உண்டு.

இங்கு சிங்களவர்களின் தேசம், சிங்களவர்களின் நலன்களின் பாதுகாப்பின் பேரால் தமிழர்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக்கப்பட்டுள்ளனர். இந்த ஒடுக்குமுறைக் கெதிராக தமிழர்கள் சிங்களவர்களுடன் சரிநிகர் சமானமாக நடத்தப்பட வேண்டும் என்பதில்தான் தமிழ்த் தேசியவாதம் முற்போக்கானது.

ஆனால் அதன் உள்ளும், உடனும் இருக்கும் இனவாத அம்சம் இவற்றையெல்லாம் புறந்தள்ளி முஸ்லீம்களையும், சாதாரண சிங்களவர்களை விரோதிப்பதாக அண்டை நாட்டவர்களையும் மனங்கசந்து போகக் கொள்வதாக வளர்த்துள்ளது. அதன் குறுகிய இயல்பு சொந்தச் சமூகத்தினுள்ளேயே ஜனநாயக விரோதப் போக்கிற்கு வழிவகுத்துள்ளது. எனவே இங்கு அளவு ரீதியில் பிற்போக்கு அம்சங்கள் மேலோங்குகின்றன.

ஒடுக்கப்பட்ட இனத்தின் தேசியவாதத்தில் இருக்கக்கூடிய முற்போக்கான அம்சங்கள் எல்லாம் சிதைக்கப்பட்டு பிற்போக்கான கூறுகள் மேற்கிளம்பும் போது தேசியவாதத்தின் அந்தப் பக்கம் ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் முற்போக்காளர்களால் எதிர்க்கப்பட வேண்டும். ஆனால் சரிநிகரில் இந்தக்கட்டுரையில் மாத்திரமல்ல, வேறு கட்டுரைகளிலும் அத்தகைய ஆரோக்கியமான அம்சம் எப்போதும் காணப்பட்டதில்லை என்பது ஒரு துரதிஸ்டமானது.

நாம் எவ்வாறு ஒடுக்கும் தேசிய இனத்தின் இனவாத ஒடுக்குமுறைச் செயற்பாடுகளை எதிர்க்கிறோமோ, திணிப்புக்களை மறுதலிக்கிறோமோ அதே போல் ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் இனவாதக் கூறுகளை நிராகரிக்க வேண்டும். அது தமிழ்த் தேசியவாதத்தின் பக்கத்தில் மேலதிக முக்கியத்துவத்தைப் பெறுகிறது.

ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் தேசியவாதத்தில் உள்ள ஜனநாயக உள்ளடக்கத்தை, மனிதாபிமானக் கூறுகளை நாம் கருத்திற்கெடுத்தாக வேண்டும். அதே வேளை மனிதகுலத்திற்கு காட்டுமிராண்டி நிலையை நோக்கி வழிகாட்டும் ஆபத்தான இனவாதத்திற்கு ஆதரவளிக்க முடியாது.

கட்டுரையில் ஒரு பந்தி இப்படிக்கூறுகிறது. ''தமிழ் இனவாதம் என்பது தமிழ்த்தேசியவாதத்தின் பிற்போக்கான முஸ்லீம் மக்களுக்கெதிரான ஒருமுகம். இத்தகைய முகத்தைக் கொண்ட தேசியவாதம் தமிழ்த்தேசியவாதத்தின் அண்மைக்கால அரசியலில் முற்றாக நிராகரிக்கப்பட்டுவிட்டது. புலிகள் கூட இதனை வெளிப்படையாக உச்சரிக்கப்பயப்படுகின்றார்கள் ''.

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லீம் மக்கள் இன்னும் புத்தளம் அகதிமுகாம்களில் தான் இருக்கிறார்கள் என்பதனை சரிநிகர் ஆசிரியர் பீடம் மறந்துவிட்டதா?

புலிகளின் இனச்சுத்திகரிப்ப, புலிகளும் மாவீரர் குடும்பமும் தான் தமிழர்கள் என்றளவிற்குக் குறுகிய போக்குகள் அதிகரித்துள்ள வேளையில் அளவு ரீதியில் தமிழ்த் தேசியவாதத்தில் பிற்போக்கான அம்சங்கள் அதிகரித்துள்ளதாகவே கருத இடமுண்டு.

இது சுய அழிவினை நோக்கி இட்டுச் செல்லும் என்பதும் வரலாற்று விதிகளுக்கு விலக்கானதல்ல. ஆனால் அவர்களிடம் காணப்படும் இந்த அம்சங்களைவிட சரிநிகர் மிகமோசமான நிலைப்பாட்டை எடுத்துள்ளதாகவே கருத வேண்டும். அதுதான் இந்தச் சுய அழிவிற்கான சித்தாந்த நியாயங்களைத் தேடுவது. அதன் அடிப்படையில் எழுந்ததுதான் தமிழ்த் தேசியவாதத்தில் இனவாதம் இல்லை என்ற கருத்து.

ஒரு ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தின் தேசியவாதத்தை முற்போக்கா

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தொடரும் விவாதம் 6

## மருந்தாகப் பயன்படும் இனத்தேசியவாதம் வேறு! விஷமாகிவெளிப்படும் இனவாதம் வேறு!!

**சிசைரோ**

சிறுபான்மைத் தேசிய இனங்களது விடுதலைப் போராட்டங்களைப் பற்றித் தொடராக எழுதி வந்த இத்தொடரின் இறுதியில் இனத்துவத் தேசியவாதம் பற்றி எழுதலாம் என்றிருந்தேன். ஆனால் சரிநிகர் ஆசிரிய பீடமும் எம்.ஏ.நுஃமான் அவர்களும் இனத்தேசியவாதம் பற்றி எழுதிய கருத்துக்களால் இம்முறை அதே விடயத்தில் எனது கருத்துக்களைக் கூறுதல் பொருத்தம் என நினைக்கிறேன்.

சரிநிகர் ஆசிரிய பீடத்தின் கருத்தில் இனத்தேசியவாதம் வேறு, குறுகிய இனவாதம் வேறு. தமிழ்த் தேசியவாதம் என்பது தமிழ் இனவாதம் அல்ல என்று அவர்கள் கூறுகின்றார்கள். சிறுபான்மையினத்தின் போராட்டம் தவறாக விளங்கிக் கொள்ளப்படும் அபாயத்தை உளநாட்டு உதாரணத்தின் மூலம் சுட்டிக்காட்டுகிறார்கள். தமிழ்த்தேசிய வாதத்தில் இனவாத அம்சங்கள் இருப்பதும் உண்மையே என்பதை ஒப்புக் கொள்கிறார்கள் ஆசிரிய பீடத்தவர்கள்.

ஆனால், நுஃமான் இனத்தேசியவாதம் என்பது சாராம்சத்தில் இனவாதம்தான் என வாதாடுகின்றார். சமகால நடப்புக்களின்படி, இனத்தேசியவாதம் என்பது இன்னொரு இனத்தின் சங்காரத்தை தயக்கமின்றி தன்னில் கொண்டிருக்கும் என்றும் கூறுகின்றார். மூன்று வேறுபட்ட காலப்பகுதியில் தோன்றிய தேசியவாதங்கள் சாராம்சத்தில் வேறுபட்டவை என்பதும் அவரது கருத்து.

சாராம்ச விடயத்துக்கு வரமுதல், கையாளப்பட்டுள்ள சொற்களைப் பற்றிச் சிறிது கூறவேண்டும். சரிநிகர் ஆசிரிய பீடத்தவரும் சிங்கள இனவாதத்திற்கு Racism அல்லது Communalism என்பது பொருத்தப்பாடாக அமையலாம் என்கின்றனர். நுஃமானும் இனவாதத்தை Communalism என்ற பொருளில் பாவிப்பதாக எழுதியுள்ளார். இது தவறானது. இனவாதம் என்பது Communalism அல்ல. Commune என்பது ''குறிப்பிட்ட ஒரு குழு அல்லது பிரிவுக்குப் பொதுவாக உரிய'' என்ற பொருள்தரும் ஆங்கிலச் சொல்லாகும். ஏதேனும் ஒரு விடயத்தைப் குறிப்பிட்ட ஒரு வகுப்பு அல்லது குழுவின் பார்வையில் அணுகுவது என்றும் கூறலாம். ஆனால் நாங்கள் Communalism என்பதை ஏதோ இழிந்த ஒரு விடயம் என்றளவில் பாவித்துப் பழகிவிட்டோம். உண்மையில் இது தவறான பாவிப்பு. உதாரணமாக - தமிழரசுக் கட்சியின் தோற்றம், செயற்பாடு என்பவற்றை வைத்து அதை ஒரு Communal party என்று கூறினால் அது சரி. ஆனால் தமிழரசுக் கட்சி இனவாதக் கட்சி என்று பொருள்படுமா? செல்வநாயகம் இனவாதியா? எனவே முதலில் இந்தப் பொருள் மயக்கம் தெளிவாக்கப்பட வேண்டும். இனவாதம் என்பது சரிநிகர் கூறுவது போல இனமேலாதிக்கம். இனத்தை முதன்மைப்படுத்திய கீழ்தரமான ஒடுக்குமுறை. ஒருவிதமான 'உயர்மனப்பான்மை' இந்த மனப்பான்மைதான் மற்றொரு இனத்தின் சங்காரத்தைத் தன்னகத்தே கொண்டிருப்பது.

இனிச் சாராம்ச விடயத்துக்கு வருவோம். நுஃமானின் கருத்தில் எனக்கு உடன்பாடில்லாதவற்றை முதலில் குறிப்பிட விரும்புகிறேன். பின்பு ஆதாரங்களைப் பார்ப்போம். மூன்று வகையான தேசியவாதங்களை அடையாளம் காட்டும் இவர் இவை மூன்றுமே சாராம்சத்தில் வேறுபட்டவை என்கின்றார். இல்லை, இவை சாராம்சத்தில் ஒன்றுதான் என்பதே எனதுவாதமாகும். ஒரே இனம், ஒரே பிரதேசம், ஒரே மொழி என்ற வகையில் மக்களை ஒன்றுபடுத்தும் போது என்ன உணர்வு இருந்ததோ அதுதான் இன்றும் இனத்தேசியவாதிகள் மனதில் இருப்பது. 'தங்களைத் தாங்களே ஆளவேண்டும்' என்பதே இந்த உணர்வு. இந்த 'தங்கள்' என்பது யாரை என்பதே காலத்துக்குக் காலம் வேறுபட்ட வியாக்கியானங்களைக் கொண்டிருந்தது. குடியேற்ற நாட்டு மக்களை இந்த 'தங்களாக'ப் பார்த்த லெனின் பின்பு இனத்தேசியங்களை அப்படிப் பார்க்க விரும்பவில்லை. ஆனால், இனத்தேசியத்தின் தொழிலாளர் வர்க்கத்தினில் இந்த (பிரிவினை) உணர்வு தலைப்பட்டால் அதை ஆதரிக்க வேண்டும் என்றார் லெனின். அதாவது இந்தத் 'தங்கள்' என்பது யார் என்பதில் சரிபிழை பார்க்கப்பட்டதே தவிர அடிப்படை உணர்வினில் வேறுபாடு காணப்பட்டதாக இல்லை.

எனவே, இனத்தேசியவாதம் தவறென்றால் தேசிய அரசுகளை உருவாக்கிய முதலாவது, குடியேற்றவாதத்துக்கு எதிராகப் போராடிய இரண்டாவது, தேசியவாதமும் தவறென்றுதான் அமையும்.எந்தச் சூழ்நிலையில், யார் இனத்தேசிய வாதத்தை முன்னெடுக்கிறார்கள் என்பது முக்கியமே தவிர அதன் உள்ளார்ந்த அம்சத்தில் தவறு காண்பதில் பிரயோசனமில்லை. இனத்தேசியவாதம் தவறென்றால் எந்த அடிப்படையில் இனங்களின் பிரிந்து போகும் உரிமை உள்ளிட்ட சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து சோவியத் யூனியன் உருவாக்கப்பட்டது என்பதை நுஃமான் விளக்குவாரா? லெனின் ஏன் இந்தச் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும்? இனத்துவ அடிப்படையில் தேசியங்களது உரிமைகளை அங்கீகரித்தாரா இல்லையா என்பதற்கு நுஃமான் என்ன பதில் தருவார்?

இதையடுத்து Ethno Nationalism '' இவ்வகையில் சிங்கள தேசியவாதம், தமிழ்த்தேசியவாதம் என்பதெல்லாம் இனத்தேசியவாதமே'' என்று வாதிடுகின்றார் நுஃமான். எங்கே அடிப்படையில் அவர் தவறுகின்றார் என்பது இந்தவாதத்தினால் பளிச்சிடுகின்றது. சிங்களத் தேசியவாதம் என்பது 1920களிலிருந்த நிலைவேறு. 1950களின் பிற்பகுதியில் உருவாகியவிதம் வேறு. 1950களில் முளைத்தது இனவாதமே தவிரத் தேசியவாதமல்ல. 1920களில் தோன்றியது சுதந்திரம் பெறும் வேட்கையுடன் கூடியது. இது தன்னகத்தே பிறிதொரு இனத்தின் சங்காரத்தை உள்ளடக்கியதாக இருந்திருக்க முடியாது. அப்படியிருந்திருப்பின் இலங்கை சுதந்திரம் பெற்றதில் தமிழ்த்தலைமைகளின் பங்களிப்பை நாமே நிராகரிப்பதாக அமையும்.

> **தமிழ்த்தேசியவாதம் பிறந்தபோது இலங்கையில் இதனை இடதுசாரிகள் சரியாக அடையாளங் காணவில்லை. இன்று நுஃமான் கூறுவதுபோலவே அன்றைய இடதுசாரிகளும் 1960களின் நிலைமையை இனவாதமாகப் பார்த்தார்கள். 90களில்தான் அவர்களுக்கும் ஞானம் பிறந்தது. அன்று சரியாக அடையாளங்காணப்பட்டு தமிழ்த் தேசியவாதத்தின் தலைமையினை இடதுசாரிகளும் பங்கிட்டிருந்தால் வடக்கே பிரபாகரனும் தெற்கே தினேஸ் குணவர்த்தனாவும் நளின் டி சில்வாவும் உருவாகியிருக்க மாட்டார்கள்.**

''இனவாதம் என்பது குறிப்பிட்ட இனக்குழுவின் நலன்களை அடிப்டையாகக் கொண்ட ஒரு கருத்து நிலையென்கிறார். இது பூரணமான கூற்றாகப்படவில்லை. இனவாதம் என்பது கருத்து நிலை ஆக்கிரமிப்பும் அடக்கு முறையுமாகும். நலன்கள் என மட்டும் கூறுவது போதாது.'இனவாதம் அரசியல் ஆதிக்கத்துக்கான கருத்தியலாக மாறும் போது அது இனத்தேசியவாதமாக முதிர்ச்சியடைகின்றது' என்கிறார் நுஃமான். இது தலைகீழான அணுகுமுறையாகப்படுகின்றது. உண்மையில் இனத்தேசியவாதத்திலிருந்து தாராளவாதிகளும் இடதுசாரிகளும் புறக்கணிக்கப்பட்டு வடிகட்டியெடுக்கப்படுவதே இனவாதமாகும். இதற்கு இடமளிக்கக் கூடாதென்றுதான் லெனின் சில மட்டுப்பாடுகளை விதித்து இனத்தேசியத்தை அங்கீகரிக்க விரும்பினார்.

இதற்குச் சில உதாரணங்களைத் தர முடியும். இத்தாலியை ஒன்றிணைத்த மாஜினியையும், ஜேர்மனியைக் கட்டியெழுப்பிய பிஸ்மார்க்கையும் இனத்தேசியவாதிகளாகப் பார்க்கும் அதேவேளை முசோலினியையும் ஹிட்லரையும் அங்ஙனம் பார்க்க முடிவதில்லை. பின்னைய இருவரும் இனவாதிகள்/ பாசிஸவாதிகள் என்றே கருதப்பட வேண்டும். ஏனைய இனங்களின் சங்காரத்தை முன்வைத்துத் தேசிய வாதத்தை விதைத்தவர்கள் அல்ல முன்னைய இருவரும். ஆனால், அவர்களது வாதத்தின் படியமைந்த அரசுகளில் பின்பு அரசியல் மேலாதிக்கத்துக்காக வடிகட்டி எடுக்கப்பட்டவர்களே பின்னைய இருவரும்.

நுஃமானின் கருத்தினை எற்பதாயின் மாஜினியையும் பிஸ்மார்க்கையும் ஹிட்லருடனும் முசோலினியுடனும் சேர்த்துத்தான் நிறுத்திப் பார்க்க வேண்டியிருக்கும். இதை மிக அழுத்தமாக எதிர்ப்பது எமது கடமையாகப்படுகிறது. முதலில் இனத்தேசியவாதம் உருவாகிறது. அது பின்னர் வடிகட்டப்பட்டு இனவாதமாக மாற்றப்படலாம் என்ற நிலைப்பாட்டை இங்கும் வலியுறுத்த விரும்புகின்றேன். நுஃமானின் கருத்துப்படி பார்த்தால் ஹிட்லர் வளர்ந்து பிஸ்மார்க்காகவும் முசோலினி வளர்ந்து மாஜினியாகவும் உருப்பெற்றிருக்க வேண்டும். சமகால வரலாறு இங்ஙனம் உணர்த்துவதாகவும் கூறமுடியாது.

சரிநிகர் ஆசிரியபீடம் இனத்தேசிய வாதத்தை புனிதமானதென்றும் இனவாதம் விரும்பத்தகாததும் அசூசையானது என்றும் கருதுகிறது எனச்சாடும் நுஃமான் - இனமுரண்பாடு முதிர்நிலையடையும் போதுதான் இனவாதம் இனத்தேசியவாதமாக வளர்ச்சியடைகின்றது - என்கிறார். இது முற்றிலும் தவறான விளக்கவுணர்வாகும். இனமுரண்பாடு ஏன், எப்படி முதிர்நிலை அடைகின்றது என்பதை அவர் விளக்கவில்லை. அவர் விளக்க முற்பட்டிருப்பின் தனது கருத்தின் அடிப்படைத் தவறை அவரால் உணர்ந்து கொண்டிருக்க முடியும். இனத்தேசியத்தின் தலைமை தவறான கைகளில் போகும் போது மட்டுமே தேசியவாதம் தடம்மாறுகின்றது. அதையடுத்தே இனமுரண்பாடு முதிர்நிலையடைகிறது. இதன் அடுத்த கட்டமே இனவாதமாக அமைய முடியும். தலைமை ஏன் தவறான கைகளுக்குப் போகிறது என நுஃமான் பதில் கேள்வி தொடுக்கலாம். இங்கே தவறு தாராளவாதிகளின் மீதும் உண்டு. அதே அளவுக்கு இடதுசாரிகள் மீதும் உண்டெனலாம்.

ஒரு சிறிய உதாரணம். தமிழ்த்தேசியவாதம் பிறந்தபோது இலங்கையில் இதனை இடதுசாரிகள் சரியாக அடையாளங் காணவில்லை. இன்று நுஃமான் கூறுவதுபோலவே அன்றைய இடதுசாரிகளும் 1960களின் நிலைமையை இனவாதமாகப் பார்த்தார்கள். 90களில் தான் அவர்களுக்கும் ஞானம் பிறந்தது. அன்று சரியாக அடையாளங் காணப்பட்டு தமிழ்த்தேசியவாதத்தின் தலைமையினை இடதுசாரிகளும் பங்கிட்டிருந்தால் வடக்கே பிரபாகரனும் தெற்கே தினேஸ் குணவர்த்தனாவும் நளின் டி சில்வாவும் உருவாகியிருக்க மாட்டார்கள். நுஃமான் இன்னும் 'பழமையிலிருந்து' விடுபடவில்லை என்பதை அவர் ''இலங்கை போன்ற பொருளாதார வளர்ச்சி குன்றிய பல்லின சமூகங்களைக் கொண்ட ஒரு நாட்டில்...'' என எழுதுவதை வைத்துத் தெளிவாக அறிய முடிகிறது.

லெனின் ஆரம்பத்தில் எல்லாவகைத் தேசியவாதங்களையுமே ஏற்றுக் கொள்ள விரும்பாதவராகவே காணப்பட்டார். ஆனால் பின்னர் இனம், மொழி, கலாசாரம், பிரதேசம் என்ற பிளவுகளுக்கு மேலாக வர்க்க ஒருமைப்பாடு இவற்றை மேவிநிற்கும் என்று நம்பிய பின்னரே சிறுபான்மைத் தேசியங்களது சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க முன்வந்தார். இதன்படி கூறுவதானால் நோயில்லாமல் மருந்துக்கு அவசியமில்லை. அடக்குமுறை அல்லது மேலாதிக்கம் என்ற நோய் ஏற்படும் போதுதான் தேசியவாதம் என்ற மருந்துக்கு வேலை. நுஃமான் நோயைத் திட்டாமல் மருந்தைத் திட்டப் பார்க்கிறார்.

இதை இன்னொரு விதமாகவும் விளக்கலாம். இனத்தேசியவாதம் என்பது ஒருவகை எதிர்த்தாக்குதல் ஆகும். தன்மீதான தாக்குதலுக்குப் பதிலளிப்பது (Defensive) இது. ஆனால் இனவாதம் இன்னோர் இனத்தின் மீது தாக்குதல் தொடுப்பது அல்லது சங்கார வேலையிலீடுபடுவது. இந்த முனைப்பு (Offensive) கேவலமானது. அசூசையானதுதான். ஏனெனில் எத்தகைய மேலாதிக்க உணர்வுக்கு எதிராகத் தேசியவாதம் தோன்றியதோ அத்தகைய மேலாதிக்க உணர்வில் குறிப்பிட்ட இனத்தைக் கொண்டுபோய் நிறுத்திவிடுகிறது. எனவேதான் தேசியவாதப் போராட்டங்கள் சரியான பாதையில் செல்லாதபோது இனவாதப் படுகுழியில் இடறி விழலாம்.

தேசியவாதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோர் அது Nation state க்காக இருப்பினும் சரி, விடுதலைக்காக இருப்பினும்சரி அல்லது பிரிவினைக்காக இருப்பினுங்கூட தமது குழுவினருடைய (இன, மொழி, மத, பிரதேச) பூரணமான விசுவாசத்தை எதிர்பார்த்து (absolute loyelty) நிற்பது விந்தையல்ல. இங்கே இரத்தஞ் சிந்துவோர் தியாகிகளாவது மட்டுமன்றி விசுவாசத்தை அடகுவைப்போர் துரோகிகளாவதும் அதற்காகத் தண்டிக்கப்படுவதும் உண்டு. வரலாற்று ஆதாரங்களை அடுக்கித்தான் இதனைப் புரிந்து கொள்ள வேண்டுமா?

சிங்களத் தேசியவாதம் Defensive நிலையிலிருந்து விடுபட்டு (1948) பின்னர் Offensive நிலைக்கு 1950களின் பிற்பகுதியில் மாறிய போதுதான் தமிழ்தேசியவாதம் Defensive ஆகப்பிறந்தது. ஆனால் அது Offensive ஆக மாறிவிட்டது என நுஃமான் யாழ் முஸ்லீம்கள் விரட்டப்பட்டதை வைத்துக் கூறுவதை என்னால் ஏற்க முடியாது. இந்தக் குற்றச்சாட்டு உண்மையாக வேண்டுமானால் தமிழ்த்தேசிய இனம் சிங்களத் பேரினவாதத்திலிருந்து முற்றாக விடுவிக்கப்பட்ட பின்பு Offensive நடவடிக்கைகளில் ஈடுபட்டது என்றிருக்க வேண்டும். தமிழ்த்தேசிய இனம் இன்னும் Defensive நிலையிலிருக்கும் போது அது அட்டூழியம் புரிகின்றது எனக் கருதுவது சரியல்ல.

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட ஒவ்வொரு முஸ்லீம் ஜீவனுக்காகவும் நான் ஆயிரம் தடவைகள் மன்னிப்புக் கேட்கத் தயார். ஆனால் இது தமிழ்த் தேசிய இனத்தின் இனவாதத்தின் விளைவு என்

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 'நற்பிட்டிமுனை' சம்பவம்




என்.சர


"ஐயோ! விடுங்களடா.. என்று மகனை விடுங்கடா உங்களுக்கு என்ன பாவமடா செய்தனாங்க. எங்களுக்கு தெரியும்டா நீங்க என்ற மகன திருப்பி தரப்போறதில்ல. அவனை கொண்டுபோகாதீங்கடா'' அந்தத்தாய் காலைப்பிடித்தபடி கதறினாள். அந்த எஸ்.டி.எவ் காரனோ அவனைக் காலால் எத்தினான். பின்னாலேய அழுது கொண்டு ஓடி வந்த தகப்பனை கழுத்தால் பிடித்து நெரித்து "வீசினான்.

இது கற்பனையல்ல உண்மை. பத்து வருடங்களுக்கு முன்னால் நடந்த ராணுவ வெறியாட்டம் இது. 1983க்குப் பின்னர் வடக்குக்கு மட்டுமல்ல, கிழக்குக்கும் வெறியாட்டம் புரிய படையினரை அனுப்பி வைத்திருந்தது ஸ்ரீலங்கா அரசு. அந்த வெறியாட்ட நடவடிக்கைகளில் ஒரு சம்பவம் மட்டுமே 'நற்பிட்டிமுனை' சம்பவம் என்று அறியப்பட்ட சம்பவமாகும். கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் கல்முனைப்பகுதியில் உள்ள சிறு குடியிருப்பே இந்த நற்பிட்டிமுனை.

1985 மே மாதம் அனுராதபுரத்தில் பிக்குகள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து பொதுமக்கள் மீது அதன் பழியைத் தீர்ப்பதற்காக வடக்குக் கிழக்கு மாகாணமெங்கும் படையினரால் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கல்முனையில் நிலைகொண்டிருந்த படையினரில் விசேட அதிரடிப்படையினர் (STF - Special task force ) வீதியெங்கினும காணுகின்ற இளைஞர்களை பிடித்து அடித்து டிறக்கில் ஏற்றிக் கொண்டு நற்பிட்டிமுனைக்கு வந்து சேர்ந்தனர். அப்பகுதியைச் சுற்றி வளைக்கும் போது நேரம்; அதிகாலை 6.15 நற்பிட்டிமுனை விழித்திருக்கவுமில்லை. படையினரின் அட்டகாசமே அவ்வூரை விழிக்கச் செய்திருந்தது. கதவுகளை வெறித்தனமாகத் தட்டியும், உடைத்தும் உள்ளே சென்ற படையினர் தூக்கத்தில் இருந்தவர்களில் இளைஞர்கள் எங்கே எனத் தேடினர். கண்ணுக்கு அகப்பட்ட இளைஞர்களை வெறித்தனமாக இழுத்துத் தாக்கிக் கொண்டு சென்றனர்.

கதறிக் கொண்டு பின்னால் வந்த தாய்மாரையும் தகப்பன்மாரையும் பொல்லுகளாலும், துப்பாக்கிகளாலும் தாக்கி தூசண வார்த்தைகளால் திட்டி துரத்தினர். ட்றக்குகளில் ஏற்றப்பட்ட பிள்ளைகள் எங்கு கொண்டு செல்லப்பட்டார்கள் என்பதை உறுதியாக எந்தப் பெற்றோராலும் அறிய முடியவில்லை.

ஒரு தாய் இப்படிக் கூறுகிறார் "அன்று வீட்டை விட்டு வெளியே போகும் அளவுக்கு சூழ்நிலை இருக்கவில்லை. வீதியெங்கிலும் மயான அமைதி வெளியில் போக முடியவில்லை. அப்படியிருந்தும் ஒரு சிலர் மாத்திரம் கல்முனை பிரஜைகள் குழுவிற்கு (Citizen committee) சென்றோம். அங்கிருந்து சில முகாம்களுக்கும் சென்று முறையிட்டோம். பிள்ளைகள் இருக்கிறார்கள், என்றும் விரைவில் அனுப்பி வைப்போம், என்றும் சொன்னார்கள். நாங்கள் எவ்வளவோ கெஞ்சிக் கதறியும் அன்றே விட மறுத்தார்கள். எங்களால் அவர்களில் நம்பிக்கை வைக்க முடியவில்லை"



செல்வநாயகத்தின் தாய் மாரிமுத்து

நற்பிட்டிமுனையில் இருந்து மாத்திரம் 23 பேர் அன்றைய தினம் கொண்டு' செல்லப்பட்டிருந்தார்கள். கடத்தப்பட்டு இரண்டு நாட்களின் பின்னர் அந்தப் பெற்றோருக்கு பேரதிர்ச்சி தரும் செய்தி அந்தப் பகுதியில் பரவியது. "கொண்டு செல்லப்பட்ட பிள்ளைகளை தமிபிலுவில் என்னும் பகுதியில் கிடங்குகள் தோண்டி புதைத்து விட்டார்கள்'' என்பதே அந்தச் செய்தி. நள்ளிரவில் டிரக்குகளில் கொண்டுவரப்பட்ட இளைஞர்களின் சடலங்களை படையினர் புதைக்கும் போது அங்கு மலம் கழிக்க வந்த விவசாயி தற்செயலாக கண்டதன் பலனே அச்செய்தி எல்லோருக்கும் கிடைக்கச் செய்திருந்தது.

பெற்றோர்களோ அது தங்களது பிள்ளைகளாக இருக்கக்கூடாது என குமுறினர். புதைகுழி பற்றி முக்கிய் நிறுவனங்களுக்கு சிலர் செய்தி அனுப்பியதன் விளைவாக இராணுவத்தினருக்கு இது பற்றி விசாரிக்கும்படி கோரப்பட்டது. அதன் படி தம்பிலுவில் பகுதியில் புதைக்கப்பட்டதாகக் கூறப்பட்ட அந்த மனிதப் புதைகுழிகளை கிண்டினர். கிண்டும் போது சில பெற்றோர்கள் சார்பில் ஐந்து தகப்பன்மார் சென்றிருந்தனர். இன்று அவர்களில் உயிருடன் இருப்பவர்கள் இருவர். அதில் ஒருவர் தங்கராசா குலசேகரம் ( கொல்லப்பட்ட இளைஞர் செல்வநாயகத்தின் தகப்பன்) இவர் இது பற்றிக் கூறும் போது

"ஐந்து கிடங்குகளில் புதைக்கப்பட்டதாகக் கிடைத்த தகவலினால் குறிப்பிட்ட ஐந்து கிடங்குகளில் தோண்டினர். ஆனால் இரு கிடங்குகளில் இருந்து மட்டுமே பையன்களின் அழுகிய உடல்கள் கிடைத்தன. அந்தக் கிடங்குகளில் இருந்து சாரம் சேட் அடையாள அட்டை என்பனவும் கிடைத்தன. ஒரு அடையாள அட்டை தம்பிமுத்து பாக்கியராசா என்னும் பையனுடையது. அப்போதே உறுதியாகி விட்டது கிடங்கில் இருந்தது எங்களது பிள்ளைகளே என்று'' எனத் தேம்பித் தேம்பி அழுதார். அவர் தொடர்ந்து கூறும் போது அக்கிடங்கில் இருந்து நான்கு ஐந்து என சடலங்கள் தொடர்ந்து கிடைத்துக் கொண்டிருந்தபோது 'புதைக்கப்பட்டுத்தான் இருக்கிறது' என கூறி இராணுவ அதிகாரிகள் தொடர்ந்து தோண்ட விடாது மீண்டும் குழிகளை மூடிவிட்டனர். இன்று வரை அது பற்றி எந்த விசாரணையோ எந்த நடவடிக்கையோ எடுக்கப்படவில்லை'' என்றார்.



செல்வராஜாவின் மனைவி புனிதவதி.

இந்தப் பெற்றோர்களில் சிலர் தங்களது மகன்மார்களுக்கு ஈமச்சடங்குகளை செய்துவிட்டனர். இன்னும் சிலர் தங்களது பிள்ளைகள் இன்னும் இருக்கக்கூடும் என எதிர் பார்க்கிறார்கள்.

இந்த 23 பேரில் 8பேர் திருமணமானவர்கள். பிள்ளைகளும் இருக்கிறார்கள். அவர்களது விதவை மனைவிகள் இன்னும் பிள்ளைகளுடன் பெரும் பொருளாதாரப் பிரச்சினையை எதிர்நோக்குகின்றனர்.

சம்பவத்தின் போது தனது சுதாகரன், முரளிதரன் எனும் இரண்டு அண்ணன்மாரையும் ஒரே தடவையில் பறிகொடுத்த தங்கை சுமதி இருபற்றிக் கூறும் போது,



பூபாலசிங்கத்தின் மனைவி கோகிலா

"எங்கள் அண்ணன்மார் இரண்டுபேரையுமே கொன்றுபோட்டிருப்பார்கள் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

இன்று நாங்கள் படும் கஷ்டங்களுக்கு மத்தியில் நமது நஷ்ட ஈட்டுத் தோகையைப் பெறுவதற்காக பத்து வருடமாக முயற்சிக்கிறோம். ஒரு பயனும் இல்லை. கச்சேரியில் மரண அத்தாட்சி தர மறுக்கிறார்கள். விண்ணப்பப் படிவத்தில் 'பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டவர்கள்' என நிரப்பினால் இலகுவாக கிடைக்கச் செய்வோம் என்கிறார்கள். ஆனால் எங்களுக்கு இஷ்டமில்லை. எங்கள் அண்ணன்மாரை அதிரடிப்டையினர் தான் கொண்டு சென்றார்கள், நாங்கள் எப்படிப் 'பயங்கரவாதிகளால்' எனப் பொய் சொல்வது. எங்களில் ஒரு சிலர் 'பயங்கரவாதிகளால் பாதிக்கப்பட்டவர்கள்' என நிரப்பிக்கொடுத்து நஷ்ட ஈட்டுத் தொகையைப் பெற்றுக் கொண்டு விட்டனர். அப்படிச் செய்ய எங்களால் முடியாது.

கட

| பெயர் |
|---|
| காசிப்பிள்ளை |
| குணரெத்தின |
| குணரெத்தின |
| குழந்தைவேல் |
| வீரக்குட்டி தங் |
| மயில்வாகனம் |
| வெள்ளைப்பெ |
| தம்பிமுத்து பா |
| வரதராஜன் வ |
| சதாசிவம் தங் |
| சிறாதபிள்ளை |
| ஏகா[illegible]ம் தம் |
| கன[illegible]ம் கே |
| ஞானப்பிரகா |
| கணபதிப்பிள் |
| ஆறுமுகம் ந |
| ராசமாணிக்கம் |
| தம்பிராஜா வி |
| துரையப்பா ந |
| இளையதம்பி |
| கனகரத்தினம் |
| கந்தப்போடி |
| குலசேகரம் |



கொல்லப்பட்டவர்களின் தாய்ம


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# னவுகள் ில்லை!






தமிழ்வாணனின் சகோதரி பாக்கியம்

## ‘வீட்டைக் கொழுத்தியபின் புலிகளின் முகாமை அழித்ததாக வந்த செய்தி’

கொல்லப்பட்ட தமிழ் வாணனின் (வயது 19)அக்கா பாக்கியம் கூறுகிறார். ''1985 மே 17ம் திகதி வெள்ளிக்கிழமை எனது தம்பி எங்களது தாயை வணங்கி விட்டு ஏழு பதினைந்து அளவில் கோயிலுக்குப் போனான். சில நிமிடங்களுக்குப் பின் ஊரார் ஓடி வந்து எஸ்.டி.எவ்.காரன் சுற்றி வளைத்ததில் உன்ர தம்பியையும் அடித்துப் போட்டுக் கொண்ட போரான் என்றனர். நாங்கள் ஓடிப்போய்ப் பார்த்தோம் சந்தியில் அவனது சைக்கிள் மட்டும் விழுந்து கிடந்த நிலையில் பார்த்தோம். நாங்கள் பல முகாம்களுக்குப் போய் அழுது கதறினோம் பலனில்லை. கடைசியில் ஒரு கிழமைக்கு பிறகு 'தம்பிலுவில்'லில் கொனறு புதைக்கப்பட்டதாகக் கேள்விப்பட்டோம்.

இந்த சம்பவம் மட்டுமல்ல இதுக்குப் பிறகும் எங்கட குடும்பம் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்திருக்கிறது.

1986 ஜுலை 12ம் திகதி கோபாலன் என்ற ஒருவன் இன்னும் இரண்டு பேருடன் வந்து வீட்டில இருக்கிற 17 பவுண் நகையையும் ஆயுத முனையில் கொள்ளையடித்துவிட்டுப் போனான். 10நாட்களுக்குப் பிறகு ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்தைச் சேர்ந்த சிலர் அந்தக் கள்ளனைப்பிடித்துக் கொண்டு எங்கள் வீட்டுக்கு வந்து கள்ளனைக் காட்டி விட்டு அவனை அடித்துக்கட்டிக் போட்டுவிட்டு சென்றார்கள். அவன் மூத்திரம் பெய்ய வேண்டும் அவிழ்த்து விடுங்கோ என எங்களிடம் கேட்டான். நாங்கள் அவிழ்த்ததும் அவன் தப்பிச் சென்று இராணுவத்தினரிடம் போய் அந்த வீட்டில் புலிகள் இருக்கிறார்கள் எனக்கூறியிருக்கிறான்.

1986 ஒகஸ்ட 20ம் திகதி காலை எங்களது வீடு சுற்றிவளைக்கப்பட்டது. வீட்டுக்குள் படையினர் புகுந்து, இருக்கும் பொருட்களையெல்லாம் உடைத்தனர். எனது மகன்களான சந்திரகுமார், குணராஜ், ராசகுமார், செல்வராஜ் ஆகியோரை கடுமையாகத் தாக்கினர். நீங்கள் புலிகள் தானே? ஆயுதங்களை எங்கே மறைத்துள்ளீர்கள்? எனக் கேட்டு சித்திரவதை செய்தனர். கடைசியாக வீட்டையும் எரித்து நாசமாக்கி விட்டு எனது கணவரையும் (கந்தையா கதிரமலை) மூத்தமகன் சந்திரகுமாரையும் கொண்டு போனார்கள். எனக்குத்தலையில் தாக்கிய அடியினால் நினைவிழந்து விட்டேன்.

எனது கணவர் மூன்று மாதங்களுக்குப்பின் விடுவிக்கப்பட்டார் அவர் மிகவும் சித்திரவதைக்குள்ளாகியிருந்தார். இன்று அவரால் எந்தவொரு வேலையும் செய்ய முடியாது ஒரு முடமாகவே உள்ளார். எனது மகனை ஒன்பது நாட்களுக்குப் பின் விடுவித்தார்கள். என்றாலும் மூன்று மாதம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை கொடுத்ததனாலேயே உயிர் பிழைக்க வைக்க முடிந்தது. இன்றும் குளிர்காலம் வந்தால் எனது மகனின் கால்கள் வீங்கிவெடித்து அதிலிருந்து நீர் கொட்டும்.

அது மட்டுமல்ல எங்களை வெறித்தனமாக அடித்து நொருக்கி வீட்டையும் கொழுத்திவிட்டுப் போனபின் அடுத்த நாள் றேடியோ மற்றும் செய்திப் பத்திரிகையில், ''சேனைக்குடியிருப்பில் புலிகளின் முகாமை இராணுவம் தாக்கி சேதத்துக்குள்ளாக்கியதாகவும் பல புலிகள் தப்பிச் சென்றதாகவும் பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் செய்தி வெளிவந்தன''



சுதாகரன், முரளீதரன் ஆகியோரின் தாய் தவமணி

கல்வி வேலைவாய்ப்பு இன்னும் பல காரியங்களில் ''பிரச்சினையால் பாதிக்கப்பட்டோர் குடும்பங்களுக்கு வழங்கப்படும் சலுகையைக் கூட எங்களுக்குப் பெற முடிவதில்லை காரணம் மரண அத்தாட்சி பெற முடியாதிருப்பதே''.

பிள்ளைகளை இழந்த பெற்றோரும், கணவன்மாரை இழந்த மனைவிகளும், தகப்பனை இழந்த பிஞ்சுக் குழந்தைகளும், அண்ணன்மாரை இழந்த தம்பி தங்கைகளும் உருவாகிய இச்சூழ்நிலைகள் தமிழ் பேசும் மக்களுக்கு புதிதில்லை.

**பேரதிர்ச்சி தரும் செய்தி ஒன்று ‘நற்பிட்டிமுனை’ முழுவதும் பரவியது. “கொண்டு செல்லப்பட்ட பிள்ளைகளை கொன்று ‘தம்பிழுவில்’ பகுதியில் கிடங்குகள் தோண்டி புதைத்து விட்டார்கள்” என்பதே அந்தச் செய்தி.**

அதே போல் இரத்தம் தோய்ந்த கைகள் காயும் முன் மீண்டும் இரத்தத்தைத் தேடிப் போகும் படையினருக்கு இவை புதிதல்ல. ''ஆனால் இதற்கெல்லாம் தீர்வு தருவோம் எனக்கூறி மாறிமாறி ஆட்சியமைக்கும் அரசாங்கங்களுக்கு இவை புதிதா?

ஜே.ஆர் ஆட்சியின் போது காணாமல் போனோர் பற்றி விசாரிக்க பிரேமதாசா ஆணைக்குழு அமைத்தார். பிரேமதாசா, டி.பி.விஜேதுங்க ஆட்சிக் காலங்களில் காணாமல் போனோர் பற்றி விசாரிக்க சந்திரிகா ஆணைக்குழு அமைத்துள்ளார். இவை தவிரவும் இடையிட்டு



‘புவானிஸ்’ஸின் மனைவி சாரதா தேவி

நடந்த சம்பவங்கள் பற்றிய விசாரணைகளை மேற்கொள்ளவும் விசேட ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவை எதுவுமே பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியான தீர்ப்பினை வழங்கியதாக வரலாறில்லை. இந்த வகையில் விசாரணையே முடியாத நிலையில் பல சம்பவங்கள் விசாரணையே தொடங்கப்படாமல் பல சம்பவங்கள் அவற்றில் ஒன்றுதான் இந்த ''நற்பிட்டிமுனை''.

## னன்

க் ...ல்லப்பட்டவர்கள் விபரம்

| | வயது | மணமானவரா | பிள்ளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| ...மார் | 31 | ஆம் | - |
| ...ரன் | 23 | இல்லை | - |
| ...ிதரன் | 21 | இல்லை | - |
| ...னுத்துரை | 26 | ஆம் | 1 |
| | 27 | ஆம் | 3 |
| ...ஸ்வரன் | 27 | இல்லை | - |
| ...பராசா | 23 | இல்லை | - |
| ...சா | 27 | இல்லை | - |
| ...ரன் | 20 | இல்லை | - |
| | 23 | இல்லை | - |
| ...துரை | 23 | ஆம் | 2 |
| ...ன் | 19 | இல்லை | - |
| ...ிங் | 28 | ஆம் | 1 |
| ...னிஸ் | 22 | ஆம் | 1 |
| ...சதுரை | 22 | இல்லை | - |
| | 29 | ஆம் | 4 |
| ...ராசா | 23 | இல்லை | - |
| ...ந்தன் | 22 | இல்லை | - |
| | 23 | இல்லை | - |
| ...ராஜா | 30 | ஆம் | 2 |
| ...வல் | 17 | இல்லை | - |
| ...ஜா | 23 | இல்லை | - |
| ...யகம் | 26 | இல்லை | - |



மனைவிமாரும், சகோதரிகளும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கையில் 1965ம் ஆண்டு சோஷலிஸ அரசியல் தத்துவத்தை அடிநாதமாகக் கொண்டு திருவாளர். றோகண விஜேவீரா தலைமையில் 'ஜனதா விமுக்தி பெரமுன' - J.V.P (மக்கள் விடுதலை முன்னணி) தோற்றுவிக்கப் பட்டது. இதுவரை காலமும் இலங்கையை ஆண்டவர்கள், இலங்கையின் தொழிலாளர்களின் நலனில் அக்கறை காட்டவில்லை என்ற விரக்தியால் டார்கள். அது 1983ம் ஆண்டு ஏற்பட்ட வன்செயலோடு வெடித்தது.

1983ம் ஆண்டு கலவரம் இலங்கை எங்கும் பரந்து வாழ்ந்த அனைத்து தமிழ் மக்களையும் பாதித்தது. அரசுக்கோ அல்லது இலங்கையில் வாழ்கின்ற மக்களுக்கோ எவ்வித தொல்லைகளும் கொடுக்காது அமைதியாக வாழ்ந்து வந்த மலையக தமிழரும், உயிரையும், உடமைகளையும் இழந்து துயருற்ற கள் மீதும், நம்பிக்கை இழந்தனர். ஆயுதம் தாங்கிப் போராடி தியாகத்தின் மூலம் வெற்றிபெற நினைத்தனர்.

மலையகத்தில் ஆயுதம் தாங்கிய இயக்கங்கள் மீது, அரசாங்கம் தங்கள் கவனத்தைச் செலுத்தியது. 'முளையிலேயே கிள்ளிவிட வேண்டும்' என்ற எண்ணத்தில் சிந்தனை மாற்றம் கொண்டவர்களை எப்படி அன்றைய தொழிற் சங்கங்கள் 'கிள்ளிவிட நினைத்ததோ'

## மலையக அரசியல் கலாசார அமைப்புகள் –15

# மலையகத்தில் ஆயுத இயக்கங்களை அழித்தொழித்தது அரசு

## வி.ரி.தர்மலிங்கம்

இளைஞர்கள் இவ்வமைப்பை, ஆயுத பலத்தின் மூலமும் ஆட்சியைக் கைப்பற்றுவதை நோக்கமாகக் கொண்டு உருவாக்கினர். இலங்கையில் தொழிலாளர்கள் அரசை உருவாக்க வேண்டும்; சட்டம் சமாதானம் நிலவவேண்டும்; இலங்கையின் சூழலைப் பாதுகாக்க மலைப்பிரதேசங்களில் காடுகளை வளர்க்க வேண்டும்; நிறுவனங்கள் அனைத்தையும் மக்கள் மயமாக்க வேண்டும்; மொழிகளுக்கு சமத்துவம் அளிக்கப்படல் வேண்டும் என்ற நோக்கங்களைக் கொண்டு இது செயற்பட்டது. இத்தீவிரவாத இயக்கத்தில் இளைஞர்கள் பலர் இணைந்தனர். இவர்கள் தங்களின் ஆயுத பலத்தை 1971ம் ஆண்டு செயலில் காட்டினர்.

சுதந்திர இலங்கையின் வரலாற்றில், ஜனநாயக ஆட்சிக்கு எதிராக எழுந்த ஓர் ஆயுதப் புரட்சியை அரசாங்கம் தனது ஆயுதபலத்தால் அடக்கியது. பலர் இறந்தனர், இன்னும் பலர் சிறைகளில் அடைக்கப்பட்டனர். தேசிய ரீதியான இப்புரட்சி இயக்கத்தோடு இணைந்து செயல்பட்டவர்களென மலையகத் தமிழ் இளைஞர்களும் கைது செய்யப்பட்டனர். 1977ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி அரசு இவர்களை விடுதலை செய்தது. இத்தேசியப் புரட்சிவாத இயக்கத்தில் மலையகத்தவரும் பங்கு கொண்டுள்ளனர் என்பதை மறுக்க முடியாது.

மலையக மக்களின் 'அடிமை வாழ்வு' அறுத்து எறியப்படவேண்டும். அதை ஒரு வர்க்கப் புரட்சியின் மூலமே நிறைவேற்ற முடியும் என்ற கொள்கையில் இத்தீவிரவாத இயக்கத்துடன் இணைந்து மலையக இளைஞர்களும் செயற்பட்டனர். அவர்களின் எண்ணம் இவ் இயக்கத்தின் தோல்விகாரணமாக, கனவாக முடிந்துவிட்டது. தீவிரவாத இயக்கம் ஜனநாயக அரசியலுக்குத் திரும்பியும் தோல்வியைத் தழுவியதால் மீண்டும் தீவிரவாத அரசியலுக்கே திரும்பிவிட்டது. தீவிரவாதம் தென்னிலங்கை அரசியலில் இடம் பெற்ற வண்ணம் இருக்கிறது.

வட.கிழக்கில் பல ஆண்டுகாலமாக ஜனநாயக அரசியலை மதித்து, ஜனநாயக வழியில் தமிழர்கள் தங்களின் உரிமைகளைப் பெறப்போராடித் தோல்வியை அடைந்தனர். விரக்தியின் விளிம்பில் இருந்த இளைஞர்கள் தங்களின் உரிமைகளை வென்றெடுக்க ஆயுதப் போராட்டத்திற்கு அத்திவாரமிட்

னர். இலங்கையில் தங்களுக்கு பாதுகாப்பு இல்லையென வெளிப்படையாக தெரிந்து கொள்ளும் நிலை நேரடியாகவே தெரிந்தது. மக்களை வேற்றுமை இன்றி நற்பணி செய்து பாதுகாக்க வேண்டிய அரசாங்கம் சவால் விட்டு போருக்கு அறைகூவல் விடுத்த செயலைக்கண்டு உலகமே வியந்தது. மலையக மக்கள் கண்ணீர் விட்டுக் கதறினர். அவர்கள் உகுத்த கண்ணீர் கூரிய வாளாக மாறியது.

தென்னிலங்கை தீவிரவாத இயக்கமான 'மக்கள் விடுதலை முன்னணி' ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் இறங்கியது. வட-கிழக்கில் ''தமிழ்த் தீவிரவாத இயக்கம்''கள் இலங்கைப் படையினருக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்து இலங்கை ஆட்சிபீடத்தை எதிர்த்தன. மலையக மக்களின் பாதுகாப்பையும் உரிமை வேட்கையையும் வென்றெடுக்க இம்மனிதாபிமானமற்ற அரசுடன் ஆயுதம் தாங்கிப் போராட மலையக இளைஞர்களும் மிகவும் துணிவுடன் ஆரம்பித்தனர். இவர்களின் எண்ண அலைகளுக்கு வட-கிழக்குத் தமிழ் இயக்கங்கள் நல் ஆதரவை வழங்கின.

மலையக இளைஞர்கள் வட-கிழக்கின் இயக்கங்களின் துணிகரச் செயல்களினால் ஈர்க்கப்பட்டு அவ் இயக்கங்களில் இணைந்து பயிற்சி பெற்றனர். ''ஈழ மாணவர் புரட்சிகர இயக்கம்'' (EROS) ''ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி'' (E.P.R.L.F) ''தமிழ் ஈழ மக்கள் விடுதலை கழகம்'' (P.L.O.T) என்பன ஆர்வத்துடன் இவர்களை இணைத்துக் கொண்டன. இந்த அமைப்புக்களை மலையகத்தில் அறிமுகம் செய்து அதே பெயரில் மலையகத்திலும் இயங்க ஆரம்பித்தனர்.

மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுக்கவும், அவர்களின் பாதுகாப்புக் கருதியும், மலையக இளைஞர்கள் தனியாக இயக்கங்களை உருவாக்கினர். மலையக மக்களின் பிரச்சினைகளை சுதந்திரத்திற்குப் பின் வந்த அரசாங்கங்கள் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. மலையகத்தில் இயங்கிவரும், தொழிற்சங்கங்களிடம் மலையக மக்களின் நல்வாழ்வுக்கான திட்டங்கள் எவையும் இல்லை. இதன் காரணமாக இளைஞர்கள் அரசுமீதும், அமைப்புக்

அதே போன்ற செயலில் அரசாங்கம் ஆயுதம் தாங்குவோரை ஆரம்பத்திலேயே அடக்க எண்ணியது. அதன் ஆரம்ப நடவடிக்கையாக சந்தேகத்தின் பேரில் பலர் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்டு விடுதலையானோர் இன்னும் மலையக அரசியலில் பங்கெடுத்து வருகின்றனர். இவ்வாறு கைது செய்யப்பட்டபோது அவர்களின் விடுதலைக்காக மக்கள் போராட்டம் செய்து தங்கள் ஆதரவை நல்கிய சம்பவங்கள் இடம் பெற்றன. 1984ம் ஆண்டு பொகவந்தலாவ சென் மேரிஸ் மகா வித்தியாலய மாணவ மாணவிகள் சுமார் 24 நாட்கள் பாடசாலையை பகிஸ்கரித்து தங்களின் அதிபரின் விடுதலைக்காக போராட்டம் செய்து வரலாறு படைத்துள்ளனர். மலையக மக்களின் உணர்வுகளைத் தட்டி எழுப்பும் சமூகப் பற்றுக்கொண்டவர்களை அரசாங்கம் அடக்க எண்ணியது. தீவிரவாதச் சம்பவங்களை கருவியாகப் பயன்படுத்தி சமூகப்பற்றுடன் செயல்படுபவர்களைக் கைது செய்து சித்திரை வதைக்குள்ளாக்கி அடக்க முயன்றது.


தொழிற்சங்க தலைமைகள் மக்களின் அடிமை நிலைமையைத் தெளிவாக அவர்களுக்கு உணர்த்தவில்லை. மக்கள் உண்மைகளைத் தெளிவாக உணராமல் இருப்பது அரசுக்கும் அதன் பங்குதாரருக்கும் சாதகமாக அமைந்தது. ஜனநாயக ரீதியில் மக்களுக்கு அவர்களின் நிலையைத் தெளிவு படுத்துவதற்காக எழுந்த இயக்கங்கள் முறியடிக்கப்பட்டன. இதனால் ஆயுதம் தாங்கிப் போராட, மலையகத்தில் **'மலையக விடுதலை இயக்கம்'** (U.L.O) உணர்வாற்றல் கொண்ட சில மாணவர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டு இயங்கியது. **''மலையக மக்கள் விடுதலை இயக்கம்''** (U.P.L.O) திரு.பி.எ.காதர் அவர்களின் தலைமையில் தோற்றுவிக்கப்பட்டு இயங்கியது. இவைகள் அனைத்தையும் குறுகிய காலத்தினுள் அரசாங்கம் முறியடித்து தாங்கள் விழிப்புடன் இருக்கின்றோம் என்பதைக் காட்டிக் கொண்டது. அதனால் பலர் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு சிறையில் வாடினர்.

மலையக மக்கள் மீது ஆர்வமும், அக்கறையும் கொண்டு செயல்பட்ட அமைப்புக்களையும், அதனை ஆரம்பித்தவர்களையும், அதனோடு தொடர்பு கொண்டு செயல்பட்டவர்களையும் அடக்கிய அரசாங்கம். அவர்கள் முன் வைத்த பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க முன்வரவில்லை. அரசுடன் சேர்த்து முறியடிக்க உதவிய மலையக மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்ற அமைப்புக்கள், மலையக மக்களின் நல் வாழ்விற்காக வழிசமைக்கவில்லை. அரசாங்கம் மலையக மக்களை மாற்றாந்தாய் மனப்பான்மையுடனே நடத்துகின்றது.

வரும்

# தேசிச்சிப் பாடல்

எண்திசை நீண்டு உன்
உடலும், தலைகளும் அசைய
உறக்கம் கலைகிற
எனது பச்சை ஆதிசேடனே
என் இனிய மலையகமே...
எனது கனவுகளின் முகமே ....
எனது விழிகளில் மூள்கிற உயிர்ப்பே
பணிகிறேனம்மா....



காலம் காலமாய்
சோழ மண்டிலக் கரைகளில் இருந்து
கராவ, சலாகம, துராவ என்று இத்
தீவை வந்து வந்து தழுவிய
பல்நூறு மனிதப் பேரலைகளின் பின்
இறுதிஅலையாய் நாங்களும் வந்தோம்.
வலிமையோடு கரைகளில் தொற்றினோம்
வனங்களைக் கடந்தோம்.
குன்றில் மிதித்து
உன்னிடம் ஏறி வந்தோமம்மா....

தசாப்தம் ஒன்று கழியமுன்னமே
தம்மைச் சேர்ந்த அன்னிய மனிதரை
குடிகளாய் அணைக்குமே
நாகரீக மனிதரின் நாடுகள்....
போதி மரங்களுள் நுழைகிற காற்றே
'அன்பு செய்' என்று கீதமிசைக்கிற
இந்த மண்ணில்
நூற்றாண்டுகள் பின்,
ஏனெமக்கிந்த இழிவும் மிடிமையும்.

இனிய பச்சை 'ஆதிசேடனே'
நாமே உனது உயிரும் முகமும்
நாமே உனது கனவும் நனவும்....
தேயிலையோடும் ரப்பரோடும்
நம்மைப் பிணைக்கிற மனச்சங்கிலிகள் அற
கால் முளைத்த மலைகளாய் எழுகிறோம்
நாமே உனது பொன்னர், சங்கர்கள்....
நாமே உனது மதுரை வீரர்கள்.....
நாமே உனது மாரி அம்மன்கள்
நாமே உனது வீரமாகாளிகள்
நூறு நூற்றாண்டாய் எம்மை மூடிய
தேயிலை ரப்பர் சருகுகள் விலக்கி
ஒளியை எம் கண்களால் காண்கிறோமம்மா
ஒளியில் இவ்வுலகைப் பார்க்கிறோமம்மா...
விழித்தெழு எனது பச்சை 'ஆதிசேடனே'
எமது கனவுகளின் முகமாக
இலங்கைத் தாயின் மீழ் உயிர்ப்பாக...
விழித்தெழு.......

-வ.ஐ.ச ஜெயபாலன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# பெண்ணிலைவாத நோக்கில் தமிழ் சினிமா – 4

இதுவரை பார்த்தவற்றின் பின்னணியில் 1970க்குப் பின்னரான திரைப்படங்களில் பெண்கள் பற்றி எவ்வாறு நோக்கப்படுகின்றது என்பதைக் கவனிக்கலாம். இக்கால கட்டத்துத் திரைப்படங்களில் பெண்கள் பற்றிய கருத்துருவங்களைக் காணலாம். முக்கியமாக அடிமைகளாக, விதவைகளாக, தியாகிகளாக பல் தரப்பட்ட பெண்களைக் காணலாம். திரைப்படங்களில் அதிகமாகத் தியாகிகளாகச் சித்தரிக்கப்பட்ட பெண்களே அதிகம். கணவனுக்காகத் தங்களை இழந்து வேறு பெண்களைத் திருமணம் செய்ய வற்புறுத்துவதைப் பல திரைப்படங்களில் காணலாம். **தேனும் பாலும், பாலாடை, இரு மலர்கள், இரு கோடுகள்** தொடக்கம் பின்னர் வந்த **நூல்வேலி, சிந்துபைரவி** போன்ற திரைப்படங்கள் வரை இத்தகைய தியாகங்களைச் சந்திக்கலாம். கணவனுக்காக மனைவி பலவற்றைத் தியாகம் செய்வது பல திரைப்படங்களில் சந்திக்கக் கூடிய ஒன்றாகும். தியாகங்கள் பல தரப்பட்டனவையாக காணப்படுகின்றன. குடும்பம் முழுமைக்கும் தன்னைத் தியாகம் செய்வது ஒரு வகை. இத்தியாகம் தனது வாழ்க்கையையே தியாகம் செய்யும் அளவுக்குப் போய் விடுவதுண்டு. சில திரைப்படங்களில் உடலைத் தியாகம் செய்வதாகவும் அமைகின்றது.

காலங்களும், நாகரீகங்களும் மாறும் போது சம்பிரதாயங்களையும், சடங்குகளையும் மறக்கத் தலைப்பட்ட பிறரைக் கண்டு வெதும்பி புரோகிதத் தொழிலையே கைவிடுகின்றார் இராம சாஸ்திரி. **வீட்டில் 10 வயிறுகள்,** பல கோடி ஆசைகள். எட்டுக் குழந்தைகளுக்கு மூத்தவளான லலிதாவின் தோளில் குடும்பத்தின் சுமை ஏறுகின்றது. பெரிய குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்ற உரிய தொழிலாக விபச்சாரத்தை ஏற்க நேரிடுகின்றது. வறுமையின் தாக்குதலால் விபச்சாரியாக்கப்பட்ட லலிதாவை அவளது நிலைமையைத் தெரிந்தே ஓர் இளைஞன் திருமணம் செய்து கொள்கிறான். ஆனால் முடிவில் அவள் பைத்தியக்காரியாகிறாள். இது 1973ம் ஆண்டின் பாலசந்தர் சொன்ன **அரங்கேற்றம்** திரைப்படக்கதை. திருமணம் செய்து கொள்ளும் முடிவு சரியில்லையோ என நினைத்துக் கடைசிக் காட்சியில் லலிதாவுக்குப் பைத்தியம் பிடிக்க வைத்து விட்டார் பாலச்சந்தர். ஆனால் இங்கு உடலைத் தியாகம் செய்வதையும், பெண்களைத் தியாகப் பொருளாகக் காட்டுவதையும் காண முடிகின்றது. அவள் விபச்சாரத் தொழிலை விடுவதாக நினைக்கும் போது அவள் தம்பி மருத்துவக் கல்லூரிக்குப் பணம் வேண்டும் என்கின்றான். அப்போது அவள் வழி இல்லாமல் மீண்டும் அதே தொழிலில் இறங்குகின்றாள். இத்திரைப்படத்துக்கு எவ்விதத்திலும் சளைக்காமல் 1974ம் ஆண்டின் பாலச்சந்தர் **அவள் ஒரு தொடர்கதை** என்னும் திரைப்படத்தினை இயக்கினார். குடும்பத்தைத் துறந்து ஓடிப் போன தகப்பன், அவர் வரவை எதிர்பார்க்கும் தாய், ஊதாரியான அண்ணன் அவர்களது இரண்டு குழந்தைகள், விதவைத் தங்கை, திருமணத்திற்கு ஏங்கி நிற்கும் சின்னத்தங்கை, குருட்டுத்தம்பி ஆகியோரைக் கொண்ட இப்பெரிய குடும்பத்தில் சுமை மூத்தவள் கவிதா மேல் விழுகின்றது. கவிதாவுக்கு ஒரு காதலன். தன் காதலன் தன் விதவைத் தங்கை மேல் விருப்பங் கொள்வதை அறிந்து விட்டுக் கொடுக்கிறாள். பின் அண்ணன் திருந்தியதைக் கண்டு தனது மனேஜரைத் திருமணம் செய்யச் சம்மதிக்கிறாள். அண்ணன் கொலை செய்யப்படுகின்றான். தான் திருமணம் செய்ய இருந்த மனேஜரைத் தன் தங்கைக்கு மணம் முடித்து வைக்கின்றாள். மீண்டும் அவள் தலையில் சுமைகள் சுமத்தப்படுகின்றன. இத்திரைப்படம் தன்னுணர்வு கொண்ட கவிதாவின் தியாகங்களாலானது. இன்னும் நிறையத் திரைப்படங்களைத் தியாகத்திற்கு உதாரணமாகத் தரலாம். 1970ம் ஆண்டுக்கு முன்னர் தயாரிக்கப்பட்ட **குலவிளக்கு** போன்ற திரைப்படங்களுக்கு எவ்விதத்திலும் இது சளைத்ததல்ல. 1968ம் ஆண்டு வெளிவந்த **ஒளிவிளக்கு** திரைப்படத்தில் திருடனைத் திருத்தும் அந்த இளம் விதவை படம் முடிவில் விதவையாகவே இறந்து விடுகின்றாள். திருந்திய திருடன் வேறு ஒரு நாட்டு அழகியை மணந்து கொண்டு விதவையைச் சகோதரி என அழைக்கின்றான். ''விதவையைக் கலியாணம் செய்து கொள்வது போல நடித்தால் இரசிகர்கள் மத்தியில் தனது இமேஜ் கெட்டு விடும் என்று எம்.ஜி.இராமச்சந்திரன் கூறுகின்றார் என அறந்தநாராயனன் கூறுகின்றார். இது 1977ம் ஆண்டுக்கு முந்திய நிலை என்றால் பின்னரும் கூட விதவைகள் மறுமணம் செய்து கொள்வது தவிர்க்கப்பட்டது. **வைதேகி காத்திருந்தாள்** என்னும் திரைப்படத்தில் விதவைகள் மறுமணம் செய்து கொள்ள ஒரு சந்தர்ப்பம் கிடைக்கிறது. கருத்து ரீதியாக அதை ஏற்க முடியாது திருமணமும் தடைப்பட்டு விதவையும் கொலை செய்யப்படுகின்றாள். **நாள் எல்லாம் பௌர்ணமி** என்ற திரைப்படமும் விதவை மறுமணம் செய்யக்கூடாது என்பதையே வலியுறுத்துகின்றது. பொதுவாக விதவை மறுமணம் செய்வதைக் கொள்கை அளவில் எதிர்த்து வந்த தமிழ்த் திரைப்பட உலகில் சில படங்களும் வித்தியாசமாக வெளி வந்தன. **அவள் ஒரு தொடர்கதை** என்னும் திரைப்படத்தில் விதவை மறுமணம் செய்து கொள்வது காட்டப்படுகின்றது. இவ்வாறு மேலும் சில படங்கள் வெளிவந்தன. **நான் பாடும் பாடல்** என்னும் திரைப்படம் இன்னொரு வித்தியாசமான கருத்தைத் தருகின்றது. கதா நாயகி கணவனை இழந்தவள் என்றாலும் பொட்டு வைத்து வர்ணத்தில் சேலைகள் அணிபவள். இன்னொருவன் இவள் பால் ஈர்க்கப்படுகின்றான். கதா நாயகியும் எந்த ஒரு விகற்பமும் இல்லாமல் இவனுடன் சிரித்துக் கதைத்துப் பழகுகின்றாள். அவன் தனக்குள் காதலை வளர்க்கின்றான். காலப்போக்கில் அவள் சுப காரியங்களிலும் ஈடுபடுகின்றாள். இவன் அவள் தன்மேல் விருப்பம் கொண்டுள்ளாள் என நினைத்துக் கையைத் தொடுகின்றான். அவள் திகைக்கின்றாள். அவனது கன்னத்தில் அறைகின்றாள். அவன் நெற்றியில் இட்ட குங்குமத்தின் மேல் நெருப்பால் சுடுகின்றாள். இங்கு விதவை விதவையாகவே இருந்திருக்க வேண்டும். சாதாரண பெண்கள் போல் இருந்தால் இத்தகைய அனர்த்தங்கள் நிகழும் எனச் சொல்லப்படுகின்றது. இத்திரைப்படம் மிகவும் மோசமாக விதவை திருமணம் செய்தல் கூடாது என்பதை வலியுறுத்துகின்றது.

பெண்ணை அடிமையாகப் பார்க்கும் போக்கு இக்காலத் திரைப்படங்களிலும் தொடர்ந்து வந்த ஒன்றாகும். கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் போன்ற வாசகங்கள் இக்காலத் திரைப்படங்களிலும் மிக அதிகமாகப் பேணப்பட்டு வருகின்றன. **கணவனே கண்கண்ட தெய்வம், மணாளனே மங்கையின் பாக்கியம்** போன்ற தலைப்புக்கள் இக்காலத்தைய திரைப்படங்களில் இல்லாத போதும் கருத்து ரீதியாக இதனை ஏற்பதை அநேகமான எல்லாத் திரைப்படங்களிலும் காணக்கூடியதொன்று. ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே என்பதும் கூட இக்காலத்தின் திரைப்படங்களில் சொல்லப்படுகின்றன. பெண்கள் ஆண்களை மயக்குபவர்களாகவும், போதை ஊட்டுபவர்களாகவும் தமிழ்த் திரைப்படங்களில் சித்தரிக்கப்படுகின்றனர்.

விபச்சாரிகள் பற்றியும் சில திரைப்படங்கள் கூறுகின்றன. **அவளும் பெண்தானே** (1975) என்ற ஒரு திரைப்படம் வெளிவந்தது. இது ஒரு விபச்சாரி பற்றிய திரைப்படமாகும். அவள் விபச்சாரி என்று தெரிந்து கொண்டே அவளை மணம் செய்ய ஒருவன் முன் வருகின்றான். ஆனால் அவள் இறுதியில் இறந்து போகின்றாள். பொருளாதார நிலைமைகளால் விபச்சாரம் செய்ய வந்தவர்கள் திருமணம் செய்ய முடியாது என்பதை இத்திரைப்படம் வலியுறுத்துகின்றது. **ஆசை 60 நாள்** என்ற திரைப்படமும் இதே மாதிரியான கதைப் போக்கைக் கொண்டுள்ளது.

1977ம் ஆண்டில் பாலச்சந்தர் தயாரித்த திரைப்படம் **தப்புத் தாளங்களாகும்.** இதுவும் விபச்சாரியை பற்றிய கதை தான். விபச்சாரியை ஒருவன் திருமணம் செய்து கொள்ள வருகின்றான். அவன் மிகவும் நல்லவனாகவும் அதே நேரத்தில் முரடனாகவும் காட்டப்படுகின்றான். பல வித காரணங்களால் திருமணம் நடைபெறவில்லை. இருவரும் சிறையில் அடைக்கப்படுகின்றார்கள். இவர்களுக்குத் திருமணம் நடைபெறவில்லை என்பதுதான் இங்கு முக்கியமாகின்றது. இவர்களுக்குத் திருமணம் நடைபெற்றிருந்தால் தமிழ்ப் பண்பாடு என்னாவது? விபச்சாரிகள் பற்றி இன்னொர் பார்வையும் காணப்படுகின்றது. **மூடுபனி** என்னும் திரைப்படம் மனச்சிக்கலில் மூழ்கியிருக்கும் ஒரு கதாநாயகனைச் சித்தரிக்கின்றது. இங்கு அவனது மனோ வியாதிக்குக் காரணம், அவனது தகப்பன் தாய்க்குக் கொடுத்த இடைவிடாத் துன்பமாகும். தகப்பனிடம் படும் அடியும் உதையும் கண்டு மனம் பொறுக்காமல் சிறு வயதில் மனமுடைந்து போகிறான். தாய் இருதய நோயால் துடித்துக் கொண்டிருக்கும் போது தகப்பன் தாசி வீட்டில் சல்லாபம் செய்து கொண்டிருந்ததும் அந்தச் சின்னஞ் சிறு மனசுக்குக் கடைசி அடி. அன்று ஆட்டங் கண்ட அவனது மனோநிலை ஆவேசமான வெறியாக மாறுகின்றது. காணும் விபச்சாரிகள் யாவரையும் கொலை செய்து விடுகின்றான். விபச்சாரிகளே தனது தாயின் மரணத்திற்குக் காரணம் என்கின்றான். தன் தகப்பன் பெண்களுக்கு இழைத்த அநீதி இது என்பது அவனை வதைக்கவில்லை. காரணத்தைப் பாரபட்சமாக விளங்கி விட்டான். பெண் விபச்சாரி ஒருத்தி மட்டுமே காரணம். கணவனின் புத்தி எங்கே? பெண்ணுக்கு இழைக்கும் அநீதியை இனங் கண்டு விட்ட ஆசிரியர் கதையை எங்கேயோ குழப்பிவிடுகின்றார். பெண்ணின் ஒரு உருவம் பத்தினி என்றாள் மறு உருவம் விபச்சாரி தானா?

பெண்கள் இக்காலத் திரைப்படங்களில் சவால் விடுபவர்களாகவும், சவாலில் வெற்றி அடைபவர்களாகவும் சித்தரிப்பதனைக் காணக் கூடியதாகவுள்ளது. 1970ம் ஆண்டுக்கு முந்திய திரைப்படங்களான **''ரிவால்வார் ரீற்றா'', ''கன்பைட் காஞ்சனா''** போன்ற திரைப்படங்கள் இத்தகையனவே. இக்காலத்துத் திரைப்படங்கள் இத்தகைய போக்கை அதிகம் கொண்டுள்ளன. **ரெயில் கொள்ளை** என்னும் திரைப்படத்தில் பெண் ஒருத்தி சவால் விடுவதும், சண்டை பிடிப்பதும் காட்டப்படுகின்றது. **''லேடி ஜேம்ஸ் பொன்ட்''** என்னும் தமிழ்த் திரைப்படமும் இத்தகைய தன்மையைக் கொண்டன. ஆனால் இத்தகைய திரைப்படங்களும் ஆபாசமாக இருப்பது மறுக்க முடியாது. கவர்ச்சிக்காகத் தான் இத்தகைய திரைப்படங்கள் தயாரிக்கப்படுகின்றனவோ என்ற சந்தேகமும் உண்டு. விஜய லலிதா, ஜோதி லட்சுமி, சில்க் ஸமிதா, மாதவி போன்ற கவர்ச்சி நடிகைகளே இத்தகைய திரைப்படங்களில் நடிக்கின்றார்கள்.

1970க்குப் பின் பெண்கள் உரிமை பற்றிய கருத்துக்கள் கொண்ட திரைப்படங்கள் அதிகம் எழுந்தன எனலாம். தூய்மையாகப் பெண்கள் விடுதலை பற்றிச் சித்தரித்த திரைப்படம் ஒன்று தானும் இல்லை எனினும், ஓரளவுக்காயினும் சில திரைப்படங்கள் சீர்திருத்தப் போக்கிலேயே பெண் உரிமை பற்றி வலியுறுத்துகின்றன. பெண்கள் உரிமை கேட்டுப் பெறலாம் எனக் கூறப்படுகின்றது. சீர்திருத்தப் போக்கு புரட்சிகர மனப்பான்மையாக இல்லாமல் முழுமையான சுதந்திரத்தை வேண்டாமல் அரைகுறைத் தீர்வில் திருப்தி கொள்வதும் சீர்திருத்தப் போக்கில் சித்தரிக்கப்படுகின்றது. சமரசப் போக்கில் சித்தரிக்கும் திரைப்படங்களும் உண்டு. பெண்




சுசீலா ரவி

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





**சிங்களத்திலிருந்து சிறந்த ஐந்து சிறுகதைகளை தமிழில் மொழிபெயர்த்து 'வலை' என்ற சிறுகதைத் தொகுதியினை வெளியிட்டிருக்கிறார் மடுளுகிரிய விஜேரத்ன.**

**பொல்வினா வியக்னெ(த்)த (நெல்லல்ல பதர்), கெம்பிமக் சொயா (கானலைத் தேடி), அந்துர எய் அரம(ட்)ட (ஆலயத்துள் வரும் இருள்) ஆகிய சிறுகதைத் தொகுதிகளை எழுதியுள்ள மடுளுகிரிய விஜேரத்ன கே.டானியலின் 'கானல்' நாவலினையும், சுவாமி விபுலானந்தர் பற்றிய நூல் ஒன்றினையும் சிங்களத்தில் மொழி பெயர்த்திருக்கிறார்.**

**''வடக்கில் கடும் வரண்ட பிரதேசத்தில் பிறந்து வளர்ந்த நான் அந்த மண்ணிலே அறிவையும், ஆற்றலையும், அனுபவத்தையும் பெற்றுக் கொண்டவன். அங்கு வாழ்ந்த மக்களோடு மக்களாக ஒன்று கலந்து சுக துக்கங்களில் சிரித்திருக்கிறேன்; சிலிர்த்திருக்கிறேன்; அழுதும் இருக்கிறேன் அவர்களுக்காக என் எழுதுகோலைப் பிடிப்பதை ஒரு இலட்சிய வெறியாகக் கொண்டிருக்கிறேன்......... அதன் முக்கிய குறிக்கோளில் ஒன்றுதான் இந்தச் சிங்களச் சிறுகதைகளின் மொழி பெயர்ப்பு'' என்கிறார் மடுளுகிரிய விஜேரத்ன.**

**வலை என்ற இத்தொகுப்பிலுள்ள 'வண்டில்' என்ற கதையே இங்கு பிரகரமாகிறது. இது தவிர மீன் வலை - மடுளுகிரிய விஜேரத்ன, கறுப்பு சப்பாத்துக்கள் - ஜயதிலக கமல்லவீர, பிசாசின் இரவு - தயாசேன குணசிங்க (இக்கதை ஏற்கனவே சரிநிகரில் பிரசுரமாகியிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்) ஆகிய சிறுகதைகளும் இத்தொகுப்பில் உள்ளன.**



# வண்டில்

## சோமரத்ன பாலசூரிய

தமிழில்.. மடுளுகிரியே விஜேரத்ன

சுற்றிவர முள்ளுக்கம்பிகளாலும், மணல் மூடைகளாலும் பாதுகாப்புச் செய்யப்பட்ட பொலிஸ் நிலையத்திற்கு வண்டியை ஓட்டிக் கொண்டு வந்தவர் ஒரு பொலிஸ் சாரதியாகும். பொலிஸ் உடையை அணிந்து கொண்டு வண்டியை ஓட்டிக் கொண்டுவரும் அவரைக் கண்டவர்கள் எவரும் சிரிப்பை அடக்கிக் கொண்டு பயத்தினால் வேறுபுறம் திரும்பிக் கொண்டனர். துப்பாக்கியைத் தாங்கிக் கொண்டு காவலுக்கு நின்ற பொலிஸ் உத்தியோகஸ்தருக்கு 'குபீர்' என்று சிரிப்பு வந்துவிட்டது. பொலிஸ் சீருடை அணிந்தபடியாலேயே அவர் மௌனமாக தலையைக் குனிந்த வண்ணம் வண்டியை ஓட்டிக் கொண்டு சென்றார். அவர் மாட்டை அவிழ்த்து வண்டிச் சில்லில் கட்டிவிட்டு பொலிஸ் நிலையத்தை நோக்கி வரும்போது வண்டிக்காரனிடம் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தார். அந்த வண்டிக்காரன் தானா என்று உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அந்த சாரதி சற்று நேரம் வண்டிக்காரனையும் இன்னும் சொற்பநேரம் வண்டியையும் மாட்டையும் ஏறெடுத்துப் பார்த்து 'இவன்தானா' என்று நிச்சயப்படுத்திக் கொள்ள முடியாமலிருந்தார்.

''பெயர்''

''ரணசிங்க''

''வயது''

''நாற்பத்தினாலு''

''தொழில்''

''வண்டித்தொழில்''

''கல்யாணம் முடித்தவரா''

''இல்லை''

''வசிப்பிடம்''

''வண்டியில்''

''பிறந்தது எங்கே என்றுதான் நான் கேட்கிறேன்.''

''பிறந்தது திவுல்லேவ வசிப்பது வண்டியில்.''

''நீர் படித்திருக்கிறீரா?''

''ஆம்''

''எத்தனையாம் வகுப்பு''

''சிரேஸ்ட தராதரம் பாஸ்.''

பொலிஸ் உத்தியோகஸ்தன் சற்று ஓய்வெடுத்தான். சந்தேகப் பேர்வழிக்குத் தெரியாமலேயே உச்சிமுதல் உள்ளங்கால்வரை அடர்த்தியாகவும், கருப்பாகவும் வளர்ந்து சுருண்டிருந்த தலைமுடியையும், தாடியையும் இடைக்கிடை நரைத்திருந்த மயிரையும் வெற்றிலை சாப்பிட்டதனால் காவிபிடித்து தேய்ந்து போயிருந்த பற்களையும் பார்த்துக் கொண்டிருந்தான். உள்வாங்கியிருந்த கூர்மையான சிறிய கண்கள் தன்னுடைய பொலிஸ் உத்தியோக குறிப்பை நோக்கி படிந்திருந்ததை அவன் கண்டான்.

''நீர் அந்தக் காலத்தில் அவ்வளவுக்குப் படித்திருந்தும் ஏன் வேலைக்குப் போகவில்லை.''

''ஏன் நான்தான் வேலை செய்கிறேனே?''

''படிப்புக்கு ஏற்ற உத்தியோகத்தைப் பற்றித்தான் நான் கேட்கிறேன்?''

''அப்படியென்று ஒன்று இருக்கின்றதா?''

இப்படியான ஒரு பதிலை அவனிடமிருந்து எதிர்பார்த்த பொலிஸ் உத்தியோகஸ்தன் இரு விரல்களுக்கிடையே இருந்த பேனாக்கையோடேயே அவனுடைய கன்னத்தில் இரண்டு அறைகள் விட்டான். பொலிஸ் உத்தியோகஸ்தனின் அடிகளைப் பொறுமையுடன் வாங்கிக் கொண்ட வண்டிக்காரன் அது பற்றி எதுவுமே அலட்டிக்கொள்ளவில்லை. எந்தவிதமான உணர்ச்சிகளும் அவனிடமிருந்து வெளிப்படவில்லை. அவனின் உள்வாங்கிய விழிக்கோல்கள் உணர்ச்சியில்லாமல் பொலிஸ் உத்தியோகஸ்தனுடைய குறிப்பை நோக்கியே நிலைத்திருந்தது. தன்னுடைய கையிலிருந்து தவறிவிழுந்த போல்பொயின்ட் பேனாவை அவன் பொறுக்கித் தருவான் என்று பொலிஸ் உத்தியோகஸ்தன் நினைத்தான். கொஞ்ச நேரம் பார்த்துவிட்டு ஆவேசம் வந்தவனைப்போல் எழுந்து நின்ற பொலிஸ் உத்தியோகஸ்தன் இரண்டு கைகளாலும் வண்டிக்காரனின் தலைமயிரைப் பிடித்து பல தடவை ஆட்டி நிறுத்தி வைத்தான்.

''நல்லா புரிந்து கொள். கேட்பதற்கு மட்டும் பதில் சொல், சும்மா பண்டிதனாகக் கதைத்துவிட்டு படிப்பைக்காட்டிச் சாகாதே. நீ எங்கே இருக்கிறாய் என்று நல்லா நினைத்துக் கொள்.''

வண்டிக்காரன் அதொன்றும் கேளாதவன்போல் இருந்தான். அதேவேளை பொலிஸ் உத்தியோகஸதன் ஏதோ ஒரு காரணத்திற்காகப் போவதுபோல் நடந்து வீசப்பட்டிருந்த பேனாவை பொறுக்கிக் கொண்டு திரும்பவும் தன்னுடைய ஆசனத்தில் வந்து சரியாக அமர்ந்து கொண்டான்.

அடுத்த கேள்வி என்னவென்று அவன் சொற்ப நேரம் யோசித்தான். இத்தகைய கேள்விகள் கேட்டு பழக்கமில்லாத படியாலும் பல்வேறு சந்தேகப் பேர்வழிகளிடம் அடுக்கடுக்காகக் கேட்கும் கேள்விகளுக்கும், அவர்கள் கொடுக்கும் மறுமொழிகளுக்கும் எதிர்மாறாக இந்த வணடிக்காரனிடம் தான் கேட்கும் கேள்விகளும், அதற்கு அவன் கூறும் பதில்களும் வித்தியாசமாக இருப்பது அவனுக்கு சிறிது அதிர்ச்சியையும், அதேசமயம் கோப உணர்ச்சியையும் ஏற்படுத்தியிருந்தது. அவன் அடுத்த கேள்வியைக் கேட்பதற்கு வண்டிக்காரன் முகத்தைப் பார்த்தான். தலைமயிரை பிடித்திழுத்ததால் கலைந்து போன சுருண்ட, நீண்ட மயிர் பொம்மிப்போய் ஆறடி உயரமான அவனை இன்னும் உயரமானவனாக எடுத்துக்காட்டி நின்றது. அவனுடைய பரந்த தோல்களும், அங்கொன்றும் இங்கொன்றுமாக நரைத்து வளர்ந்திருந்த தாடியும் தன்னையே பார்த்திருந்த கூர்மையான கண்ணும் முழங்கால் வரை நீண்டிருந்த மெலிந்த நீண்ட கரங்களும் பொலிஸ் உத்தியோகஸ்தனின் மனதில் பீதியை உருவாக்கியது.

தன்னிடமிருந்து 'போல் பொயின்ட்' பேனாவை புத்தகத்தின் நடுவில் வைத்து புத்தகத்தை மூடிய பொலிஸ் உத்தியோகஸ்தன் அவனைப் பார்க்காமலே அப்பால் போனான். வண்டிக்காரன் நின்றபடியே நின்று கொண்டிருந்தான். பொலிஸ் கட்டிடத்தின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஜீப் வண்டியும், அதற்கும் கொஞ்சம் தள்ளியிருந்த வண்டியும் சில்லில் கட்டப்பட்டிருந்த மாடும் அந்த மாட்டின் வாயிலிருந்து தள்ளிக் கொண்டிருந்த நுரையும் அவன் கண்களுக்குப்பட்டன. கண நேரத்தில் அந்த உருவங்கள் கரைந்து போவதைப்போல் அவனுக்குத் தெரிந்தது. முண்டாசு கட்டிக் கொண்ட மனிதர்கள் வெகு வேகமான நடையில் பொலிஸ் நிலையத்தைப் பார்த்தும் பாராமலும் குனிந்தபடி முன்நோக்கி நடக்கின்றனர்.

என்னுடைய உத்தியோகம் எனக்குப் பொருத்தமானது மற்றவர்களுக்கு பொருத்தமில்லாததுபோல் படுகிறது. படிப்புக்கு ஏற்ற உத்தியோகம் யாராவது செய்கிறார்களா? ஆங்கில மொழியும் இலக்கியமும் உட்பட, நான் சிரேஷ்ட தராதரப் பத்திரத்தில் நன்றாக சித்தியடைந்துள்ளேன். தமிழ் முதலாளிகளிடம் நான் தமிழில் தான் பேசுவேன். என்னுடன் படித்த குணரத்ன அன்று ''பில்ம் பெயர்'' சஞ்சிகையில் வெளிவந்த நர்கிஸ் போன்ற அழகான நடிகைகளின் படங்களை வெட்டி ஒட்டிக் கொண்டிருந்தவன், இன்று அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றுகிறான். டிமைபேப்பரில் நாள் முழுவதும் தூயகணிதம் பயிற்சி செய்த நான் இன்று வண்டி ஓட்டுகிறேன். அவர்கள் அந்தந்த இடத்திற்கு எப்படி போனார்கள் என்றுதான் கேள்வி கேட்க வேண்டுமே தவிர என்னுடைய தொழில் பொருத்மானதல்ல என்றல்ல.

''ஆ................ இப்போது இரும். இருந்து நான் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லும்.''

பொலிஸ் உத்தியோகஸ்தனின் முரட்டுக்குரலும் அவனுடைய தோற்றமும் இப்போது தளர்ந்துவிட்டது போல் அவனுக்குத் தெரிந்தது. மேசை மீதிருந்த தொப்பியை அவன் அணிந்தது ஏனென்றால் வண்டிக்காரனுக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. அது அவனுடைய கடமை என்று அவன் நினைத்தான். வண்டிக்காரன் ஆசுவாசமாக மனதில் எந்தவித பயமுமில்லாமல் தன்னுடைய இரு கைகளையும் அவன் மேசை மீது வைத்துக் கொண்டு முன்னால் தலை சாய்ந்த வண்ணம் இருந்ததையும் கண்ட பொலிஸ் உத்தியோகஸ்தனுக்கு அந்த வண்டிக்காரன் தன்னையே கேள்வி கேட்கப் போகிறானா என்று மனதுக்குப் பட்டது. கைகளை மேசை மீதிருந்து எடுக்கும் படியும் கட்டளையிடும் மனோபாவம் அவனுக்கு ஏற்பட்டது. ஆனா, அவன் அப்படி செய்யவில்லை. கடைசியாகக் கேட்ட கேள்வி என்னவென்று அறிந்து கொள்வதற்கு மீண்டும் அவன் புத்தகத்தைப் புரட்டினான்.

''உன்னுடைய நெருங்கிய நண்பர்கள் யார்?''

''மாடும் நாயும்''

''அடப் பேயா நீ என்ன சொல்கிறாய்?''

''வண்டி இழுக்கும் மாடும். படங்கில் இருக்கும் நாயும்.''

பொலிஸ் உத்தியோகஸ்தன் எழுந்து நின்றான். ஆறு, ஏழு அடி நீளமான மேசையை வளைய எட்டி நடந்து பாதி சுவருக்குப் பின்னால் சுற்றிவரும் பொழுது வண்டிக்காரன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். வண்டிக்காரனின் புறங்கை இரண்டும் பெரிய குறடு இடுக்கில் அகப்பட்டது போல் அவனுக்குப்பட்டது. அத்துடன் அவன் பாதி சுவருக்கு மேல் இழுபட்டு மண்டபத்துக்குள் போனான். அவன் எவ்வளவு தூரம் இழுபட்டுப் போனான் என்றால் சுவர் காறை பெயர்ந்து சிதறிக் கிடந்தது. அத்தோடு வட்டத்தின் நாலில் மூன்று ஒரு சுழற்சி சுழன்று அவனது வலது கையால் ஒரு மனிதனால் தாங்கவே முடியாத பலத்த அடியொன்றை கன்னத்தில் ஓங்கிவிட்டான். வண்டிக்காரன் அதை எதிர்பார்த்தே இருந்தான். இடுப்பின் வலியைப் பொறுத்துக் கொண்ட அவன் பின்பக்கம் ஒரு பாகை குனிந்தபடி அவன் அறைந்த அறையை தவிர்த்துக் கொண்டான். பொலிஸ் உத்தியோகஸ்தனுக்கு அவன் வேகத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் இரு கால்களும் பின்னிக் கொண்டு முழங்கால் குத்திட்டபடி கையை ஊன்றிக் கொண்ட அவன், கைகள் இடுக்கின் வழியாக வண்டிக்காரனைப் பார்த்தான். வண்டிக்காரன் தலையைத் திருப்பியபடி பின்னால் பார்த்த வண்ணமே வலது கையால் இடுப்பைத் தடவிக் கொண்டிருந்தான்.

அத்துடன் வாயால் விசிலடித்துக் கொண்டு கைகளிரண்டையும் தடவியபடி, ஏதோ காரணத்தையொட்டி மண்டபத்தைப் பார்த்துவிட்டுப் போக வந்த இன்னொரு பொலிஸ்காரன் நடந்ததை மோப்பம் பிடித்தவனைப்போல் 'வேலையைக் கொடுக்க வா' என்று சொல்லிக் கொண்டு அவன் வண்டிக்காரனுடைய கையை முறுக்கிச் சுழற்றி வெகுதூரத்திற்குத் தள்ளிவிட்டான். அத்தோடு பழையநிலையில் மீண்டும் எழுந்து ஆயத்தமாக இருந்த பொலிஸ் உத்தியோகஸ்தன் அவனுடைய விலாப்புறத்தை நோக்கி எட்டிக் காலால் உதைத்தான். வண்டிக்காரன் பின்னால் உந்தப்பட்டுப்போக அடுத்த பொலிஸ் உத்தியோகஸ்தன் முன்குனிந்து கையைத் தட்டி குதித்து

www.tamilarangam.net



எழுந்து முகத்தில் அறை விட்டான். வெயிலில் காய்ந்தும் மழையில் நனைந்தும் போய்க் கறுத்துப் போய், பதமான ஓரளவு வற்றிப் போன அவனது கன்னங்கள் வெடிக்குமளவுக்கு வீங்கின. வண்டிக்காரன் தனது வலது கை நடுவிரலால் கன்னத்தை பட்டும் படாமலும் தடவிப் பார்க்கும் பொழுது அவன் அடிவயிற்றில் விழுந்த கால் உதையினால் ஒரு மரம் அடியற்று விழுவதுபோல் விழுந்தான்.

அவனுக்கு உணர்வு வந்து விழித்தபோது அவன் சிறைக்கூண்டுக்குள் இருந்தான். பொறுக்கமுடியாத அளவு சிறுநீர் கழிக்க வேண்டியம், விலா எலும்புகள் நொறுங்கிய போது ஏற்படும் வேதனையும் தண்ணீர் தாகமும் அவனுக்கு உண்டானது. ஏதோ ஒரு காரணத்தினால் கண்ணில் நீர் திரைகட்டிக்கொண்டது. அவன் மிகச் சிரமத்தோடு குனிந்து தன் இரு கண்களையும், நெற்றியையும் துடைத்துக் கொண்டான். இடைக்கிடையே புறப்படும், வரும் ஜீப் இரைச்சல்களும் சப்பாத்து ஓசைகளும் பின்னர் யாரோ ஒருவர் விசில் ஊதும் சத்தமும், அதன் பின்னர் அமைதியான நிலையும் ஏற்பட்டது.

மாடும், நாயும், வண்டியும் அவன் நினைவுக்கு வந்தது. அவன் மெதுவாக காலை ஊன்றி கூண்டிலிருக்கும் கம்பிகளைப்பிடித்தபடி அண்ணாந்து அரைச் சுவருக்கு மேலாக பொலிஸ் மேசைக்கு அப்பால் வீதியைப் பார்த்தான். மாடு காலைத்தூக்கிய வண்ணம் முன்னர் இருந்தபடியே எங்கோ பார்த்துக் கொண்டிருந்தது. வண்டியின் நுகத்தடி கீழே வைக்கப்பட்டிருந்ததனால் வண்டி மிகவும் ஏற்றத்தோடு இருந்தது என்பதை உணர்ந்து கொண்டான். நுகத்தடி உடைந்து போய் விட்டதோ என்று அவனுக்கு ஒரு யோசனை உண்டானது. ''போட்டிக்கோவிலிருந்த தூண் வண்டியை மறைத்தபடியால் வண்டி இரண்டாகிவிட்டது போன்ற தோற்றம் தருவதை கடைசியாக தீர்மானித்தான். இப்படித் தொடர்ந்து சில தினங்கள் கடந்து போனால் நுகத்தடியைக் கறையான் அரித்துவிடும். எந்த நேரத்திலாவது தண்ணீரும் கொடுக்கும்படி கூறவேண்டும். நாய் படங்கில் படுத்துக்கிடக்கும் என்று இறுதியாக யோசித்தான்.

ஆனாலும் மாலைப் பொழுதில் அவனை யாருமே விசாரணைக்கு உட்படுத்தவில்லை. அடிக்கடி ஜீப் வண்டியில் கொண்டு வருபவர்கள் வரவர கூடுதலாக இருந்தது. வந்து சரணடைந்தவர்களும் இருந்தார்கள். அவனிருந்த கூண்டுக்குள் இன்னும் இரண்டு பேரை உள்ளே போட்டார்கள். அவர்களை ஏறெடுத்துப் பார்க்காமலே சிறைக் கூண்டை மூடி விட்டுப் போனான்.

அந்திப்பொழுதில் அவனை ஓ.ஐ.சி.யின் அறைக்குள் அழைத்துச் சென்றார்கள். அவனுடன் இன்னும் ஒருவர் சிவில் உடையுடன் நின்றார். இரண்டு பேரும் அவனைப் பற்றித் தெரிந்த விபரங்களை ஆங்கிலத்தில் சுருக்கமாக்கிக்கொண்டார்கள்.

கேள்விகள் கேட்க ஆரம்பித்தனர். வண்டிக்காரன் மாட்டுக்கும், நாய்க்கும் சாப்பாடும், தண்ணீரும் கொடுக்க வேண்டும் என்று கூறிக் கொண்டான். ஒரு பொலிஸ் உத்தியோகஸ்தரை அழைத்து மிருகங்களுக்குச் சாப்பாடும், தண்ணீரும் கொடுக்க வேண்டுமென உத்தரவிட்டனர்.

''மாட்டுக்கும், நாய்க்கும் தின்னவும், குடிக்கவும் கொடுக்கும் நிலையல்லவா எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.'' அப்பால் போகும் பொலிஸ் உத்தியோகஸ்தன் சொல்வது காதில் விழுந்தாலும் அதைக் கணக்கில் எடுக்காமல் இருந்தார்கள்.

''நீர் அன்று பயங்கரவாதிகளுக்கு சாப்பாடு சமைத்துக் கொடுத்தீரா?''

''நான் சில பேருக்க சாப்பாடு சமைத்துக் கொடுத்தேன். அவர்கள் பயங்கரவாதிகளா இல்லையா என்று எனக்குத் தெரியாது.''

''ஏன் சமைத்துக் கொடுக்க நினைவு வந்தது?''

''நான் பின்னேரம் சமைக்க ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தேன். அவர்களுக்கும் சாப்பா்டு சமைத்துத்தர வேண்டும் என்று கேட்டார்கள். என்னிடம் இருந்த தட்டுமுட்டு சாமான்கள் எல்லாம் சிறியவை. அவர்கள் பெரிய தட்டுமுட்டு சாமான்களைக் கொண்டு வந்திருந்தார்கள். நான் சமைத்தேன் அவர்களும் ஒத்தாசை செய்தார்கள்.''

'' அவர்கள் யார் என்று முன்பே தெரிந்திருக்கவில்லையா?''

''இல்லை''

''முன்பு தெரியாதவர்களுக்கு சாப்பாடு சமைத்துக் கொடுக்கும் பழக்கம் உண்டா?''

''பசியால் இருப்பவர்கள் என்றால் மனிதர்களுக்க மட்டுமல்ல மிருகங்களுக்கும் என்னிடம் இருக்கும் அளவு சாப்பாடு கொடுப்பேன்.''

''அது உன்னுடைய வீடு இல்லைத்தானே?''

''எனக்கு வீடு இல்லை. ஏழு நாட்களும் ஏழு இடங்களில் கழிந்து போகும். பின்னேரம் ஒரு சந்தையில் சாமான்களை இறக்கிவிட்டு, மறுநாள் அந்த சந்தை முடிந்த பிறகு சாமான்களையெல்லாம் சேர்த்துக் கொண்டு மற்ற சந்தைக்குக் கொண்டு போவேன்.''

''சாப்பாடு சமைக்க உன்னை யார் தேடிக் கொண்டு வந்தது?''

'' அது எனக்குத் தெரியாது. நான் சனிக்கிழமை ஓடைப் பக்கம் போவேன். மாட்டை நன்றாகக்



குளிப்பாட்டுவேன். நாயையும் குளிப்பாட்டுவேன். அங்கு நல்ல நிழல். ஒரு வீட்டை விட சுகமாக இருக்கும் . அன்றுதான் நான் வண்டி சில்லுக்கு எண்ணெய் போடுவேன். என்னுடைய மாட்டின் கொம்புகளுக்கும், நெற்றிக்கும் வேப்பெண்ணை பூசுவேன். ஈக்கள் மொய்க்காமல் இருக்க. அப்போது எனக்கு நன்றாகப் பசி வரும் தனிமனிதனுக்கு சமைப்பது ஒரு சோம்பேறித் தனமான வேலை. அதுவும் கதைத்துக் கதைத்துச் சமைத்தால் சிரமம் தெரியாது.''

''யாரோடு பேசுவாய்''

''மாட்டோடும், நாயோடும்.''

''என்ன மொழியில்?''

''நேரத்திற்கு ஏற்றது போல வாய்க்கு எந்த மொழியிலும் பேசுவேன். எங்களைப் போல அவைகளுக்கு மொழி தேவையில்லை. அவைகளுக்குப் பேசும் முறையில் புரியும். குளிக்கச் செல்லும் போது நாய்க்குத் தெரியும். ஆனாலும் ஒரேயடியாகத் தாவிச் சென்று ஓடையில் குளிக்காது. அதற்கு குளிக்கச் சொல்லும் போது அது வேறுபுறமாக ஓடிச் செல்லும். பிறகு ஓடிப்போய் ஓடைக்குள் பாயும் மாடும் அப்படித்தான்.''

''ஓ சும்மா இருக்கும் போது புத்தகம் ஏதாவது வாசிப்பீர்தானே?''

''பிரயோசனம் இல்லை. ஒரு பிரயோசனமும் இல்லை. ஏதாவது பேப்பர் துண்டுகளைப் பொறுக்கிக் கொண்டால் வாசிப்பேன்.''

''அரசியல் கட்டுரைகள் இருந்தால்?''

''இல்லை. எழுத்து மறந்து போகமலிருக்க''

அவனைப் பார்க்கும் போது மடையனைப் போலத் தெரியவில்லை. அடையாள அணிவகுப்பு வைப்பது நல்லதென்று அவர்கள் ஆங்கிலத்தில் கதைத்துக் கொண்டார்கள்.

''நீர் எவ்வளவுவரை படித்திருக்கிறீர்?''

சிரேஷ்ட தராதரம் சித்தியடைந்தவன் என்றும் தான் ஆங்கில மொழிமூலம் படித்தவனென்றும், தமிழ் பேசுவதற்கு முடியும். ஆயினும், எழுதுவதற்கு எழுத்தெல்லாம் மறந்து போய்விட்டதென்றும் கவனமாக தெரிந்தெடுத்த வார்த்தைகளால் பழகும் மொழியில் ஆங்கிலத்தில் சொன்னான். சிறிது காலம் பேசாதபடியாலும் வெற்றிலை போட்ட நாக்குத் தடித்ததாலும் வாயில் வார்த்தை தட்டுத் தடுமாறி சிதறியது போல் அவனுக்குத் தெரிந்தது.

அதே வேளை ஒரு அமைதியும் உண்டானது. திகைத்தது போல அந்த உத்தியோகஸ்தர் இருவரும் ஒருவரை ஒருவர் பார்க்காமல் கதிரையில் மௌனமாக இருந்தனர்.

சிறிது நேரத்தின்பின் பெருமூச்சுவிட்ட சிவில் உடையிலிருந்த அதிகாரி அடையாள அணிவகுப்பு வைத்து முடித்து விடுவோமா என்று சிங்களத்தில் கேட்டார்.

பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் ஐந்தாறு இளைஞர்களை வரிசையாக நிற்பாட்டி வைத்தார். அவர்களுக்குள் தாடிக்காரர்கள், மீசை அரும்பாதவர்களும் இருந்தனர். ஆனாலும் இவர்களுக்கு இரண்டு பொதுத்தன்மை இருந்தன. அதில் ஒன்று புருவம், மூக்கு, உதடு வீங்கி இரத்தம் கசிந்து விகாரமாக இருந்தது. மற்றது ஒருவருக்கும் பாரிய உடம்பு இருக்கவில்லை.

'அன்று சாப்பாடு சாப்பிட்ட யாராவது இங்கு இருக்கிறார்களா?''

அவன் சற்றுநேரம் முகங்களை கவனித்துப்பார்த்தான் இருந்தாலும் சொல்ல வேண்டுமா என்ன? அடுத்து மற்றவர்களைப் பற்றி அக்கறையோடு பார்ப்பதும், அவர்களைக் கவனிப்பதும் அவனுக்கு ஒரு பழக்கமான விசயமல்ல. ஆரம்ப விசயங்களையும் முடிவான விசயங்களையும் கேட்பது இவனுடைய பழக்கமுமல்ல. அவ்னுக்கு எல்லோரும் ஒன்றுதான்.

''அப்படியென்றால் ஒருவரையும் தெரியாது? அவனை உள்ளே போடு.''

பொலிஸ் உத்தியோகஸ்தர் அவனை இழுத்துக் கொண்டு போய்ச் சிறைக் கூண்டுக்குள் தள்ளிவிட்டான். கூண்டின் ஒரு மூலையில் சாய்ந்து கொண்டிருந்த முகம் வீங்கி கருத்துப் போயிருந்த இருவரும் திடுக்கிட்டு எழும்புவதற்கு முயன்று மீண்டும் நித்திரையானார்கள். சிறுநீர்க்கடுப்பும், நெஞ்சும், விலாப்புற வேதனையும் எவ்வளவு தூரம் இருக்கிறதென்றால் மயங்கி விடுவோமோ என்று அவன் நினைத்தான். இரவில் அடிக்கடி கேட்ட புலம்பல் சத்தங்களும், வெடிச் சத்தங்களும் நித்திரைக்கு ஒரு தடையாக இருந்தன. ஓரிரு நாட்கள் கழிந்து போக தாகம் பசி, புலம்பல், தூசணங்கள் பழகி ஏற்கத்தக்கதாக இருந்தன.

ஆனாலும் தாங்க முடியாத துர்நாற்றம்தான். இதையெல்லாம் மறந்து நல்லதொன்றை நினைப்பதற்கு இருந்தால் எவ்வளவோ இதமாக இருக்கும்?

நான் இங்கு சிறுநீர் கழித்தாலும் என்னுடைய நாய் வெகுதூரம் போய்விட்டு என்னைப் பார்த்து தவறில்லை என்று நினைத்தன் பின்தான் சிறுநீர் கழிக்கும். என்னுடைய மாடு தண்ணீரில் சிறுநீர் கழிப்பதோ சாணம் போடுவதோ இல்லை. குளிப்பதற்கு முன்பு அது அந்த இரண்டு காரியங்களையும் செய்யும். கடந்த நாட்களிலே நான் ஒரு மனமுடனேயே வாழ்ந்தேன். எதைப் பற்றியும் தீவிரமாக யோசிப்பதற்கோ, தவறைப் பற்றி யோசிப்பதற்கோ முனைவதில்லை. ஒரு கிழமைக்கு ஒரு தடவை கடந்து போகும் வயல் வெளிகள் பாலங்கள், வடிகால்கள், சேற்றுக் கிடங்குகளில் கிடக்கும் எருமை மாடுகள், வயல் வெளியில் பறந்தோடும் கொக்குகள், தேக்கு மரத் தோட்டங்களில் சாம்பல் நிறமான மேகங்களை தழுவும் மலை, மழை, வெயில் என்னுடைய உலகமாகும். மாடும், நாயுமே என் நண்பர்களாகும். நான் அதிகமாக மாட்டோடுதான் கதைத்துள்ளேன். நான் அதற்கு பாட்டுகள் படிப்பேன்.

இந்த எண்ணங்களுக்குள் அவனுக்கு மாட்டின் நினைவுவந்து விட்டது. அதன் கொம்பிலிருக்கும் பித்தளைப் பூணை பளபளக்கத் தேய்க்க வேண்டும் என்றும், தேய்ந்து போன லாடத்தை அடிக்க வேண்டும் என்றும் யோசித்தான். லாடம் அடிப்பதற்கு




மாட்டைத் புரட்டிப் போட்டு வதையும் கொடுக்க வேண்டும். லாடம் அடிக்காவிட்டால் வழுக்கி கால்கள் உடைந்துவிடும். இந்த இரண்டு கிரியைகளிலிருந்தும் விடைபெறுவதற்கு எங்களுக்குள்ளே முடியாது. அடிமட்டம் வரை தேய்ந்து போவதை பார்த்துக் கொண்டிருப்பதை விடலாடம் அடிப்பதைவிட வேறொன்றும் செய்வதற்கில்லை.

அன்று பகல் ஒரு பொலிஸ் உத்தியோகஸ்தர் வந்து கூண்டுக்குள்ளிருந்து வெளியில் எடுத்தார்.

''ஏன்டா உன்னுடைய ஊரெது?''

ஒரு தடவை என்னுடைய வசிப்பிடத்தை தெரிந்து சொல்லப் போய் என் விலா எலும்பை உடைத்தார்கள். வசிப்பிடம் வண்டியில் என்றுப் பிறந்த இடம் திவுல்லேவ என்றும் புத்தகத்தில் பதியப்பட்டுள்ளது. இப்பொழுது வசிப்பிடம் எங்கே என்று மீண்டும் கேட்கிறார்கள். தேவையான விடயத்தைத் தெரிந்து கொள்வதற்கு யாரும் எவரும் எதையும் கேட்பார்கள். அதற்கு அப்பாற்பட்ட உண்மைகள் அவர்களுக்கு சந்தோசத்தைத் தரக் கூடியதல்ல.

''சொல்லுடா உன் ஊரை''

''திவுல்லேவ ஐயா. என்னுடைய மாடு?''.........

'' அட மாடு, மாட்டைப் பார்க்க உனக்கு நேரமிருக்கு எங்களுக்கு இல்லை. உனக்குத் தெரிந்த இரண்டு பேருடைய பெயர்களைச் சொல்லு''

''அண்ணே............ மிஸ்டர் குணசிங்க .........?''

''வேற யார், கிராமசேவகர்?''

''கிராம சேவகர் யாரென்று தெரியாது. பழைய விதானையாரைத் தெரியும்.''

ஜீப் வண்டியின் பின் புறத்தில் அவனைப் போட்டுக் கொண்டார்கள். அவனிடம் கேள்வி கேட்ட உத்தியோகஸ்தர் இரண்டு பேரும் முன்னால் இருந்தார்கள். அவன் பக்கத்தில் ஆயுதத்தோடு ஒரு பொலிஸ்காரன் இருந்தான். வண்டிக்காரனுடைய் வழிகாட்டலில் மரஞ செடிகள், காடுகள், பிளவுகள் கடந்து போய்க் கொண்டிருந்தன.

ஜீப் வண்டி அண்ணனுடைய வீட்டு முற்றத்தில் போய் நின்றது. அண்ணன் வெற்றிலையில் பாதியைச் சப்பிக் கொண்டு ஜீப்பை நோக்க முன்னால் வந்தான். அவன் எந்தவிதமான சலனமும் இல்லாமல் தம்பியைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''யாரிது?''

''தம்பி''

''இவருடைய தட்டு முட்டு சாமான்கள், புத்தகங்கள் இங்கே இருக்கின்றனவா?''

''ஆம்''

அண்ணன் அவனுடைய தட்டு முட்டு சாமான்கள் நிறைத்து வைத்திருந்த பெரிய ட்ரங்கு பெட்டி ஒன்றைக் தூக்கிக் கொண்டு வந்து வெளியில் வைத்தார். அதை அவனைக் கொண்டே திறக்க வைத்தார்கள். அதை திறக்கும் போது வண்டிக்காரன் மனதுக்கு அவனது இளமைப் பருவம் நினைவுக்கு வந்தது. பாடசாலையில் படிக்கும் போது அவன் தங்கும் விடுதிக்கு இதே பெட்டியை எடுத்துக் கொண்டு போனான். அன்று அதனிலிருந்து வந்த புதிய உடை, புத்தகங்கள், சவர்க்காரம், பௌடர் ஒன்று கலந்து வந்த வாசம் இருக்கிறதா என்பதை சுவாசிப்பதற்கு மூக்குத் துவாரத்தை பெரிதாக்கி உறிஞ்சினான்.

புத்தகங்கள் ஒவ்வொன்றையும் அவர்கள் சோதனை செய்தார்கள. சிவப்பு மொனிட்டர் புத்தகக் கட்டும், ஆங்கில, சிங்கள புத்தகக் கட்டும், தமிழ்ப் பாட்டுப் புத்தகங்களும் மேலே இருந்தன. பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒவ்வொன்றாகப் பரிசீலித்தார். அந்தப் புத்தகங்களில் இரண்டில் பின்புற அட்டையில் இரண்டு தாடி மீசைக்காரர்களின் புகைப் படத்தைக் கண்ட பொலிஸ் உத்தியோகஸ்தர் அதைக் கைப்பற்றிக் கொண்டு தன்னுடைய சட்டைகளாலேயே தூசியைத் துடைத்துக் கொண்டு மேலதிகாரி கைகளில் கொடுத்தான். அவை செக்ஸ்பியருடைய மெக்பத்தும், தாகூருடைய படமும் ஆகும்.

''நீர் அந்தக் காலத்தில் ஒரு நாடகக்காரன் போலும்.''

''அந்தக் காலத்தில் எங்களுடைய பாடப் புத்தகங்கள்தாம் அவை''

அதற்குக் கீழ் கையால் கட்டப்பட்ட டிமைப் புத்தகம் இருந்தது. அது, அவன் கணக்குகள் செய்வதற்குப் பாவித்ததாகும். அதற்குக் கீழே 'அரசபணி'யென்று அச்சிட்ட ஒரு பெரிய தபாலுறை இருந்தது. அதற்குள் அவனுடைய விளையாட்டு சான்றிதழ்களும், சிரேஷ்ட தராதரப்பத்திரமும் இருந்தன. அதைக் கவனமாக எடுத்துக் கொண்ட பொலிஸ் உத்தியோகஸ்தர் இரண்டு தரம் தூசிபோகத்தட்டி விட்டு ஓ.ஐ.சி.யிடம் கொடுத்தார். மண்ணிறமான முத்திரிகையைத் தவிர அனைத்தும் வெள்ளிப் பூச்சிகளால் அரிக்கப்பட்டிருந்தன.

''அக்காலத்திற்கு ஏற்றபடி அவனுக்கு நல்லதொரு உத்தியோகத்திற்கு போகும் வாய்ப்பிருந்தது'' ஓ.ஐ.சி மற்ற உத்தியோகஸ்தருக்கு இரகசியமாகக் கூறுவதைப் போல் மெல்லிய குரலில் ஆங்கிலத்தில் சொன்னார்.

''அதுதான் சேர்''

தங்களுக்கிடையே நடந்த பேச்சுவார்த்தைகளுக்கு மறுமொழி கொடுத்த கிராமத்தவருடைய பதிலுக்கு இரண்டு உத்தியோகஸ்தர்களும் ஆச்சரியப்பட்டார்கள்.

வெயிலில் காய்ந்து தேமல் பிடித்துப் போயிருந்த அவன் தோலும், வெற்றிலைய்யைச் சப்பி சிவந்து போயிருந்த உதடும், எண்ணெய் பூசி பளபளக்கும்

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கை தமிழ்த் தேசியவாதத்தின் ஆரம்பம் ஆறுமுக நாவலர் அல்ல

# ஜே. ஆர். மிராண்டோவே!

இலங்கைத் தமிழ்த் தேசியவாதத்தின் ஆரம்பம் ஆறுமுகநாவலரே எனக் குறிப்பிட்டு பரந்தாமன் ஒரு கருத்தாடலை ஆரம்பித்திருந்தார். இலங்கையில், தமிழ் தேசியத்தின் வரலாறை நாவலரின் யாழ் சைவ வேளாள மரபில் மையப்படுத்தி எழுதும் வரலாற்றியல் பார்வை தவறானது எனக் குறிப்பிட்டு ஜே.ஆர்.மிராண்டோவும், அவரது திராவிட மித்திரன் பத்திரிகையுமே இது தொடர்பாக எடுக்கப்பட்ட முதல் முயற்சி என்கிறார் டி.சிவராம்.

யாழ். உயர் சைவ வேளாள மரபினர் அல்லாத கிழக்கு மாகாண தமிழர், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் மேற்கொண்ட தமிழ்த் தேசிய மூல முயற்சிகளை நோக்கி இவ்வாய்வு தளமாற்றம் பெற வேண்டும் என தனது தொடரை முடிக்கிறார் அவர்.

யாழ். உயர் சைவ வேளாள மரபினர் அல்லாதோர் மேற்கொண்ட தமிழ்த் தேசிய மூல முயற்சிகள் தொடர்பாக ஆய்வாளர்களதும் வாசகர்களதும் எழுத்துக்களை எதிர்பார்கிறோம்.

ஆ-ர்

## டி. சிவராம்

ஜே.ஆர் மிராண்டோவும் அவர் வெளியிட்ட திராவிட மித்திரன் பத்திரிகையுமே 1900 - 16 கால பகுதியில் இலங்கையில் தமிழ் இன, மொழி எழுச்சியை மத, பிரதேச வேறுபாடுகட்கு அப்பால் ஏற்படுத்திட எடுக்கப்பட்ட முதல் முயற்சி என்பதே இக்கட்டுரைத் தொடரின் முடிவாகும். இம்முயற்சியின் பின்னணியில் ஒரு தமிழ்த் தேசியக் கருத்தியலை நோக்கிய தேடலும், அதன் அடிப்படையில் இன எழுச்சியை ஏற்படுத்திட வேண்டுமென்ற நாட்டமும் இருந்தன என்பது தெளிவு. திராவிட மித்திரன் ஆரம்பிக்கப்பட்ட அதே வருடம் தமிழகத்தில் எல் நடேசன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சென்னை திராவிட சங்கம் போன்ற அமைப்பு ரீதியான முயற்சிகளும் ஜே.ஆர் மிராண்டோ போன்றோரால் மேற்கொள்ளப்பட்டனவா என நம்மால் இன்று அறிய முடியவில்லை. இத்தமிழ்த்தேசிய முதல் முயற்சியாளர் பற்றி இது போன்ற தகவல்கள் ஏதாவது திரட்டலாம் எனும் நோக்கில் மேற்குக்கரையோரம் - குறிப்பாக நீர்கொழும்பு - காணப்படும் மிராண்டோ குடும்பங்களைப் பற்றி பல விடயங்கள் அறிந்தவரெனக் கருதப்படும் கத்தோலிக்க மதகுரு ஒருவரை நான் சந்திக்க முற்பட்டேன். அவரைப் பற்றி என்னிடம் கூறியவர் நீர்கொழும்பைச் சேர்ந்த ஒரு ஆய்வாளர். மதகுருவை நான் சந்திக்க வேண்டியிருந்ததன் நோக்கத்தினை அறிந்ததும் என் நண்பர் கூறினார் - ''மதகுருவும் அவர் சார்ந்த மிறாண்டோ குடும்பமும் மிகுந்த சிங்கள உணர்வுடையோர், நீ அவர்களுடைய மூதாதையர் ஒருவரைத் தமிழ்த் தேசியத்துடன் தொடர்புபடுத்தி விசாரிக்க முற்படாதே.. சில வேளை அவர்கள் ஆத்திரப்பட்டாலும் படலாம் என்று .

இது போன்ற சில ஆய்வுத் தடங்கல்களால் இலங்கையில் தமிழ் தேசியக் கருத்தியற் பரம்பலின் முதல் முயற்சியினைப் பற்றிய மேலதிகத் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

திராவிட மித்திரன் பத்திரிகையில் மலையகத்தவர்களும், முஸ்லிம்களும் மேற்குக்கரையோரத் தமிழரும் தமிழ்மொழி வளர்ச்சி (30.11.1910) தமிழரின் வர்த்தக மேன்மை (26.10.1910) போன்ற பல விடயங்கள் பற்றி எழுதிய கடிதங்கள் வெளியாகின. இது யாழ். இந்து வேளாளரால் அக்காலத்தில் வெளியிடப்பட்ட தமிழ்ப் பத்திரிகைகளினின்றும் முற்றிலும் ஒரு மாறுபட்ட நிலையையே காட்டுகிறது. நாம் இத்தொடரின் முன்னைய கட்டுரைகளிற் குறிப்பிட்ட யாழ். இந்து வேளாளரால் வெளியிடப்பட்ட பத்திரிகைகளில் காணப்பட்ட தமிழுணர்வு யாழ் குடாநாடே சுதேசம் எனும் புவியியல் வரையறையையும், யாழ் உயர் வேளாளர் எனும் வர்க்க வரையறையையும், இந்துமதம் எனும் மத வரையறையையும் கொண்டிருந்தது.

தமிழபிமானத்தை பற்றிப் பேசிய சில யாழ்ப் பத்திரிகைகளில் மலையகத்தவரோ, கிழக்கு மாகாணத்தவரோ, முஸ்லிம்களோ கொழும்பிற்கு அப்பால் புத்தளம் வரை அன்று பெரும்பான்மையாக இருந்த தமிழரோ, அநேகமாக ஒன்றும் (வாசகர் கடிதங்கள், குறிப்புக்கள், கட்டுரைகள்) எழுதவில்லை என்பது நோக்கற்பாலது. கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் இருந்த உயர் சைவ வேளாளர் குழாத்திற்கே உரிய ஒரு விடயமாகத் தமிழுணர்வு காட்டப்பட்டதே இதன் காரணம் என்பதில் ஐயமில்லை. இலங்கைச் சட்ட நிரூபண அவையில் (Legislative council) உயர் சைவ வேளாளர் ஒருவரே பதவி வகிக்க வேண்டும் எனவும் அப்பதவி யாழ் கிறிஸ்தவரான டாக்டர் ஜோன் றொக்கூட் (Dr. John Rockwood மானிப்பாய்) என்பவருக்கு மீண்டும் கொடுக்கப்படுவதை விட யாழ் தமிழ்ச் சங்கம் மற்றும் சைவ பரிபாலன சபை ஆகியவற்றின் தலைவரான கனகசபை அவர்கட்கே கொடுக்கப்பட வேண்டும் எனவும் 1903 இலும் தொடர்ந்து வந்த வருடங்களிலும் யாழ் உயர் சைவர் கூவி வரலாயினர். இதனடிப்டையில் அவர்களது பத்திரிகைகளும் (திராவிட கோகிலா, இந்து சாதனம், விவேகானந்தன் ) யாழ்ப்பாண சைவர் ஒருவரே சட்ட நிரூபண சபைக்குச் சென்றிடல் வேண்டுமென வாதிட்டன. அவை யாழ் சைவர் எனக் குறிப்பிட்டது உயர் வேளாளரான கனகசபை அவர்களையே. இவ்வாதங்களில், இலங்கையிற் தமிழரின் மையம் யாழ் குடாநாடே என்ற தொனி மிகத் தெளிவாகவே வெளிப்படலாயிற்று. டாக்டர் றொக்கூட்டின் இடத்தை நிரப்ப முயன்ற இன்னொருவரான அசேரப்பா என்பார், ஒரு கிறிஸ்தவர் எனவும் யாழ்ப்பாணத்தில் திருமணம் முடித்தமை மட்டுமே அவருக்குக் குடாநாட்டுடனான தொடர்பு எனவும், ஆகவே அவரை விட கனகசபையே தமிழரை பிரதிநிதித்துவப்படுத்தச் சிறந்தவர் எனவும் இப்பத்திரிகைகள் கூறின. இக்கூற்றுக்களில் யாழ் உயர் சைவ வேளாளர் = தமிழர் எனும் கருத்து மிகத் தெளிவாகவே வெளிப்படுத்துகிறது. நாவலர் மரபு, யாழ் சைவ பரிபாலன சபை, இந்து சாதனம், திராவிட கோகிலா, யாழ் தமிழ்ச் சங்கம் என்பன எங்ஙனம் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவையாக உயர் சைவ வேளாள நலன்களைப் பிரதி பலித்தன என்பதை ஏலவே கண்டோம். எனவேதான் இவை சட்ட நிரூபண சபை விவகாரத்தைப் பற்றிப் பேசிய போது யாழ் உயர் சைவ வேளாளர் = தமிழர் என்ற தொனியிலேயே பேசிடலாயின என்க. இத்தொனியே யாழில் அக்காலகட்டத்தில் வெளிப்பட்ட தமிழுணர்வின் அடித்தளமாகும்.

இவ்வரசியற் பின்னணியுடன் யாழில் முன்னெடுக்கப்பட்ட தமிழுணர்வு கிழக்குத் தமிழர்களை அந்நியப்படுத்தியதில் வியப்பில்லை. திருமலையிலும், மட்டக்களப்பிலுமிருந்த தமிழர் அசேரப்பாவே தமிழர் பிரதிநிதியாக வேண்டுமென விரும்பினர்.

யாழ் உயர் சைவ வேளாள நலன்களின் கைப்பிடியில் தமிழ் உணர்வு என்பது ஒரு பிரிவினைச் சக்தியாக (Divisive force) இருந்ததே ஒழிய ஓர் ஒருங்கிணைப்புச் சக்தியாக (Unifiying force) இருக்கவில்லை. இதுவே, திருமலை மட்டக்களப்புத் தமிழர் அசேரப்பாவுக்குச் சார்பாகவும், சைவத் தமிழுணர்வின் ஸ்தாபன வடிவங்களாக அன்றிருந்த யாழ் தமிழ்ச்சங்கம் திராவிட கோகிலா ஆகியவற்றின் விருப்பிற்குரிய பிரமுகரான கனகசபைக்கு எதிராகவும் செயல்பட்டதற்குக் காரணம் எனத் திட்ட்வட்டமாகக் கூறலாம்.

அரசியற் தேவை ஏற்படும் போது தமிழ் தேசிய உணர்விற்கு உரிமை கோரி, ஏனையோரின் தமிழபிமான முயற்சிகளை மறைத்து, அல்லது புறக்கணித்து அல்லது மட்டந்தட்டி செயல்படும் போக்கினையே யாழ் உயர் சைவ வேளாள குழாத்திடை அக்காலகட்டத்திற் காணக்கூடியதாக உள்ளது. ( அது இன்றும் தொடர்கிறது)

உதாரணமாக 'பாலச்சந்திரன்' 03.12.1910 இதழில் திராவிட மித்திரன் ஆசிரியருக்கு யாழ் பற்றி ஏதும் தெரியாது எனக் கிண்டலாகவும் கடுமையாகவும் சாடி ஒரு கடிதம் வெளியாயிற்று. அத்துடன் நாம் முன்னர் குறிப்பிட்ட முத்துத் தம்பிப்பிள்ளையின் 'தமிழர் சீனரா' என்ற கட்டுரையும் திராவிட மித்திரனில் வெளிவந்து கொண்டிருந்த திராவிடக் கோட்பாட்டின் அடிப்படையிலான கருத்துக்களை மறுதலிக்கும் நோக்குடனேயே எழுதப்பட்டது போல்தெரிகிறது.

இக்கட்டுரைத் தொடரில் நான் இதுகாறும் எழுதியவற்றின் அடிப்படையில் தமிழ்த்தேசியம் பற்றி பின்வரும் கருத்துக்களை முன்வைக்கிறேன்.


1. இலங்கையில் தமிழ் தேசியம் என ஒன்றைப் பற்றிப் பேசுவது சாத்தியமே ஒழிய இலங்கைத் தமிழ்த் தேசியம் எனப் பேசுவது தவறு. ஏனெனில் 19ம் நூற்றாண்டில் இருந்து தமிழுணர்வும் அதை அடித்தளமாகக் கொண்ட தமிழ்த் தேசியக் கருத்தியலும் இலங்கைக்கும், தமிழகத்திற்கும் பொதுவான ஒரு கருத்தியற் தளத்திலிருந்து உருவாகின்றன. ஜே.ஆர். மிராண்டோவிலிருந்து காசிஆனந்தன் வரை இதுவே தமிழ்த் தேசியத்தின் பண்பென வெள்ளிடைமலைபோல் காணலாம். இதைக்காணவியலாது மயங்குபவர்கள் வடகிழக்கு தமிழரிடையே வெளிப்பட்டதும், வெளிப்படுவதும் வெறுமனே ஓர் தற்காப்புத் தேசியந்தான் எனத் தவறாக வாதிடுவர்.

2. இலங்கையில் தமிழ்த் தேசியத்தின் வரலாறை நாவலரின் யாழ் சைவ வேளாள மரபில் மையப்படுத்தி எழுதும் வரலாற்றியல் பார்வையே இலங்கையில் தமிழ்த் தேசியத்தின் குழறுபடிகளுக்கு முக்கிய காரணம். யாழ் உயர் சைவ வேளாளர் அல்லாதோர் (கிழக்கினர், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள்) மேற்கொண்ட தமிழ்த் தேசிய மூல முயற்சிகளை நோக்கியும் அவர்களிடம் தமிழபிமானம் வேர்கொண்டு படர்ந்த பாங்கினை நோக்கியும் இலங்கையில் தமிழ்த் தேசிய வரலாறு தளமாற்றம் பெற்றிடவேண்டும்.

வெறும் வாதங்களில் மட்டும் ஈடுபடாமல் வரலாறை இன்னும் நுணுகி ஆராயட்டும் தேசியம் பற்றிப் பேசிட எம்மத்தியில் முன்னிற்பவர்.

பிழை திருத்தம்; திராவிட கோகிலா எம்.நமசிவாயம் என்பவரால் வெளியிடப்பட்டது.)

## இரண்டாவது வருகைக்காக



இரண்டாவது பிறப்புக்காய்
இப்போதே காத்துக் கிடக்கும் இயேசுக்களே...
மானிடம் ஓரேயொருமுறைதான் உயிர்க்கும்.

இதயங்களில் ஓவியம் தீட்டுவதற்காய்
உடல்கள் கொத்திப் பிளக்கப்பட்டது
என் தலை முறையிலிருந்து
இன்றுவரை தொடர்வதை அறிவேன்.

ஆயினும், ஆயினும்

ஓவியங்களில் உயிர்க்களை வேண்டுமெனில்
மானிடரே அது ஆகுக!
அல்லவெனில்...
ஆண்டவருக்கேன் ஓவர் டைம்?!

கிறிஸ்தவத்தை நிரூபிக்க...
இயேசு சிலுவையில் அறையப்பட்டது.
பிளாஸ்ரிக் சேஷரி மூலம்
மூன்றாம் நாள் வேறு மானிடன்
கதவுகளைத் திறந்து எழுந்தபோது
பரிதாபகமாக இருந்தது.
நல்ல நாடகம்!

"உண்மையான மானிடம்" என்பது
இந்தயுகத்தின் கடைசிக்கணத்திலே
தற்கொலை செய்து கொண்டது.

நசிவுகளிலும், நரகத்திலும் வாழும்
உழுத்துப்போன மனிதர்களுக்காய்
இரண்டாம் பிறப்புக்காக
இப்போதே காத்துக்கிடக்கும் இயேசுக்களே...
வீண் முயற்சி, வேசத்தை களைக.

— கவிதாஞ்சன் —

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## வண்டில்...

சாடையான வழுக்கைத் தலையும் உடைய வீட்டுக்காரன், எந்தவிதமான உணர்ச்சியும் இல்லாமலேயே பார்த்துக் கொண்டிருந்தான். ஆனாலும் அவனுடைய நாக்கு, கன்னத்துக்குள் சுழன்று சுழன்று அங்கு ஒரு மூலைக்குள் மிஞ்சியிருந்த பாக்குத் துண்டுகளைத் தேடி அவனுக்கு கட்டுப்படாமலே செயல்பட்டுக் கொண்டிருந்தன.

''நீர் என்ன செய்கிறீர்?''

''கமம் செய்கிறேன்.''

வண்டிக்காரனை ஜீப் வண்டிக்குள் திரும்பவும் ஏற்றிக் கொண்டார்கள். அண்ணனும் தம்பியும் எந்த விதமான பேச்சுவார்த்தைகளையும் பரிமாறிக் கொள்ளவில்லை.

புறப்பட்டுப் போகும் ஜீப் வண்டியை வெகு நேரம் பார்த்துக் கொண்டிருந்த அண்ணன் ''அவன் குற்றம் இழைப்பவனல்ல'' என்று சொல்லிக் கொண்டு வீட்டுக்குள் போனான்.

மறுநாள் காலை ஆயுதபாணிகள் பலர் புறப்பட்டுப் போனார்கள். தனியார் வாகனங்களை எடுத்துக் கொண்டு சந்தேகப் பேர்வழிகளை வேறிடங்களுக்குச் கொண்டு சென்றார்கள். பகற்பொழுதாகும்பொழுது வேறு சிலர் வந்து சரணடைந்தார்கள். அவர்களுக்கு ஆளுக்கொரு உதை கொடுத்து 'லாக்கப்' பில் போட்டு விட்டார்கள்.

மாலைவரையும் ஒருவருக்குமே ஒரு துளி தண்ணீரும் கிடைக்கவில்லை. சாரம் அணிந்திருந்த சுயேச்சை உத்தியோகஸ்தர்கள் வந்ததுடன், அங்கிருந்த பாழடைந்த அமைதி கலைந்துபோனது. அவர்கள் கட்டைச் சுவர் மீதிருந்து சிகரட் புகைத்துக் கொண்டு வம்பளந்து கொண்டிருந்தார்கள். அதற்கிடையே வந்த பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் ''முட்டாளை இன்றைக்கு விடுவிக்கச் சொன்னார்கள். இன்னும் கொஞ்ச நேரத்தில் இதையும் மறந்து விடுவோம்'' என்று சொல்லிக் கொண்டு கூட்டின் கதவைத் திறந்தான்.

''இப்போ நீ எங்கேயும் தொலைந்து போ''

வண்டிக்காரன் மெதுவாக எழுந்து குந்திக் கொண்டான். முழங்கால் இரண்டில் கையை வைத்துக் கொண்டு எழும்பி நின்ற அவன், தெருவை ஏறெடுத்து சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். வண்டி இருந்த இடத்திலேயே சாய்ந்து போயிருந்தது.

''ஐயா மாடு''

''உன்னைவிட பெரிய மாடு எங்கே ஓய்'' இப்போதாவது உயிரைக் காப்பாற்றிக் கொண்டு போ, இன்னும் எங்களை வதைக்காமல் ஒரு மணித்தியாலத்தில் ஊரடங்கு சட்டம் வந்துவிடும். இல்லாவிட்டால் நீ சாகத்தான் போகிறாய்.''

சுயேச்சை உத்தியோகஸ்தர்கள் பல வகையில் கேலி செய்து கொண்டும், கதைகள் பேசிக் கொண்டும் சிகரட் புகைத்துக் கொண்டிருந்தார்கள். அவனுக்கு அதிலொன்றிலும் முன்னும், பின்னும் விளங்காமலும் கணக்கிலும் எடுக்கவில்லை. அவன் மாட்டைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தான். பொலிஸ் நிலையத்தின் பின்புறத்தில் மாடு புல்லைத் தின்று கொண்டு இடைக்கிடையே தலையைத்தூக்கித் தன்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் என்ற சிந்தனை அவனுக்கு உண்டானது. அத்தோடு, கடந்த சில நாட்களாக நொய்நது போயிருக்கும் என்ற கவலையும், ஆனாலும் இன்று திரும்பவும் பழைய நிலைக்கு வரலாம் என்ற எண்ணமும் தோன்றியது. வேதனைகள் அனைத்தையும் அடக்கிக் கொண்டு அவனுக்கு மகிழ்ச்சி ததும்பியது.

''நீ போகப் போறியா?'' அல்லது மீண்டும் சிறைக்குள் போறியா?''

''நான் போக மாடு வேண்டும்''

''ஏன் உன்னைப் போன்ற மாட்டுக்கு வண்டியை இழுக்க முடியாதா?''

''என்னுடைய மாடு எனக்குத் தேவையென்றுதான் சொல்கிறேன். ''

''நீ உன் மாட்டைத் தேடுகின்றாய். மனிதனுக்கே இந்த நிலை ஏற்படும் போது மாட்டுக்கு என்ன நிலை ஏற்படுமோ ஓய்.''

சுயேச்சை உத்தியோகஸ்தர்கள் கைகொட்டி சிரிக்கத் தொடங்கினர். அவனுக்கு அதைக் கேட்பதோ அல்லது தெரிந்து கொள்வதோ அவசியமில்லை. வீங்கி கறுத்துப் போயிருந்த விழிகள் மேலும் சிறுத்துப் போனதாய்த் தோன்றியது. காலை எட்டி வைத்து பிராணியை வளைத்துக் கொள்வது போல், பொலிஸ் உத்தியோகஸ்தரை நோக்கி நெருங்கினான். பொலிஸ்காரன் அவனைப் பார்த்தபடியே பின்னுக்குப் பின்னுக்குச் சென்று மேசை மீது வைத்திருந்த இயந்திரத் துப்பாக்கிப் பக்கம் பின் வாங்கினான். வண்டிக்காரனுடைய வலதுகை மாயமாக நீண்டு பொலிஸ் உத்தியோகஸ்தனை இழுத்தது போல்பட்டது. பொலிஸ்காரனுடைய புறங் கையைப் பிடித்து சுழற்றி விடவே கட்டைச் சுவரின் கீழ் பொலிஸ்காரன் விழுந்த சாய்ந்தான். கட்டையான இயந்திரத் துப்பாக்கி வண்டிக்காரனுடைய கைக்குக் பழக்கமில்லாமல் இருந்தாலும், அதனுடைய வடிவம் அவனுக்குப்பிடித்துவிட்டது. அவன் ஒரு 'கெடட்' வீரனாக இருக்கும் பொழுது மண் குவியலில் பதிந்திருந்த சின்னத்தை விட வேறு எந்த விதமான பிராணிகளுக்கும், குறி வைக்கவில்லை என்பது அவனுக்கு நினைவுக்கு வந்துவிட்டது.

## யுத்தத்தை...

நிறுத்தத்தை மனப்பூர்வமாக தாம் கடைப்பிடிக்கவிரும்புவதால், இத்தகைய ஒப்பந்த மீறல்களுக்கு இடமில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். யுத்த மீறல்களில் ஈடுபடும் இயக்க உறுப்பினர்கள் கடுமையாக தண்டிக்கப்படுவார்கள் என்றும், ஜனாதிபதி போர் நிறுத்தத்தை அறிவித்ததும் ஜனவரி 7ம் திகதியன்று தலைவர் பிரபாகரன் யுத்த மீறல்களில் ஈடுபடாதிருக்குமாறு தமது உறுப்பினர்கட்கு கடுமையான உத்தரவு பிறப்பித்திருப்பதாலும் யுத்த மீறல்கள் ஏற்படாது என்றும் அவர் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தை தொடர்பான கேள்வியொன்றிற்கு பதிலளிக்கையில் அவர் தெரிவித்ததாவது: நாம் அரசியல் பேச்சுவார்த்தையில் இப்போதைக்கு ஈடுபடுவதாக இல்லை. எமது அடிப்படை உரிமைகளை வழங்க அரசு முன்வர வேண்டும் என்பதே எமது இப்போதைய எதிர்பார்ப்பாகும். இதுவே எமது பிரதான பிரச்சினை. எமது உரிமைகள் மறுக்கப்பட்டதாலேயே நாம் ஆயுதங்களை தூக்க நிர்ப்பந்திக்கப்பட்டோம். எனவே அரசாங்கம் எமது நிலைமையை புரிந்து கொள்ள வேண்டும் என நினைக்கிறோம். நாம் எத்தகைய பேச்சுவார்த்தையிலும் கலந்து கொள்ளப் போவதில்லை. இதை நாம் அரசாங்கத்திற்கு தெரியப்படுத்திவிட்டோம். எமது உரிமைகள் மறுக்கப்பட்டதால்; நாம் பதவி உயர்வுகள் அற்றவர்கள் ஆனோம். உயர்கல்விக்கு எமக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டது. சிங்களவர்கள் பலவந்தமாக பதவியா, அம்பாறை, மணலாறு போன்ற எமது பிரதேசங்களில் குடியேற்றப்பட்டார்கள். எனவே இத்தகைய விடயங்கள் பேசப்பட்டு அவை கணக்கிலெடுக்கப்படாவிட்டால் நாம் அரசாங்கத்துடன் எத்தகைய அரசியல் பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபடமாட்டோம்.''

## தேசியக்...

உண்டு என்பது குறிப்பிடவேண்டிய ஒன்று.

முக்கியமாக இன்று ஆட்சியிலிருக்கும் இதே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அன்றைய ஆட்சியின் போது கொண்டுவரப்பட்ட அரசியல் அமைப்பிலேயே (1972 முதலாம் குடியரசு அரசியலமைப்பு) முதன் முறை பௌத்த மதம் அரசமதமாக ஆக்கப்பட்டது. அதே கட்சியின் தலைமையில் இன்று ஆட்சியமைத்திருக்கும் பொ.ஐ.மு. அதனை நீக்கி விட்டு மதசார்பற்ற அரசாக பிரகடனப்படுத்த வேண்டியது ஒரு தார்மீகப் பொறுப்பாகும். அரசாங்கத்திற்கு உண்மையாகவே இன ஐக்கியத்தில் அக்கறை இருந்தால் இதை செய்யும் என்று எதிர்பார்க்கலாம்!

## தமிழ்த் தேசியவாதம்...

ளர்கள் ஆதரிப்பது தேசிய இனங்களின் அல்லது தேசங்களின் மொழி, கலாசார தனித்துவங்களைப் பாதுகாப்பதும் சமூக பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்துவதுமாகும்.

இதற்கெல்லாம் மேலான இலட்சிய நோக்கு இனங்களுக்கிடையே சமத்துவமின்மை இல்லாதொழிக்கப்பட்டு, சந்தேகங்கள் தீர்க்கப்பட்டு எல்லோரும் மானிடர்கள் என்ற நிலையை உறுதிப்படுத்துவதே.

இந்த உயர்நோக்கு நிலைகளையெல்லாம் துவம்சம் செய்யும் விதத்தில் தமிழ்த்தேசியவாதத்தின் பிற்போக்கான கூறுகள் தமிழ்த்தேசியவாதத்தில்
காணப்படவில்லை?

தமிழ்த்தேசியவாதத்தில் சமுதாயத்திற்கான குணாதிசயங்கள் அதிகரித்திருக்கையில் அதையும் சேர்த்து தமிழ்த்தேசியவாதத்தை புனிதப்படுத்தவிளைந்தால் தான் வரலாற்றில் பாரதூரமான தவறிளைத்தவர்கள் ஆகிவிடுவோம்.

மிகப்பழைய கேள்விதான். எனினும் அது இப்போதும் பொருந்தும். ஒரு ஒடுக்கப்படும் தேசிய இனத்திலுள்ள முற்போக்காளர்களின் கடமை என்ன? (தற்போதைய சூழ்நிலையில் இக்கேள்விக்கு ஒரு மேலதிக முக்கியத்துவம் உண்டு. ஏனெனில் சிங்களவர்கள் தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என்று விரும்புகின்றார்கள்) இதனைச் சரிநிகர் செய்கிறதா? இதுவரை இல்லை என்பதே கருத்து.

## மருந்தாகப்...

பதை என்னால் ஏற்க முடியாது. சரிநிகர் ஆசிரிய பீடம் இதனைச் ''சில தவறுகள்'' என்கின்றது. ஆனால் எனது கருத்தில் இதை இப்போதைக்கு அடையாளம் காணுதல் சரியல்ல என்பதே நிலைப்பாடாகிறது. தமிழ்த் தேசிய இனம் முஸ்லீம்களின் தனித்தேசியம் என்பதை ஏற்கனவே நிராகரித்துவிட்டது என்ற முடிவுக்கு வருவதற்கு இப்போது என்ன அவசரம்?

பொஸ்னியாவில் இடம் பெறுவது சேபியரின் Offensive நடவடிக்கை. ஆபிரிக்க நாடுகளில் வெள்ளையரின் Offensive நடவடிக்கைகள் நேற்றுவரையிருந்தன. ஆனால் இலங்கையிலும் பாலஸ்தீனத்திலும் நடைபெறுவது அடக்கப்பட்ட தேசியங்களின் defensive நடவடிக்கை. பாலஸ்தீனக் கவிதைகளை மொழிபெயர்த்த நுஃமான் மேலுள்ளவற்றைச் சமகால வரலாறு என ஒரேயளவு கோலால் அளக்கமுற்படுவது ஆச்சரியமாக இருக்கிறது.

சிங்கள மக்கள் முதன் முறையாகப் பேரினவாதத்தை ஓரங்கட்டி விட்டார்கள் எனக்கூறும் நுஃமான், அப்படி அவர்கள் செய்யும்படி நெருக்கியது தமிழ்த்தேசியவாதத்தின் 'மோசமான' பதிலடி என்பதையும் ஏற்றுக் கொள்வாரா? அப்படியில்லையேல் சிங்கள மக்கள் பேரினவாதத்தை 40ஆண்டுகளுக்கு முன்பல்லவா ஓரங்கட்டியிருக்கவேண்டும். சிங்களத் தேசியவாதம் அடக்கும் இனத்தினுடையது. தமிழ்த் தேசியவாதம் அடக்கப்படும் இனத்தினுடையது. முதலாவது Offensive இரண்டாவது Defensive. இரண்டையும் ஒன்றாகப் போட்டுக் குழப்புவது விமோசனம் தராது. இரண்டுமே விரும்பத்தகாததுதான். ஆனால் தாக்கப்பட்டால் திருப்பித் தாக்கலாம் என்பது சாதாரண இயக்கவிதி. இல்லையேல் பாலஸ்தீனியருக்கும் பொஸ்னியருக்கும் ஏனைய அடக்கப்படும் தேசியங்களுக்கும் நுஃமான் கூறும் மார்க்கமென்ன? கைகளைக் கட்டிக் கொண்டு கரைந்து போகச் சொல்கிறாரா?

இனத்தேசியவாதத்தில் நிச்சயம் இனச் சங்காரமும் இருக்கும் என்பதை நுஃமான் நோக்கும்தளம் மாறுபட்டதாகிறது. நோர்வேயும் சுவீடனும் பிரிந்தபோது சங்காரம் நிகழவில்லை. மேற்கு - கிழககு ஜேர்மனிகள் இனத்தேசியத்தால் இணைந்த போது சங்காரம் எதுவும் நிகழவில்லை. தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை மறுக்கப்படும் போதுதான் உதிரஞ் சிந்தப்படுகிறது. ஆனால் இது ஜீவமரணப் போராட்டம் என்பதால் வேறுவழியும் இல்லை என்றே கூறவேண்டும்.

தேசியவாதம் என்பது எப்போதும் மேட்டுக்குடியினால் முன்வைக்கப்படுகின்றது என்பதையும் இதனாலேயே இதனை லெனின் வெறுத்தார் ஏன்பதையும் ஏற்கும் அதே வேளை அடக்கும் இனத்தின் தேசியவாதத்துக்கும் அடக்கப்படும் இனத்தின் தேசியவாதத்துக்கும் இடையில் வேறுபாடு செய்வது அவசியம் என்று லெனின் வலியுறுத்தியதை ஆதாரத்தோடு நுஃமானுக்கு சமர்ப்பிக்க என்னால் முடியும். ஆனால் சரிநிகர் இதற்கு வேறு களம் ஏற்படுத்தித் தர வேண்டும்.

## பெண்ணிலைவாத...

விடுதலை என்பதை பெயரளவில் விளக்காமல் அதே நேரம் கருத்து ரீதியாக ஏற்று பின் அதனை சமரசப் போக்கில் கைவிடுவதைக் காணலாம். **சிறை** எனும் திரைப்படத்தில் பிராமணக் குடும்பப் பெண் ஒருத்தியை அவ்வூரில் உள்ள ஒருவன் கற்பழித்து விடுகின்றான். இதனை அறிந்ததும் அவள் கணவன் அவளை விட்டு ஓடி விடுகின்றான். அப்பிராமணப் பெண் கற்பழித்தவனின் வீடு சென்று அவனை மனோ ரீதியாகப் பழிவாங்குவதாகச் சபதம் செய்தாள். அவன் கொஞ்சம் கொஞ்சமாகத் திருந்துகிறான். அவன் சுகயீனம் உற்றிருக்கும் போது அவள் மனைவி ஸ்தானத்தில் இருந்து பணிவிடை செய்கின்றாள். அவன் இறந்த போது அவனைத் தன் புருஷனாகக் கருதி தன் தாலியைக் கழட்டுகின்றாள். ஓடிப் போன பிராமணக் கணவன் வந்த போது அவனை நிராகரிக்கின்றாள். இதுவே **சிறை** என்னும் திரைப்படத்தின் கதையாகும். இங்கே பல முற்போக்கு அம்சங்கள் இருப்பினும் கூட முடிவில் சமரசப் போக்கிலேயே படம் அமைந்து விடுகின்றது. பெண் விடுதலை பற்றிய பிரச்சினைகள் திரிபுபடுத்தப்பட்டு காணப்படும் திரைப்படங்களும் உண்டு. புதுமை இயக்குனர் எனக் கூறப்படும் கே.பாலச்சந்தரின் **அக்கினி சாட்சி** என்னும் திரைப்படக் கதாநாயகி பெண் உரிமை பற்றி வலியுறுத்தி வந்த போதும் முடிவில் அவளுக்கு கிஸ்ரீறியா எனக் கூறப்படுகின்றது. கிஸ்ரீறியா எனும் நோயினால் தான் பெண் விடுதலை பற்றிப் பேசினாள் எனக் கூறப்படுகின்றது. இது திரிபுபடுத்தப்பட்ட கருத்தாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 3வது ஈழப்போர்?

## செயலணி 2இன் தலைமையகம் கிளிநொச்சியில்!

# படையினர் முஸ்தீபு!!



அண்மையில் இலங்கை இராணுவத்தின் கட்டளைத்துறை அமைப்பில் (Command structure) ஒரு முக்கிய மாற்றம் செய்யப்பட்டது. இரண்டாம் ஈழப்போரின் பின் துரிதமாக ஆனால் சீரற்ற விதமாக வளர்ச்சியடைந்த இலங்கை இராணுவத்தை உயர் போரிடும் திறனும், இறுக்கமான கட்டளைத்துறை அமைப்பும் கொண்ட ஒரு படையாக மாற்ற தற்போதைய இராணுவத்தளபதி ஜெரி சில்வாவினால் மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சியின் இரண்டாவது அதிமுக்கிய கட்டமென இம்மாற்றத்தைக்குறிப்பிடலாம்.

காலாட்படைகளின் போரிடுதிறனை பெருக்கும் நோக்குடன் ஏற்கெனவே பயிற்சி முறைகளிலும், அமைப்பு முறைகளிலும் தளபதி ஜெரி சில்வாவினால் செய்யப்பட்ட மாற்றங்கள் தெரிந்ததே.

இக்கட்டளைத்துறை அமைப்பு மாற்றமானது காலாட்படையில் ஏற்பட்டுள்ள பாரிய ஆட் பல அதிகரிப்பையும் ஏற்படவுள்ள போரிடு திறன் வளர்ச்சியையும், உச்சப் பயன்பாடு தரக்கூடியவையாக்கும் நோக்கில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

94 வரை இலங்கைக் காலாட்படையில் ஏற்பட்ட பாரிய, திடீர் அதிகரிப்பு ஏற்படுத்திய போக்குவரத்து, நிர்வாக, வளம், மற்றும் வழங்கல் (logistics) தொடர்பான தேவைகளை சுமூகமாகவும் சீராகவும் எதிர்கொள்ளக்கூடிய அமைப்பு இலங்கை இராணுவத்தின் கட்டளைத்துறைக்கு இருக்கவில்லை. இதனால் பல நெருக்கடிகளும் சிக்கல்களும் தோன்றின. நடைமுறையில் இருந்த கட்டளைத்துறையின் அமைப்பு பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கக் கூடிய முறையிலேயே தொழிற்பட்டு வந்தது.

உதாரணமாக, இலங்கை இராணுவம் முழுவதிற்குமான வளம், போக்குவரத்து, வழங்கல், பின்னணி நிர்வாகம் போன்றவற்றைக் கையாளும் கட்டளைப் பிரிவிற்கு பொறுப்பானவர் (Dirtector of Logistics) பிரிகேடியர் தரத்தில் உள்ள இராணுவ அதிகாரி. எனினும் இலங்க இராணுவத்தின் காலாட்படை பிரதான அணிகள் (Divisions) மூன்றிற்கும் மேற்குறிப்பிட்ட கட்டளைத்துறைப்பிரிவிற்குப் பொறுப்பாக உள்ளவர்களும் (Directors of logistics in Divisions 1 (தெற்கு), 2 - (கிழக்கு), 3 - (மேற்கு) பிரிகேடியர் தரத்தில் உள்ளவர்களே. இதனால் இது காலவரை ஒழுங்கமைக்கப்பட்டதும் படிமுறையில் செயற்படுத்தக் கூடியதாகவும் வழங்கற்துறையும் (logistics) கட்டளைத்திறன் அமையவில்லை. ஏனெனில் மேலுள்ளவரும் பிரிகேடியர் கீழுள்ளவரும் பிரிகேடியர்.

போராடும் எந்த ஒரு இராணுவத்திற்கும் வழங்கற்துறையானது உச்சச் செயல்படுநிலையில் அமைந்திருக்கவேண்டும் என்பது நியதி. இதனாலேயே எதிரியின் வழங்கற்துறையை நாசமாக்குவது என்பது ஒரு மிக முக்கியமான தாக்குதற் தந்திரோபாயமாகக் கொள்ளப்படுகிறது. இரண்டாம் ஈழப்போரில் இலங்கை இராணுவம் சந்தித்த பல பின்னடைவுகட்கு வழங்கற் கட்டளைத்துறையின் அமைப்புப் புலவீனங்களும் முக்கிய காரணமாகும்.

இராணுவ நலன்புரி அமைப்பும் காலாட்படைப் பெருக்கத்தால் நெருக்கடி தோன்றிய இன்னொரு கட்டளைத்துறையாகும். இலங்கை இராணுவம் முழுவதிற்குமான நலன் புரித்துறைப் பொறுப்பாளர் (Director of welfare) பிரிகேடியர் தரத்தில் உள்ளவர். துணைப் பொறுப்பாளரும் பிரிகேடியரே. படையணி (Division) நலன்புரிப் பொறுப்பாளர்களும் பிரிகேடியரிகளே. இது ஒரு கவலைக்கிடமான, காலாட்படையின் போரிடுதிறனை மறைமுகமாகப் பாதிக்கக் கூடிய ஒரு படிமுறையற்ற கட்டளைத் துறை அமைப்பாகும்.

இப்பிரச்சினைகளைச் சீர் செய்வதில் இலங்கை இராணுவத்திற்கு இதுகாலவரை முடியாமலிருந்தமைக்கு முக்கிய காரணங்களாக இருந்தவை எனப் பின்வருவனவற்றைக்கூறலாம்.



1) இதுவரை மேஜர் ஜெனரல்கள் ஐவருக்கான பதவிகளே இலங்கை இராணுவத்தில் வரையறுக்கப்பட்டிருந்தது. ஒரு மேஜர் ஜெனரல் தலைமைப் படை அலுவலர் (chief of staff); ஒருவர் தொண்டர் படைப் பிரிவுத்தளபதி (General officer Commanding); ஏனைய மூன்று மேஜர் ஜெனரல்களும் படையணி 1 (தெற்கு) படையணி, 2 (வடக்கு) படையணி, 3 (கிழக்கு) ஆகியவற்றின் தளபதிகளாகவும் ஐந்து மேஜர் ஜெனரல் பதவிகளே இதுவரை இருந்தன. இதன் காரணமாக வழங்கற்துறை, நலன்புரித் துறை, படைக்கலத்துறை (ordnance) மற்றும் பொது அலுவலர் இயக்குனர் (Director Gen. Staff) ஆகியவற்றை கட்டளையிட மேஜர் ஜெனரல்கள் இல்லாமல் இருந்தது.



2) மேஜர் ஜெனரல்கள் களத்தில் நிற்கும் படையணிகளில் இருந்தே தெரிவு செய்யப்பட வேண்டும் என்பது இலங்கை இராணுவத்தில் இதுகாலவரையிலான நியதி. இதனால் நலன்புரி, வழங்கல், படைக்கலத்துறைகளிலிருந்து மேஜர் ஜெனரல்களை நியமிக்கமுடியவில்லை.

**டி.சி.**

3) 15 ஆயிரம் வீரர் வரை ஒரு மேஜர் ஜெனரலின் கீழ் இருக்கமுடியுமெனில் மட்டுமே அப்பதவி உருவாக்கப்படலாம் எனும் நியதி.

இம் மூன்று முட்டுக்கட்டைகள் காரணமாகவும் மேஜர் ஜெனரல்களாகப் பதவி உயர்வு பெற்றிடக் கூடிய தகுதியுடைய பிரிகேடியர்கள் மிகச் சொற்பமானவர்களே இருந்ததாலும் இராணுவத்தின் கட்டளைத்துறை அமைப்பை அதன் காலாட்படையின் அளவிற்கேற்றபடி சீரமைப்பதற்கு முடியாமல் இருந்தது. இதனால் கட்டளைத்துறை மற்றும் கட்டளைத்துறைச் செயற்பாட்டுச் சிக்கல்கள் (problems in command process and structure) தொடர்ந்த வண்ணம் இருந்தன. இவை இராணுவத்தின் போரிடுதிறனையும் பாதிக்கலாயின. இந்நிலையை மாற்றி இலங்கை இராணுவத்தின் கட்டளைத்துறை அமைப்பை பிரிட்டிஷ், இந்திய இராணுவங்களின் தரத்திற்கு உயர்த்திட தளபதி ஜெரி சில்வாவும் அவரைச் சார்ந்த அதிகாரிகளும் எடுத்த முயற்சி அண்மையில் பூர்த்தியாயிற்று. இம் மாற்றத்தின் பிரகாரம் தற்போது 14 மேஜர் ஜெனரல்கள் இலங்கை இராணுவத்தில் உளர். அதாவது ஏலவே இருந்த ஐவருடன் மேலதிகமாக 9 பிரிகேடியர்கள் பதவி உயர்த்தப்பட்டு மேஜர் ஜெனரல்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர். மேலதிக 9 மேஜர் ஜெனரல்களில் நம்முனி அஜுட்டன்ட் ஜெனரலாகவும் (Adjutant General), வழங்கற்துறைப்பிரதம தளபதியாக (Quarter Master General) E.H. சமரதுங்காவும், படைக்கலத்துறைப்பிரதம தளபதியாக (Master General Ordnance) T. சிவசண்முகமும், (இவர் யாழ். பரி. யோவான் பாடசாலைப்பழைய மாணவர்) பொது அலுவலர் இயக்குனராக (Director Gen. Staff) பட்றிக் ப்ர்னாந்துவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இத்துடன் வடக்கிற்குப் பொறுப்பாக உள்ள படையணி 2 (Division 2) இன் கீழ் 4 செயலணிகள் (Task Force 1, 2, 3, 4) உருவாக்கப்பட்டு அந்நான்கிற்கும் தளபதிகளாக 4 மேஜர் ஜெனரல்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்நான்கில் செயலணி 2 இன் தளபதி மேஜர் ஜெனரல் கெமுனு குலதுங்க. இவர் பூநகரிக்கு அடிவிழுந்த போது அங்கு பிரிகேடியராக இருந்தவர். இதில் முக்கிய விடயம் என்னவெனில் செயலணி 2 இன் தலைமையகம் கிளிநொச்சி என்பதே. மீண்டும் ஈழப்போர் தொடங்கினால் செயலணி 2 கிளிநொச்சியில் தன் தலைமையகத்தை அமைத்துக் கொள்ளும் என்பது இதன் அர்த்தம். இப்படையணி ஒரு மேஜர் ஜெனரலின் கீழ் நிர்வாக, மற்றும் வழங்கற் கட்டளைத்துறை சார் செம்மையுடன் இயங்கும் என்பதே புதிய அமைப்பு முறையின் நோக்கம்.

இதனிடையில் தளபதி ஜெரி சில்வாவின் மீது அதிருப்தி கொண்ட அதிகாரிகள் சிலர் ஊடாக இக்கட்டளைத்துறை அமைப்பு மாற்றங்களும் கண்டனத்துக்குள்ளாகியிருக்கிறது. இது முன்னாள் தளபதி வைத்தியரட்னா, கிழக்குத் தளபதியாக இருந்த லக்கி அல்கம ஆகியோரினாலும் அவர்களது சகபாடிகளாலும் மேற்கொள்ளப்படுகிறது என்று கருத இடமுண்டு. கண்டனத்திற்கு ஜெரியின் சார்பில் பதிலிறுக்கப்பட்டுள்ளது.

இராணுவக் கண்ணோட்டத்தில் ஜெரி கூறுவதன் ஒருபக்கத்தில் நியாயம் இருப்பினும் சில சிக்கல்களும் இல்லாமல் இல்லை.

ஏனெனில் மேஜர் ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ள சிலர் ஜெரிசில்வா 93இன் பிற்பகுதியில் பிரதம படைத்துறைச் செயலராக இருந்த போது, இராணுவ உயர் அதிகாரிகள் தொடர்பாக அரசிற்குச் சமர்ப்பித்த அறிக்கையில் கண்டிக்கப்பட்டவர்களாவர். அவர்களில் கெமுனு குலதுங்க, நம்முனி போன்றோர் பூநகரி முகாம் வீழ்ச்சியைப் பற்றிய விசாரணையில் குற்றங் காணப்பட்டவர்கள். அதன் காரணமாக அவர்களுக்கு இனிப்பதவி உயர்வு ஏதும் வழங்கக்கூடாது என்றும் இராணுவ விசாரணை மன்றம் (court of inquiry) பரிந்துரைத்திருந்தது. ஆனால் அளவிற் பெருத்துவிட்ட இலங்கைராணுவத்தை தரத்தில் உயர்த்த வேண்டுமாயின் அதன் கட்டளைத்துறை அமைப்பு ஏற்ற முறையில் மாற்றப்படுவதும் அவசியம் என்பது ஜெரி தரப்பு நியாயம். அரசும் அதை ஏற்றுக் கொண்டுள்ளமை தெளிவு. அத்துடன் கட்டளைத்துறை அமைப்பு மாற்றத்திற்கு இன்னொரு வலுவான காரணமும் முன் வைக்கப்படுகிறது. அது வருமாறு:

புதிய கட்டளைத்துறை அமைப்பில் மேலதிகமாக 9 மேஜர் ஜெனரல் பதவிகள் உருவாக்கப்பட்டமையாலேயே இராணுவத்தில் இன்று மிகத் திறமை வாய்ந்த போர்க்கள அதிகாரிகள் எனக்கருதப்படும் பிரிகேடியர்களான அசோக ஜயவர்த்தன, லால் வீரசூரிய, சதிஸ் ஜயசுந்தர ஆகியோருடைய படை நடத்தும் திறமைகளைத் தொடர்ந்து பயன்படுத்தக் கூடியதாக உள்ளது எனக் கூறப்படுகிறது. இது உண்மையே. ஏனெனில் பிரிகேடியர்கள் 4 வருடம் மட்டுமே அப்பதவியில் பணியாற்றலாம். அக்கால முடிவில் பதவி உயர்வு கிடைக்காவிடில் இராணுவத்திலிருந்து அவர்கள் நீங்குவர். 5 மேஜர் ஜெனரல்களுக்கே முன்னர் இடமிருந்தமையால் பல அனுபவமிக்க பிரிகேடியர்களால் 4 வருட முடிவுடன் இராணுவத்திலிருந்து கடந்த வருடங்களில் விலகியுள்ளனர். இது தற்போது தவிர்க்கப்படும்.

இலங்கை இராணுவம் புதிய அரசின் கீழ் அளவுப் பெருக்கத்துக்கு அப்பால் தர உயர்ச்சியில் மிக ஊக்கமாக ஈடுபடுகிறது. இத்தரஉயர்ச்சிக்கு உகந்த செம்மையான சூழலைப் புதிய அரசு உருவாக்கி வருகிறது.

அது எவ்வாறு என்பது இன்னொரு தனிக்கதை!

சரிநிகர் (இரு வாரங்களுக்கொருமுறை) இதழ்.இல.18/2 அலோசாலை கொழும்பு 03 ... இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்